# பித்தன் கே.எம்.எம்.ஷா

## சிறுகதைகள்

கலாநிதி ஏ.எப்.எம்.அஷ்ரஃப்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பித்தன் கே.எம்.எம்.ஷா

# சிறுகதைகள்

கலாநிதி ஏ. எப். எம். அஷ்ரஃப்
மொழித்துறை
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

Excellent Publication
2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பித்தன் கே.எம்.எம். ஷா – சிறுகதைகள் ஏ.எப்.எம். அஷ்ரஃப்

*Pitthan K.M.M. Zaah - Sirukathaikal / Editor- A.F.M. Ashraff / First edition - August 2020/* Published by *- Excellent Publication /Cover & Layout - Nawas Shawfi / printed by - Excellent Print - Sainthamaruthu , 077 6401296 / Copy rights - AFM. Ashraff / Pages - 156 /Price - 450/= afmashraff@seu.ac.lk / 077 3081120*

ISBN 978-955-3492-10-4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொகுப்புரை

மனிதாபிமானத்தையும் மனிதநேயத்தையும் கருத்திற் கொண்டு, மானிட மேம்பாட்டுக்காகத் தடைகளைத் தகர்த்துப் போராட முனைபவனும் மானிட நலனுக்காய்த் தன்னை அர்ப்பணிக்கத் துணிபவனுமே உண்மையான கலைஞன். பொதுவாக மானிட சமூகத்தின் நலனுக்காய் இயங்கும் கலைஞனிடம் இனம், நிறம், சாதி, மதம், மொழி, பிரதேசம் போன்ற புறநோக்குகளைக் காண்பதரிது. தான் வாழும் சமூகத்தையே உயிர்நாடியாகக் கொண்டு கலைஞன் உயிர்வாழ்கிறான். ஆனால் துரதிஷ்டவசமாக இன்றைய கலைஞன், குறுகிய இன, சாதி, மத, பிரதேசவாத சகதிக்குள் சிக்குண்டு தவிப் பவனாகத் தனது படைப்புக்களை பிரசவிக்கின்றான். அதற்கு ஒத்திசைவதைப் போல சமகால உலக ஒழுங்கும் அமைந்து காணப்படுகின்றமை கவலைக்குரியது. இவ்விடத்திற்தான் சென்ற தலைமுறையோடு நிகழ்ந்த 'கலைஞரின் மரணம்' கவனிப்புக்குரியதாகிறது. பித்தன் கே.எம்.எம். ஷா மனிதாபி மானத்தையும் மனிதநேயத்தையும் கருத்திற் கொண்டு, மானிட மேம்பாட்டுக்கான தடைகளைத் தகர்க்கப் போராடியவர். மானிட நலனுக்காய்த் தன்னை அர்ப்பணித்துத் துணிந்து செயற்பட்ட உண்மையான கலைஞன்.

ஈழத்தில் குறுகிய இனவாதச்சூழல் தோற்றம் பெற்றிராத காலத்தில், தம்மையொரு ஆற்றல்சார் கலைஞராக இலக்கிய உலகில் நிலை நிறுத்திக் கொண்டவர், பித்தன் கே.எம்.எம். ஷா. 1950களில் ஒரு கலைஞனுக்குரிய மிடுக்கோடு, தாம்சார்ந்த சமூகத்தின் நலனைக் கருத்திற்கொண்டு மிகத்தீவிரமாக எழுதியவர், அவர். தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் என்ற சமகால குறுகிய இனவாதச் சிந்தனையை இம்மியளவும் எண்ணாது மட்டக்களப்புச் சமூகத்தை மனதிருத்தி, அச்சமூகத்தின் அங்கத்தினராக வாழ்ந்தோரையே அவர் தமது படைப்புகளிற் பாத்திரமாக நடமாடவிட்டார். பெயரளவில் ஹாஜியார் உமரு லெப்பை, காதர், சுபைதா, ரஷீத் - சமீமா, றகுமத்து, தெய்வநாயகம், வதனி, முருகப்பன், ராசம், நளினி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லம்மாள் முதலான பாத்திரங்கள் ஊடாகத் தாம் வாழ்ந்த சமூகத்தின் முரண்களையும் முனைப்புகளையும் முன்னிலைப் படுத்தினார்.

பித்தன் ஷா, இருபதாம் நூற்றாண்டின் பின்னரைப்பகுதியில் கிழக்கிலங்கைத் தமிழ்ச்சிறுகதைப் போக்கொன்றின் பிரதி நிதியாகத் தம்மைத் தகவமைத்துக் கொண்டவர். ஈழத்தில் முஸ்லிம் பெண் மறுமலர்ச்சி குறித்த விழிப்புணர்வினைப் பேசு வதில் தடம்பதித்தவர். சமகாலத்தில் வடக்கே நவீனகவிதைத் துறையிற் தடம்பதித்த மஹாகவி து. உருத்திரமூர்த்தியின் பாடு பொருளைத் தமது சிறுகதைகளில் பேசுபொருளாக்கியவர். அவர் ஆழமான மனிதாபிமானத்தை வலியுறுத்தியவர். போலி ஒழுகலாறுகள்-மூடநம்பிக்கைகள் முதலானவற்றை இல்லா தொழிக்க முனைந்தவர். வாழ்வின் மீதான பற்றினையும் வாழ வேண்டுமென்ற முனைப்பினையும் தத்துவார்த்தமாக உணர்த் தியவர். இவை வெவ்வேறு நிலைகளில் நின்றும் குறிப்பாக மாற்று உரையாடல்களை முன்வைப்பதனூடாக வெளிப்படுத் தப்பட்டுள்ளன.

புலமைத்துவ மரபுநிலை நின்று, சிறுகதைக் கலையாக்கநெறி குறித்து நோக்குவோருக்கும் நல்லுதாரணங்களாகப் பித்தனின் கதைகள் விளங்குகின்றன. கதைக்கரு, கதைநிகழ்களச் சித்திரிப்பு, பாத்திரவார்ப்பு, கதைநகர்த்தும் உத்தி, நடை, மொழிவழக்கு முதலானவை குறித்து விளக்க முற்படுபவருக்கு அல்லது விளங்க முற்படுபவருக்குப் பித்தன் கதைகள் சிறந்த பயன் அளிப்பவை.

புனைகதை குறித்த விழிப்புணர்வும் படைப்பாக்க விளைவும் அருகிவரும் நிலையில் இக்கால இளந்தலைமுறையினரை மனதிற் கொண்டும் பித்தன் ஷாவை முன்னிறுத்தி, ஈழத்துத் தமிழ்ச் சிறுகதையின் சமூகச் செல்வாக்கை நிலைநிறுத்தும் நோக்கிலும் இலக்கியத்தின் சமூகப் பணியை சமூக நல்லிணக்க வழி உணர்த்தும் சாக்கிலுமே இத்தொகுப்பு முயற்சி மேற் கொள்ளப்பட்டுள்ளது. குறுகிய நோக்குநிலை நின்று தமிழ் இலக்கியத்தைக் கூறுபோட முனைவோருக்குச் சவாலாகப் பித்தன் கதைகள் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்கல்வி நிறுவனங்களில், குறிப்பாகத் தென்கிழக்கு, கிழக்குப் பல்கலைக்கழகங்களில் தமிழை ஒரு பாடமாகக் கற்கும் மாண வர்களுக்கு உசாத்துணையாகவும் ஈழத்துப் புனைகதை இலக்கியங்கள் குறித்துக் கற்க முனைவோருக்கு உதவுமுகமாகவும் இந்நூலின் அவசியம் உணரப்பட்டதனாலேயே இம் முயற்சி மேற் கொள்ளப் பட்டது. ஏலவே, மல்லிகைப் பந்தல் வெளியீடாக 'பித்தன் கதைகள்' என்றவொரு தொகுதி வெளிவந்திருந்தாலும் பிரதிகள் கிடைக்கப் பெறுவற்கில்லை. அத்தொகுதியில் தொகுக்கப் பட்டுள்ள பதினாறு கதைகளோடு புதிதாக பித்தனது 'இருளும் ஒளியும்' எனும் சிறுகதையும் சேர்க்கப்பட்டுள்ளது.

இறுதியாக, 'இலக்கியம் மக்கள் நலனுக்கானதே' எனும் நிலை 'இலக்கியம் படைப்பாளனுக்காக மட்டுமே' என மாறிவரும் சூழலில் அவை குறித்த காத்திரமான உரையாடலொன்றை மேற் கொள்வதற்கான சான்றாக இத்தொகுதி அமைய வேண்டுமென்பது எனது அவாவாகும். தொகுதிக்கு அணிந்துரை வழங்கிய என்னருமை ஆசிரிய நண்பரான பேராசிரியர் செ. யோகராசா அவர்களுக்கும் தட்டச்சில் உதவிய திருமதி ஜெஸ்மின் பைசருக்கும் பதிப்பகத் தாருக்கும் மனமார்ந்த நன்றிகள்.

**கலாநிதி ஏ.எப்.எம்.அஷ்ரஃப்**
மொழித்துறை
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
*01.01.2020*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணிந்துரை

ஈழத்தின் மிக முக்கியமான சிறுகதை எழுத்தாளரென்ற விதத்திலும் சில விடயங்களிலே முன்னோடி எழுத்தாளரென்ற விதத்திலும் கவனிக்கப்பட வேண்டிய எழுத்தாளராகத் திகழ்பவர் பித்தன் கே.எம்.எம். ஷா (1920 – 1994) அவர்கள். எனினும், ஈழத்துச் சிறுகதை வரலாறு பற்றி முதன்முதலாகச் செய்யப்பட்ட ஆய்வேட்டில் (ஈழத்துத் தமிழ் சிறுகதைகள்: 1925 – 1965 பேராசிரியர் க. அருணாசலம்) அவரது பெயர்கூட இடம்பெறவில்லை. இதற்கான முக்கியமான காரணம் பித்தனது சிறுகதைகள் சில நூலுருப் பெற்றது 1995இல் ஆகும். (பித்தன் கதைகள், மல்லிகைப் பந்தல் வெளியீடு, யாழ்ப்பாணம்) அதன் பின்னர்கூட அவரது ஆளுமை பரவலாக அறியப்பட்டுள்ளது என்பதற்கில்லை. இத்தகைய ஆரோக்கியமற்ற ஈழத்து இலக்கியச் சூழலில் – முதற் பதிப்பும் கிடைப்பதற்கரிதான சூழலில் – அது வெளிவந்து 25ஆண்டுகள் பின்னர் ஒரு கதை உட்பட புதிய சில விடயங்களையும் பின்னிணைப் பாகக் கொண்டு இப்போது இந்நூல் வெளிவருவது பாராட்டிற்குரிய செயலென்பதில் எதுவித ஐயமுமில்லை!

பித்தன் சிறுகதைகள் மட்டக்களப்புச் சிறுகதை வரலாற்றிலோ முஸ்லிம் எழுத்தாளரது சிறுகதை வரலாற்றிலோ மட்டுமன்றி ஒட்டுமொத்தமான ஈழத்துச் சிறுகதை வரலாற்றிலேயே முக்கிய இடம்பெறக்கூடியன. அதுபற்றி இவ்வேளை சுருக்கமாக எடுத் துரைப்பது பொருத்தமானதென்று கருதுகின்றேன்.

வசதிக்காக, ஐம்பதுகள் வரையிலான ஈழத்துச் சிறுகதைச் செல்நெறி பற்றி முதலில் நினைவு கூர்வது அவசியமாகின்றது.

ஈழத்திலே முப்பதுகள் அளவிலே சிறுகதை தோற்றம் பெற்ற சூழலில் முன்னோடி எழுத்தாளர்களான இலங்கையர்கோனும் சி. வைத்தியலிங்கமும் எழுதிய சிறுகதைகளுள் கணிசமானவை ஈழத்து வரலாற்றுச் சம்பவங்களையும் புராண இதிகாசச் சம்ப வங்களையும் அடியொற்றியே எழுந்துள்ளன. அவை தவிர்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதைகள் கிராமிய மக்களின் அன்றாட வாழ்க்கை முறையைச் சாதாரணமாகப் படம் பிடித்திருந்தன. சம்பந்தரின் சிறுகதைகள் அவற்றிலிருந்து விலகி இலட்சிய நோக்குடையனவாகவும் காவியச் செல்வாக்கிற்குட்பட்டனவாகவும் அமைந்தன.

நாற்பதுகளில் மறுமலர்ச்சிக் காலகட்டச் சிறுகதைகளே முதன் முதலாக ஈழத்து மக்களது வாழ்க்கை பற்றி – குறிப்பாக யாழ்ப் பாணத் தமிழ் மக்களது வாழ்க்கை பற்றி – பேச முற்பட்டன முப்பதுகளை இணைத்து ஐம்பதுகளுக்கு வழிகோலியிருந்தன. ஐம்பதுகளில் இருந்தே ஈழத்துச் சிறுகதைகளின் செல்நெறிகள் முக்கிய மாற்றம் கண்டன ஒருபுறம் முற்போக்கு எழுத்தாளரின் வரவும் இன்னொரு புறம் (சிங்கள – தமிழ்) இன முரண்பாட்டின் ஆரம்பமும் வெளிப்பட்டன. சிறுகதைகளின் களமும் யாழ்ப் பாணத்திலிருந்து மட்டக்களப்பு, திருகோணமலை என அகற்சி கண்டது. இப்பிரதேச மக்களது வாழ்வியற் கோலங்கள் வரையப்படும் நிலை உருவாகியது 'எஸ்.பொ', வ.அ. இராசரத்தினம், அப்துஸ் ஸமது முதலான முக்கிய ஆளுமைகள் வெளிப்பட்டன. இத்தகை யோரிடமிருந்து வேறுபட்டவராகத் தன்னை இனங்காட்டுகின்றார், பித்தன்.

மேற்கூறிய வழி நின்று நோக்கும்போது முதலில் கூறப்பட வேண்டியது அவரது சமூக விமர்சனப் பார்வை, அதுவும் ஆழமான சமூக விமர்சனப் பார்வையாகும்.

அவ்விதத்தில் முதலிற் குறிப்பிட வேண்டியது முஸ்லிம் மக்களது வாழ்க்கையின் முக்கியமான சில அம்சங்களை முதன்முதலாகக் கடும் விமர்சனத்திற்கு உட்படுத்தியமையாகும். பாதிக்குழந்தை (1952), அமைதி (1952), தாம்பத்தியம் (1952), தாகம் (1968), ஊர்வலம் (1967), இருட்டறை (1953) என்பன அத்தகையவை. அதிகம் சர்ச்சைகளை ஏற்படுத்திய 'பாதிக் குழந்தை'யில் மக்காவிற்குச் செல்லும் ஹாஜியாரின் நடத்தை கேள்விக்குள்ளாகின்றது. ஊர்வலத்திலும் தாகத்திலும் மஹர்ப் பணம் கொடுக்கப்படும் நடைமுறை பற்றிக் கேள்விகள் எழுப்பப்படுகின்றன. 'அமைதி', 'தாம்பத்திய வாழ்க்கை'யில் மனைவி – கணவனுக்குரிய இடம் பற்றிக் கேள்வி எழும்புகின்றது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நத்தார்ப் பண்டிகை கோலாகலமாகக் கொண்டாடப்படும் சூழலில் ஏழையான வேலைக்காரன் தானியேல் தான் முன்பு வேலை செய்த பணக்கார வீட்டிற்குள் நுழைந்து உணவை மட்டும் உண்டு செல்வதன் பின்னாலும் கேள்வியொன்றிற்கு இடமிருக்கின்றது!

கோயிலில் சந்தித்த வண்ணாரப் பெண்ணொருத்தியைக் காதலித்து, அவளுடன் உறவுகொண்டு குழந்தையைக் கொடுத்துவிட்டுக் கைவிட்ட இளைஞனொருவன், அதே கோயிலில் பக்தி சிரத்தை யுடன் வழிபாடு நிகழ்த்திக் கொண்டிருக்கின்றான். அவ்வேளை கோயில் குளத்தில் இறங்கித் தற்கொலை செய்யப் புறப்படு கின்றாள் அப்பெண். இவற்றின் பின்னாலும் சாதிப் பிரச்சினை கேள்விக்குள்ளாகின்றது. (பக்தி மிகுந்த வழிபாடும் மறைமுகமாகக் கேள்விக்குள்ளாவது போலுள்ளது)

ஆக, மேற்கூறியவாறான இன, மத, பேதமற்ற ஆழமான சமூக விமர்சனப் பார்வை சமகால எழுத்தாளருள் பித்தனிடமே அதிகமாகக் காணப்படுகின்றது என்பதே கவனத்திற்குரியது.

தமிழ்ச் சிறுகதை வரலாற்றிலே பெண் மன உணர்வுகளை – மனப் போராட்டங்களை – முதன்முதலாக வெளிப்படுத்திய சிறப்பு 'கு.ப.ரா.' விற்குள்ளது. இவ்விதத்தில் ஈழத்தில் பித்தனது தாகம், ஊர்வலம், இருட்டறை முதலான சிறுகதைகள் முக்கிய கவனிப்பிற்குரியன. 'ஊர்வலம்' கதையிலே வரும் தாயினதும் ரகுமத்தினதும் உரையாடலின் ஒரு பகுதி பின்வருமாறு வெளிப் பட்டு மனதை நெருடுகின்றது:

*"ஊர்வலம் வருகுது டீ புள்ள...!"*
*"நமக்கென்ன உம்மா!"*
*"ஊர்வலம் பார்க்க நீவரல்லியா புள்ள?"*
*"என்னத்த பாக்கிற உம்மா! நானும்*
*ஒரு நாளைக்கு ஊர்வலமாப் போறவள்*
*தானே!"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஊர்வலம்' கதையில் அடக்கமாக வெளிப்பட்ட பெண்குரல் 'தாகம்' கதையில் பித்தனூடாக ஆக்ரோஷமாக வெளிப்படுகின்றது:

"நேற்றுத் தன்னைப்போல தனியாக குமரியாக இருந்த ருக்கியா இன்று மனைவியாக மாறி விட்டாள். 'பணம் எப்படியெல்லாம் மனிதனை மாற்றி விடுகிறது? ஒரு பெண்ணுக்கு மட்டும்தான் ஆண் தேவையா? ஆணுக்குப் பெண் தேவையில்லையா? தேவையென்றால் இந்த ஆண்கள் ஏன் ஆடு மாடுகளை விலை கூறி விற்பதுபோல் தங்களைத் தாங்களே விலை கூறி விற்கிறார்கள்."

யதார்த்த உலகில் மட்டுமன்றி இதிகாச உலகில் முக்கியமான 'ராதை'யின்— காதல்வசப்பட்ட ராதையின் மனப் போராட்டங்களை வெகு இயல்பாக வெளிப்படுத்துவதிலும் வெற்றி பெற்றுள்ளார், பித்தன். நுணுக்கமாக நோக்கும்போது பித்தனது பெரும்பாலான கதைகளில் துயர்மிகு பெண்கள் முதன்மைப் பாத்திரமாக அல்லது முக்கியமான பாத்திரங்களுள் ஒருவராக இடம்பெற்றிருப் பதையும் அவதானிக்கின்றோம். ஏதோ விதத்தில் அவர்கள் பலிக்கடாக் களாவதும் புலப்படுகின்றது!

எழுத்தாளர்கள் கலைஞர்களின் தனிப்பட்ட வாழ்க்கையை வைத்துச் சிறுகதை எழுதிய ஈழத்து எழுத்தாளர்கள் குறைவே. இவ்விதத்திலும் தனித்துவமான — வித்தியாசமான — பார்வை களோடு சிறந்த சிறுகதைகள் சில (உதாரணம் ஒருநாள் ஒருபொழுது, பயங்கரப்பாதை) எழுதியவராகவும் பித்தன் வெளிப்படுவது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாட்டில் இந்தியா சுதந்திரம் பெற்ற காலச் சூழலைப் பின் புலமாகக் கொண்டெழுந்த சிறுகதைகள் பல வெளிவந்துள்ளன. அந்நிலை இலங்கையில் அரிதான பின்புலத்தில், பித்தன் எழுதிய 'அறுந்த கயிறு'ம் எம்மைச் சிந்திக்க வைக்கின்றதொரு சிறுகதை யாக மலர்ந்திருக்கின்றமை பற்றியும் இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும்!

தவிர, சமூகத்தின் ஒடுக்கப்பட்ட மாந்தர்களைப் பாத்திரங்களாகப் படைப்பவர்கள் பெரும்பாலும் முற்போக்கு எழுத்தாளர்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்கு நிகராக அன்றைய சூழலிலேயே தமது சிறுகதைகளில், வேலைக்காரி, வேலைக்காரன், சலவைத்தொழிலாளி, சமையல்காரி, ஹோட்டல் சமையல்காரன், மூட்டைதூக்கி முதலானோரை இரத்தமும் சதையுமாகவும் மறக்க முடியாதவர்களாகவும் நடமாட விட்டுள்ளார் பித்தன் என்பதும் விதந்துரைக்கப்பட வேண்டியதொன்றேயாம்.

பித்தனின் நடையாற்றலும் அபாரமானது. அங்கதம், செறிவு, பூடகம், கவித்துவம், நுண்மை, பழந்தமிழ் இலக்கியச் செல்வாக்கு எனப் பல்வேறு சிறப்புகள் கொண்டது. ஈழத்துச் சிறுகதை வரலாற்றில் அவ்விதத்திலும் சமகால எழுத்தாளரிடமிருந்து வேறுபடுபவர் பித்தன். நிதானமாக வாசித்து தாமே அவற்றை இனங்காண்பது இந்நூல் வாசகரது பொறுப்பாகட்டும்!

இறுதியாக, இன்னுமொன்று: மணிக்கொடிக்கால புதுமைப்பித்தனது தாசனாகவுள்ள (நேரில் கண்டமை, புனை பெயர் வைப்பு, புதுமைப்பித்தனது மரணம் பற்றிச் சிறுகதை எழுதியமை, தமது சிறுகதைகளிலும் ஆங்காங்கே 'புதுமைப்பித்தன்', 'பித்தன்' பற்றிக் கூறுகின்றமை) பித்தனிடம் புதுமைப்பித்தனது தாக்கம் (உதாரணம்: சமூக விமர்சனம், பாத்திர உருவாக்கம், அங்கதம், மொழிநடை, இருட்டின் மீது ஈடுபாடு) நிரம்பவுண்டு. கு.ப.ரா.வின் செல்வாக்குமுள்ளது. (உதாரணம்: பெண் நிலைப் பார்வை) கு. அழகிரிசாமியும் ஓரிரு இடங்களில் வருவார். (உதாரணம்: 'திருவிழா' சிறுகதை கு. அழகிரிசாமியின் 'தியாகம்' சிறுகதையுடன் ஒப்பிடத்தகுந்தது). இன்றைய எழுத்தாளர்கள், தமிழ் முன்னோடிகளை ஆழ்ந்து வாசித்துப் பெறுவனவற்றைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்பதற்கான நல்லதொரு முன்னோடியாகவும் பித்தன் காணப்படுகின்றார் என்பதும் கவனத்திற்குரியது!

ஆக, முதற்பதிப்பு கிடைக்காத நிலை உணர்ந்து, பித்தனது எழுத்தாண்மை நன்கு பரவுவதற்கு வழிகோலிய நண்பர் கலாநிதி அஷ்ரஃப் அவர்களை மீண்டுமொரு முறை நெஞ்சு நிறைவோடு பாராட்ட விரும்புகின்றேன். முதன்முதலாகப் பித்தன் பற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதும் வாய்ப்பும் (பண்பாடு, மலர் 7, இதழ் 1, 1997, பக். 33 – 37). கொழும்பு உலக இஸ்லாமிய மாநாட்டில் (2002) பித்தன் பற்றி ஆய்வுக் கட்டுரை சமர்ப்பிக்கும் வாய்ப்பும் பெற்றிருந்த எனக்கு இந்நூலின் 'புத்துயிர்ப்பு' தனிப்பட்ட விதத்திலே களிபேருவகை தருவது பற்றியும் இறுதியாகப் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்!

பித்தனது நூலுருப்பெறாத ஏனைய சிறுகதைகளையும் தேடித் தொகுத்து, அத்தேடல் பகீரதப் பிரயத்தனந்தான், மூன்றாவது பதிப்பையும் நண்பர் வெளிக்கொணரும் உன்னத நாளுக்காகக் காத்திருக்கின்றேன்!

வாழ்த்துக்களுடன்,

**கலாநிதி செ.யோகராசா,**
(ஓய்வுநிலைப் பேராசிரியர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாதிக் குழந்தை

"உலகமெல்லாம் தேடினேன் ஒரு மனிதனைக்கூடக் காணவில்லை!" என்று யாராவது சொன்னால் அவனைப் பைத்தியக்காரன் என்றோ, குருடன் என்றோதான் உலகம் முடிவு கட்டும். ஆனால், மனிதனைப்போல் அலங்காரம் செய்து கொண்ட பயங்கர மிருகங்கள்தான் உலகத்தில் அதிகம் என்று சொன்னால் அதை யாரும் மறுக்க மாட்டார்கள்.

நல்ல பாம்பு என்று சொல்வதனால் அதனிடம் விஷமில்லை யென்று சொல்ல முடியுமா? அது பாம்பு, மனிதன் ஏன் பட மெடுத்தாடுகிறான்? இதுதான் இன்றைய உலகத்தில் முற்றுப் பெறாமல் விடப்பட்ட வசனம் அல்லது வசனம் முடிவு பெறாத முற்றுப் புள்ளி. இது ஆண்டவனுக்குப் புரியவில்லை. மனிதர்கள் எப்படி விளங்கிக் கொள்ளப் போகிறார்கள்?

ஏன் மனிதனுக்குப் பகுத்தறியும் தன்மை கிடையாதா? விஷத்தை விடக் கொடியவர்கள் மனிதன் என்ற போர்வையில் நடமாடு வதைப் பார்த்துக் கொண்டிருக்கிறானே! ஏன்? உலகம் அத்தகை யவர்களை மதித்து மரியாதை செய்கிறதே ஏன்?

உருவமே இல்லாத ஆண்டவனைப்போல், உண்மையும் உருவற்றுப் போய்விட்டதா? எல்லாமே பைத்தியக்காரத்தனம் சீ....!

சிந்தனைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு குடிசைக்குள் இருந்தபடியே பாதி திறந்திருந்த கதவிடுக்கால் உலகத்தை எட்டிப் பார்த்தாள் சுபைதா. அவள் கண்களுக்கு ஒன்றுமே தெரியவில்லை. உலகம் இருண்டு கிடந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவுப் பெண் அன்ன நடை போட்டுக் கொண்டிருந்தாள். தென்றல் அவள் முந்தானையை இழுத்துப் பிடித்தாள். கருப்பு முந்தானை விரிந்து பறந்து உலகத்தை மறைத்தது. அந்தத் திரை மறைவிலே எத்தனையோ அற்புத அக்கிரமங்கள்! இன்று மட்டுமா? யுகம் யுகங்களாக நடந்து கொண்டிருக்கும் சம்பவம் இது.

சுபைதாவின் குடிசைக்குள்ளும் இருட்டுப் புகுந்து விட்டது. “விளக்கேற்ற வேண்டும்” என்று அவள் தனக்குள் சொல்லிக் கொண்டாள். அதைச் செய்ய அவளால் முடியவில்லை. கால்கள் இரண்டையும் நீட்டியபடி அந்தக் களிமண் சுவரிலே சாய்ந்து கொண்டிருந்தாள் சுபைதா. காரணம் அந்த வேதனை! அது என்ன வேதனையோ?

வயிற்றுக்குள் தொங்கும் மற்றொரு உயிர் வெளியே குதிப்பதற் காக வழிசெய்து கொண்டிருந்தது. சற்று நேரத்துக்கு முன்புதான் ஆரம்பமாகியது அந்த வேதனை. ஆரம்ப வேதனையையே அவளால் தாங்க முடியவில்லையே!

அப்பொழுது இரவு ஏழு மணி இருக்கும். இருட்டு, அவள் குடிசைக்குள் புகுந்து வெகு நேரமாகி விட்டது. இன்னும் விளக்கேற்றவில்லை. காரணம் அவளால் எழுந்திருக்க முடிய வில்லை. சுவரில் சாய்ந்தபடியே உட்கார்ந்திருந்தாள்.

அது புது அனுபவம் அவளுக்கு, தெரிந்து கொள்ள முடியாத ஒரு பயம், அவள் மனதைத் துவைத்துக் கொண்டிருந்தது. என்ன நேரப் போகிறது என்று அவள் உள்ளத்தில் எழுந்த கேள்விக்கு விடை கிடைக்கவில்லை. அவளுடைய துடிதுடிப்பு காலத்திற்குத் தெரியுமா? தொழிலாளியின் துன்பம் தெரியாத முதலாளியைப் போல் மெத்தையில் புரண்டு கொண்டிருந்தது, அந்த இரவு!. உடல் வேதனையும் உள்ள வேதனையும் ஒன்று சேர்ந்து அவளைப் பேயாட்ட மாட்டியது. நோவு அவள் உள்ளத்தைத் துளைத்துக் கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பத்திலேதான் மறைந்துபோன நாட்களின் மறந்து போன சம்பவங்கள் வந்து மனதில் வட்டமிட ஆரம்பிக்கின்றன. இந்த அனுபவம் சுபைதாவுக்கு எப்படி ஏற்பட்டது? அவளுடைய எண்ணம் வந்த வழியே திரும்பிச் செல்கிறது.

சுபைதா அந்தக் குடிசைக்கு வரும்பொழுது தனிமையாகத்தான் வந்தாள். சுபைதா வந்த சில நாட்களில் கிழவி காலை நீட்டி விட்டாள். இப்பொழுது சுபைதா தனிமைக்கும் அந்தக் குடிசைக்கும் சொந்தக்காரியாகி விட்டாள். இன்றிரவோ அல்லது நாளைக்கோ அவள் தனிமையைப் போக்க வயிற்றில் இருக்கும் குழந்தை பிறந்து விடும். இதை நினைத்தபொழுது அவள் முகத்தில் சந்தோச ரேகை மின் வெட்டியது. மறு கணம் கிழவியின் முகம் போலாகி விட்டது அவள் முகம். பிறக்கப் போகும் குழந்தை அவளுடையதுதான். ஆனால்? அவள் அதை விரும்பவில்லை. உண்மை விரும்பாதபோது உடல் விரும்பாதபோது அந்தக் குழந்தை அவள் வயிற்றுக்குள் உருவாகி விட்டது! அப்படியாக மனம் எட்டித் தாவியது ஆரம்ப காலத்திற்கு.

சுபைதா இந்த உலகத்துக்கு வந்து பதினாறு வருடங்களாகி விட்டன. என்றாலும் எட்டு வருட வாழ்க்கைதான் அவளுக்கு ஞாபகம் இருக்கிறது. தாய் தந்தையர்களைப் பற்றி எதுவும் தெரிந்து கொள்ள முடியாத நிலையில்தான் இருந்தாள் அவள். தாயின் மடியில் உறங்கிய குழந்தை கண் விழிக்கும்பொழுது தொட்டிலில் கிடப்பதை உணருவதைப்போல, சுபைதாவுக்கு ஞாபகம் தெரிந்தபொழுது ஹாஜியார் உமரு லெப்பையின் வீட்டில் வேலைக்காரியாக இருந்தாள்.

ஹாஜியார் உமருலெப்பை அந்தக் கிராமத்துக்கே பெரிய மனிதன். பாபமும் பணமும் அவரைப் பெரிய மனிதனாக்கி விட்டது. வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுப்பதுபோல செய்த பாபங்களைத் தீர்ப்பதற்காக ஒருமுறை மக்காவுக்குப் போய் வந்தார். பிறகு திரும்பவும் அகரத்தில் ஆரம்பித்துக் கொண்டார், தனது சுபாவத்தை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாப மூட்டைகளைத் தாங்கிக்கொள்ள மக்கா என்றொரு சுமை தாங்கியை அமைத்துக் கொண்ட பிறகு பணக்காரன் பாபம் செய்யப் பயப்பட வேண்டியதில்லை அல்லவா? இந்தத் தைரியத்தில் கண்மூடிக் காலம் கழித்தார் ஹாஜியார்.

வீட்டிலே மனைவி தென்னத் தோட்டத்தில் ஒரு ஆசை நாயகி. – ஊருக்குக் கடைசியிலே ஒரு கள்ளக் காதலி. இவைகளை யெல்லாம் விட சந்தர்ப்பத்துக்கேற்ப பகல் காட்சிகள் பல. அவருடைய பணத்திற்கும் பருத்த உடலுக்கும் பணிந்து போகாத பருவப் பெண்களே இருக்க முடியாது அந்த வட்டாரத்தில்.

இப்படிச் செய்வது தவறு என்று அவர் கருதவில்லை நாலு கல்யாணமும், நாற்பது கள்ளக் காதலிகளும் வைத்துக் கொள்ள இடம் அளிப்பதாக அவர் கருத்து.

பணம் என்றால் ஹாஜியாரின் உயிர் என்று அர்த்தம், ஏழைகளின் வயிற்றில் இருக்க வேண்டியது, ஹாஜியாரின் பணப்பெட்டியில் தூங்கிக் கொண்டிருந்தது. நூற்றுக் கணக்கான வயல் பூமிகளை மிகவும் அற்பமாகத் தன் சொந்தமாக்கிக் கொண்டார் அவர். எவ்வளவுக்கெவ்வளவு பணம் அதிகரித்ததோ அவ்வளவுக்கவ்வளவு சந்தானம் குறுகிக் கொண்டே போயிற்று. பிறந்தது ஒரே குழந்தை அதுவும் இறந்து போயிற்று.

கணவனின் கொடுமைகளைக் கண்டு மனம் பொறுக்காமலோ அல்லது பணத்தின் பாரம் தாங்காமலோ ஒருநாள் அவர் மனைவியும் இறந்து விட்டாள். அவள் இறந்தது ஒரு பாபம் கழிந்தமாதிரி அவருக்கு! வீட்டில் தட்டிப் பேச ஆளில்லை. அவருடைய தாயார்! உலகமே தெரியாது. மூத்துப் போனவள் முடங்கிக் கிடந்தாள் ஒரு மூலையில். தனது கடைசி நாளை எதிர்பார்த்த வண்ணம்.

சுபைதாவுக்கு அப்பொழுது பதினாறு வயது பூர்த்தியாகி விட்டது. இளமையின் பூரிப்பில் இன்ப மணம் வீசிக் கொண்டிருந்தது, அவள் மேனி! இஸ்லாமியப் பெண்களுக்கு இயற்கை அளித்திருக்கும் அழகு கொஞ்சம் அதிகமாகவே ஆட்கொண்டிருந்தது அவளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன இருந்துமென்ன அவள் உமருலெப்பை ஹாஜியாரின் வேலைக்காரி. அவ்வளவோடு திருப்தியடைய வேண்டியவள்தான்.

நாளடைவில் ஹாஜியாரின் போக்குக் கலக்கத்தை உண்டாக்கியது சுபைதாவுக்கு. எனவே எப்படியாவது அங்கிருந்து விடுதலை பெறவேண்டுமென்று நினைத்தாள் பலன்? முதலை வாயில் இருந்து மீண்டு புலியை நாடிய கதையாகத்தான் முடியுமென்பதை உணர்ந்தாள்! இந்தச் சமூகம் அப்படித்தான் காட்சியளித்தது அவளுக்கு.

இளமை ஒரு காந்தம். அது உமருலெப்பை ஹாஜியாரைப் போன்ற கம்பியாணிகளை இலகுவாக இழுத்துக் கொள்ளும். துருப்பிடித்துப் போன அவரது இரும்பு உள்ளத்திற்கு சுபை தாவின் பருவம் பாயும் மின்சாரம். ஆனால்! அவளது அடக்கமும் அமைதியும் அவரை அண்ட விடவில்லை.

தங்கம் சொக்கத் தங்கமாக வேண்டுமானால் அதை நெருப்பில் புடம் போட்டாக வேண்டும். ஆனால்! மனிதன் தன்னைத்தானே புடம் போட்டுக்கொண்ட பிறகு? காலமும் மனிதனைப் புடம் போட்டுப் பார்க்கிறது. மனிதன் அதை விடுத்து ஆண்டவன் விதி என்ற குப்பை கூழங்களை அள்ளித் தலையில் போட்டுக் கொண்டு திரும்பவும் சீரழிந்து போகிறான். யாத்திரை போனால் மனிதனாகலாம் என்பதை விடுத்து கடமையாலும் நேர்மையாலும் மனிதனாகலாம் என்பதைப் புரிந்துகொள்ள முடியாத சூழ்நிலையில் உமரு லெப்பை ஹாஜியார் குற்றமற்றவர்தான். ஆனால்! மனச் சாட்சி மரக்கட்டையாகிவிட்ட ஹாஜியாரின் வீட்டில் ஒரு நாள்:

இரவு எட்டு மணியிருக்கும். இராச் சாப்பாட்டை தயார் செய்து விட்டு ஹாஜியாரின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள் சுபைதா. மணி ஒன்பது அடித்தது. வரவில்லை வீட்டிலுள்ள ஏனைய பகுதிகளையெல்லாம் சாத்திவிட்டு மண்டபத்துக்குள் வந்து அங்கே கிடந்த கட்டிலில் உடம்பைச் சாய்த்தாள் அவள். நேரம் ஆக ஆக அவள் கண்களைத் தூக்கம் கவ்வியது. அப்படியே உறங்கி விட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவு மணி பனிரெண்டிருக்கும். ஹாஜியார் வீட்டுக்கு வந்தார். மண்டபக் கதவைத் திறந்து உள்ளே நுழைந்த அவர் கண்கள் தூக்கத்தில் கிடந்த சுபைதாவைப் பார்த்து விட்டன. வேலை செய்த களைப்பால் தன்னிச்சையாக உறக்கத்தில் கிடந்த சுபை தாவின் சேலை அங்குமிங்குமாக விலகிக் கிடந்தது. காலத்தின் வரவால் கன்னியின் பூரிப்பில் தலைநிமிர்ந்து நின்ற அவளது மார்பகம் ஹாஜியாரின் உள்ளத்தைக் கிள்ளிவிட்டது. உழைப் பின் மிகுதியால் உரமேறிப்போன அவளது அவயவங்கள் நிலை யழிந்த ஒருவித போதையை ஏற்படுத்தி விட்டன, அவருக்கு. நடு இரவும் சுடுகாட்டமைதியும் இச்சையின் சுறுசுறுப்பும் எல்லா மாகச் சேர்ந்த சுபைதாவின் எதிர்காலத்தை பாழ்படுத்தி விட்டன, அவள் அனாதை!

சாப்பிட்ட எச்சிலை விட்டு விட்டு எழுந்து போகும் முதலாளியைப் போல் ஹாஜியார் நடந்தார் கிணற்றடியை நோக்கி, வாயால் உமிழ்ந்ததை கையால் வாரி எடுக்கும் தொழிலாளியைப்போல தன் சேலையை வாரி உடம்பை மூடிக்கொண்டு சமயல் அறையை நோக்கி ஓடினாள் சுபைதா. பணக்கார வீட்டில் இதுவும் ஒரு வேலைதானோ என்னவோ? ஆனால் அந்த அனுபவம் அன்று ஏற்பட்டது அவளுக்கு.

ஹாஜியார் சாப்பிட்டு விட்டுப் படுத்துக் கொண்டார். நீண்ட காலச் சுமையை இறக்கி வைத்த மன நிம்மதி அவருக்கு.

சுபைதாவுக்குத் தூக்கம் வரவில்லை. உள்ளம் விம்மிக் கொண் டிருந்தது. கண்களில் இருந்து நீர் வடிந்து கொண்டிருந்தது. வெட்கமும் பயமும் கலந்த துன்ப வேதனை அவளைக் கசக்கிப் பிழிந்தது.

காலத்திற்கு யாரைப் பற்றியும் கவலை இல்லை. அதிகாலை மணி ஐந்தடித்தது. ஹாஜியார் அவசர அவசரமாக எழுந்து காலைக் கடன்களை முடித்து விட்டு வழக்கத்துக்கு மாறாக அதிக நேரம் காலை வணக்கத்தில் ஈடுபட்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் வேலைக்காரி, அடிமை தன் கடமைகளைச் செய்ய வேண்டு மல்லவா? வெட்கத்தையும் வேதனையையும் அடுப்பங்கரைச் சாம்பலுக்குள் புதைத்து விட்டு, வீட்டு வேலையில் ஈடுபட்டாள்.

ஹாஜியாரின் வீட்டில் இருந்த அராபி மாதக் காலண்டரில், மூன்று தாள்கள் கிழிக்கப்பட்டு விட்டன. சுபைதாவின் அடி வயிறும் பெருத்து விட்டது! ஒரு குழந்தைக்காக ஓராயிரம் தவம் புரிந்தும் கிட்டாது மனம் ஒடிந்து போனவர்கள் எத்தனையோ பேர்? இந்த உலகத்தில், வேண்டாம் என்று சொல்லும்பொழுது வேண்டு மென்றே வாய்க்குள் திரிப்பதுபோல் விரும்பாதபொழுது அவள் உடலுக்குள் உருவாகிக் கொண்டிருந்தது, அந்தப் புது ஜீவன். அதன் உற்பத்திக்குக் காரணமாக இருந்த அந்த இரத்தம் அநீதி என்ற அழுக்கேறி அசுத்தப்படுத்தப்பட்ட கிழட்டு இரத்தம். சீ! அவள் தேகம் குலுங்கியது, சிந்தனையும் கலைந்தது.

மெதுவாகக் கண்களைத் திறந்து பார்த்தாள் சுபைதா. பாதி திறந்திருந்த கதவின் வழியாக வானத்தில் சிதறிக் கிடந்த நட்சத் திரங்கள் தெரிந்தன. அவளுக்கு, பிரசவ வேதனை அதிகரித்துக் கொண்டே இருந்தது. உடல் மெதுவாக அசைந்தது. "உம்மா!" என்று முனகினாள், அவள். அதே சமயம் கதவோரத்தில் யாரோ மூச்சு விடும் சத்தம் கேட்டது. மெதுவாகத் தலையைத் திருப்பி வாசலைப் பார்த்தாள். அங்கே அந்தக் கிழட்டு நாய் வாலை ஆட்டியபடி படுத்துக் கொண்டிருந்தது.

அந்த நாய் அந்தக் குடிசையைத்தான் தனது இராப்படுக்கைக்கு இடமாக்கிக் கொண்டிருந்தது. கிழவிக்கு அந்த நாய் தான் தோழன். அவள் அந்த நாயை அன்பாகத் தடவியபடி சொல்வாள். "இந்த உலகத்தில் மனிதனை விட இது எவ்வளவோ மேல்" என்று, அந்த உண்மை சுபைதாவுக்கு இப்பொழுதுதான் தெரிந்தது.

தனிமையில் தவித்துக் கொண்டிருந்த அவளுக்கு அந்த கிழ நாயின் கூட்டு எவ்வளவோ ஆறுதலாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த உலகத்தில் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். ஏன்! உமரு லெப்பை கூடத்தான் இருக்கிறார். அவருக்கு நன்றாகத் தெரியும் தன்னுடைய இரத்தத்தில் இருந்து ஒரு புது ஜீவன் உதயமாகப் போகிறது என்று. ஆனால்! அவர் என்ன செய்துவிட்டார்? இந்தக் கிழ நாயை விட அவ்வளவு கிழமாகி விட்டாரா? இல்லை யென்றால் என்னை, வீட்டை விட்டு வெளியேற்றி இருப்பாரா? உம்...! அவர் என்ன செய்வார்? அவர் குடியேறி இருக்கும் உலகம் அப்படி, ஏன் இந்த சமூகமும் அப்படித்தான்.

ஒன்றுக்குப் பதில் இரண்டு உயிர்களைத் துன்புறுத்துவதைத் தவிர வேறு நல்ல காரியம் இந்த சமூகத்துக்குத் தெரியாது. உயிரும் உண்மையும் அற்றுப் போன இந்த சமூகம் எனது இன்றைய நிலையைத்தான் ஆதரிக்கும். இவைகளையெல்லாம் நினைத்து நடக்கப் போவது என்ன? அவள் ஒரு முட்டாள்.

முடிவில்லாத அந்த இரவு நீண்டு கொண்டே இருந்தது. உள்ளத் திற்கும் உடலுக்கும் வேதனையைத் தந்து கொண்டே அந்த இரவு நீண்டது. விடிந்து விட்டால் எப்படியாவது அந்த வெட்ட வெளியில் போய் படுத்துக் கொள்வாள். அங்கே சூரியனின் சுடு வெயிலும் சோலைக் காற்றும் அவளுக்கு ஆறுதல் அளிக்கக் கூடும்.

பிரசவ வேதனை நிமிசத்திற்கு நிமிசம் முன்னேறிக் கொண்டிருந்தது. மார்பின் மேல் ஒரு கல்லைத் தூக்கி வைத்ததுபோல் இருந்தது அவளுக்கு. வாயைத் திறந்து மூடினாள். உடலை அசைக்க முடிய வில்லை. எண்ணங்கள் தடைப்பட்டன. பிணம் போலக் கிடந்தாள். இருதயம் துடித்துக் கொண்டிருந்தது துண்டிக்கப்பட்ட புழுவைப் போல.

மெல்லமெல்ல உலகம் தெளிவடைந்து கொண்டிருந்தது. இருள் மங்கை தன் முந்தானையை இழுத்துத் தன்னை மறைத்துக் கொள்ள முயன்றாள். குடிசை வாசலில் படுத்துக் கொண்டிருந்த நாய் தனது நாலு கால்களையும் நீட்டி உடம்பை நெளித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பொழுது அதற்கு ஒரு புதுவாசனை மூக்குவரை வந்து மோதியது. மோப்பம் பிடித்துக் கொண்டே சுபைதாவை நெருங்கியது அந்த நாய். சுபைதாவின் படுக்கை நீரால் நனைத்திருந்தது. நாய் தன் முகத்தைத் தாழ்த்தி முகர்ந்து பார்த்தது. அதற்கு என்ன தோன்றியதோ? உறுமிக் கொண்டே தன் இடத்தில் வந்து படுத்துக் கொண்டது!

சுபைதா மரக்கட்டையாகிக் கொண்டிருந்தாள். அவளது வேதனைக்கும் நீண்ட இரவுக்கும் காரணமாக இருந்த அந்த புது ஜீவன் உதயமாகிக் கொண்டிருந்தது.

குழந்தை பிறக்கும் வரை சுபைதா காத்துக் கொண்டிருக்கவில்லை. முடியவில்லை அவளால். குழந்தையின் உதயத்துக்காக உயிரைப் பிடித்துக் கொண்டிருந்தாள் அவள். ஆனால்! உயிர் அவள் பிடியிலிருந்து பாய்ந்துவிட்டது! சுபைதா பிணமாகி விட்டாள். குழந்தை கழுத்தை நீட்டி உலகத்தை எட்டிப் பார்த்தது. இந்த உலகத்தைப் பற்றி என்ன நினைத்ததோ? பாதி வழியிலேயே தங்கி விட்டது. பூமியில் குதிக்காத குழந்தை வந்த வழியே போக முடியாமல் தத்தளித்தது. முடிவு.....? பிறப்பதற்கு முன்பே பிணமாகி விட்டது. அந்தப் பாதிக் குழந்தை!

சிருக்ஷ்டித் தத்துவத்தின் சீர்கேட்டைப் பார்த்து சிரித்திருக்க வேண்டும் அந்த நாய். அது தன் தலையைத் தூக்கி ஆகாயத்தைப் பார்த்து ஊளையிட்டது. அந்த நாயின் குரலோடு ஒரு மோட்டார் காரின் ஊது குழல் சத்தமும் வந்து கலந்து கொண்டது.

சிறிது நேரத்தில் ஒன்றன் பின் ஒன்றாக நாலைந்து கார்கள் அந்த வழியே பறந்தன. அதில் முதலாவது காரில் உமரு லெப்பை ஹாஜியார் இரண்டாவது முறை மக்காவுக்குப் போகிறார்.

**- 1952**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாம்பத்தியம்

செல்லம்மாள் தனிமையில் உட்கார்ந்திருந்தாள். உலகத்தில் விருப்பு வெறுப்புகளில் எல்லாம் இருந்து விடுபட்டவளைப் போல் அந்த அறையின் ஒரு மூலையில் தனிமையில் உட்கார்ந்து கொண்டிருந்தாள்.

செல்லம்மாளுக்கு வயது இருபத்தியெட்டு. இருபத்தியெட்டு வருசம் இந்த உலகத்தில் வாழ்ந்து விட்டதினாலோ, அல்லது பத்து வருடக் குடும்ப வாழ்க்கையில் இரண்டு குழந்தைகளுக்குத் தாயாகி விட்டதினாலோ எந்தப் பெண்ணும் உலகத்தை வெறுத்து விட முடியாது.

செல்லம்மாளுக்கு அழகு இருந்தது. அழகுக்கேற்ற வயது இருந்தது. வயதுக்கேற்ப வாழ்க்கை வசதி இருந்தது. வீட்டிற்குள் துள்ளி விளையாட இரண்டு குழந்தைகள் இருந்தன. இத்தனைக்கும் ஆதரவாக அவள் கணவன் இருந்தார்.

கணவன் இருக்கிறாரா? இந்தக் கேள்வி மனதில் எழுந்ததும், செல்லம்மாள் தலையைத் தூக்கிப் பார்த்தாள். எதிரே வெள்ளை யடித்த சுவர்தான் இருந்தது.

சற்று நேரத்துக்கு முன் அவளுடைய எட்டு வயது குழந்தை ரமணி கொண்டு வந்து கொடுத்த ஒரு சஞ்சிகை அவள் மடியில் கிடந்தது, அதைக் கையில் எடுத்தபடி சன்னல் வழியே உலகத்தைப் பார்க்க முயன்றாள். உலகம் தெரியவில்லை! மழை பெய்வதற்கு ஆயத்தம் செய்து கொண்டிருக்கும் இருண்ட வானம்தான் தென்பட்டது. ஒரு பெருமூச்சு விட்டபடி கையில் இருந்த சஞ்சிகையை புரட்டினாள். மனம் எதிலும் ஈடுபடவில்லை. பக்கம் பக்கமாகப் புரட்டிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கும்பொழுது "தாம்பத்தியம்" சற்றுப் பெரிய எழுத்தில் அச்சிடப்பட்டிருந்த அந்தப் பெயர் ஒரு சிறு கதையின் தலைப்பு என்பது அவளுக்குத் தெரிந்தது. அது அவள் கவனத்தைக் கவர்ந்தது. குடும்ப வாழ்க்கை குலைந்து போகாமல் இருப்பதற்காக, மனதிற்குக் கடிவாளம் போட்டு வாழ்ந்த தாம்பத்தியக் கதாபாத்திரங்களைப் படித்திருக்கிறாள், அவள். ஆனால்!

சுவரிலிருந்த கடியாரத்திலிருந்து டா....ண்! என்று ஓசை கேட்டது. செல்லம்மாள் தலையைத் தூக்கிப் பார்த்தாள் மணி நாலரை.

மனிதன் கண்ட அறிவுப் புரட்சி அந்த மணிக் கூடு, பத்து வருட காலமாக அந்த வீட்டில் ஒரு வினாடி கூடத் தவறாமல் தன் வேலையைச் செய்து கொண்டிருக்கிறது. ஏன்? அவளுடைய தாம்பத்தியமும் கடந்த பத்து வருட காலமாக எவ்வித குறையு மின்றி ஒழுங்காகத்தான் ஓடிக் கொண்டிருந்தது. ஆனால்! அவள் பார்வை அந்த நேரம் காட்டும் இயந்திரத்தில் லயித்துப் போயிருந்தது.

ஒரு நாள் அதோ அந்தச் சுவரோரம் ஒரு ஸ்டூலைப் போட்டு அதன் மேல் ஏறி நின்று அந்த மணிக்கூட்டை சுவரில் மாட்டினான் அவள் கணவன் கணேசன். அவன் ஏறி நின்ற ஸ்டூல் ஆடாமல் இருப்பதற்காக அதைப் பிடித்துக் கொண்டு நின்றாள் அவள். மணிக்கூட்டை சுவரில் மாட்டி விட்டு கீழே இறங்கிய கணேசன், செல்லம்மாளைப் பார்த்துச் சொன்னான்.

"மனைவி செய்ய வேண்டிய வேலை இதுதான்."

"எது?" அவள் கேட்டாள்.

"வாழ்க்கையின் அசைவுகளினால் கணவனின் கால்கள் தவறி விடாமல் பார்த்துக் கொள்வது"

இதைச் சொல்லி விட்டு அவள் கன்னத்தில் தட்டினான் அவன். அவள் சிரித்தபடி ஸ்டூலை அப்புறப்படுத்தினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பழைய நினைவுகளில் செல்லம்மாளின் கண்கள் கலங்கின. அவள் கண்களைத் துடைத்துக் கொண்டு அந்த மணிக்கூட்டைப் பார்த்துக் கொண்டிருந்தாள். மணிக்கூட்டின் அந்த பனிரெண்டு இலக்கங்களும் பனிரெண்டாயிரம் வருடங்களாகத் தோன்றியது அவளுக்கு. மணிக்கூட்டின் முட்கள் அந்தப் பனிரெண்டு இலக் கங்களையும் நிலைக்களனாக வைத்து எதிர்காலத்தைச் சுற்றிச் சுழல்வதைப்போல, அவளுடைய மனமும் அந்த மணிக்கூட்டை நிலைக்களனாக வைத்துக் கடந்த காலத்தைச் சுற்றி வந்தது.

செல்லம்மாளுக்கு விவாகமாகி ஏழெட்டு மாதங்களுக்குப் பிறகு தனிக் குடித்தனம் ஆரம்பித்து ஐந்தாறு நாட்களாகியிருந்தன. ஒரு நாள் மதியச் சாப்பாட்டுக்குப் பின் வேலை எதுவும் இல்லாமல் போகவே பக்கத்து வீட்டுக்குப் பேச்சுத் துணைக்காகப் போயிருந் தாள். அன்றுமின்றும் பெண்களுக்குப் பேச்சென்றால் அப்பத்தைத் தேனில் தொட்டுச் சாப்பிடுவது போன்றதுதான். எனவே பேச்சுப் போக்கில் நேரம் போனது தெரியாமல் இருந்துவிட்டாள் செல்லம் மாள். அந்த வீட்டுக் குழந்தைகள் பள்ளிக்கூடம் விட்டு வந்த பிறகுதான் அவளால் நேரத்தை உணர முடிந்தது. அவசரவசரமாக வீட்டுக்கு ஓடி வந்து தேநீருக்கு அடுப்பில் தண்ணீரை வைத்து விட்டு வீட்டு வேலையில் ஈடுபட்டாள். அடுப்பிலேற்றிய தண்ணீர் கொதிப்பதற்குள் அவள் கணவன் வந்ததும் அவளுக்கு ஒன்றுமே ஓடவில்லை. பரபரப்புடன் தேநீர் ஊற்றும் வேலையில் கவனம் செலுத்தினாள்.

கணேசன் அவளுடைய பரபரப்பைக் கண்டு உள்ளுக்குள் சிரித்தான். ஒன்றுமே பேசாது ஈசிச் சேரில் படுத்திருந்தான் அவள் வரவை எதிர்பார்த்து.

தேநீர் இல்லாமல் அவனைப் பார்க்க அவள் விரும்பவில்லை. காரியாலயத்தில் வேலைத் தொல்லைகளால் அலுத்துப் போய் வீடு வரும் கணவனை ஆசுவாசப்படுத்த முடியாத ஒரு மனைவி வீட்டில் இருந்து என்ன பயன்? என்று எண்ணியதில் ஏற்பட்ட பரபரப்பு கணவர் கோபித்துக் கொள்வாரோ என்ற பயம். இவை களுக்கு மத்தியில் தேநீர் கோப்பையுடன் கணேசனிடம் வந்தாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லம்மாள். அவள் முகத்தில் வியர்வை வழிந்தது.

"வானம் இருண்டு குளிர் காற்று வீசுகிறதே! அங்கே வியர்வை வழிவது ஆச்சரியம்தான். ஆனால்! அழகாய் இருக்கிறது" என்றான் கணேசன்.

செல்லம்மாள் முந்தானையால் முகத்தைத் துடைத்துக் கொண்டாள்.

"செல்லா! இப்படி உட்காரலாமே?" என்றான் அவன்.

அவள் அவன் பக்கத்தில் உட்கார்ந்தாள்.

"தேநீரை விட தேவி தரிசனம்தான் முக்கியம்" என்றான் அவன்.

"பிரசாதம் இல்லையென்றால் தேவியிடம் பக்தனுக்கென்ன வேலை?" இப்படிக் கேட்டு விட்டு ஒரு பிஸ்கட்டை எடுத்து நீட்டினாள் அவள். இவருவரும் தேநீர் அருந்தினர். அவளுக்கு அவன் இனித்தான். அவனுக்கு அவள் இனித்தாள். இருவருக்கும் வாழ்க்கை இனித்தது.

இந்த சம்பவத்துக்குப் பிறகு மறுநாள் அலுவலகத்தில் இருந்து வரும்பொழுது ஒரு மணிக்கூடு வாங்கி வந்தான் அவள் கணவன். அந்த மணிக்கூடுதான் இன்றும் அந்தச் சுவற்றில் தொங்கிக் கொண்டிருக்கிறது.

மனைவி தவறு செய்யும்பொழுது அந்தத் தவறுக்குக் காரணம் என்ன? என்பதை அறிந்து மேலும் தவறு செய்யாமல் இருப்பதற்கு வழி வகுத்துக் கொடுப்பதுதான் தாம்பத்தியத்துக்கு இன்றியமையாதது. கணவனின் கடமையும்கூட. இந்தக் கடமையைக் கணேசன் அறிந்திருந்தான். அதைச் செய்தும் கொடுத்தான். அந்தச் செய்கையால் காலம் அறிந்து காரியம் செய்வது என்ற நியதி அவள் வாழ்க்கையில் நிலை பெற்று விட்டது. கணவனுடைய கடமை ஒழுங்கு பெற மனைவிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்புணர்ச்சி ஏற்பட்டது. அதனால் அவளுடைய தாம்பத்தியமும் ஒழுங்கு பெற்றது.

மணி நாலரை டா...ண்! என்றடிக்கும்பொழுது தேநீருடன் கணவனை எதிர்பார்ப்பாள் செல்லம்மாள். அந்த நாலரை மணிதான் அவளுடைய இன்ப வாழ்க்கையின் திறவு கோலாக அமைந்திருந்தது. காலையில் எட்டரை மணிக்குக் காரியாலயம் செல்வான் கணேசன். மதியபோசனம் ஒரு வேலைக்காரி மூலம் கிடைக்கும். திரும்பவும் நாலரை மணிக்குத்தான் வீட்டுக்கு வருவான். அந்த இடத்தில்தான் அவர்களின் வாழ்க்கையின் இனிமை ஆரம்பமாகும். சொல்லப்போனால் அந்த நாலரை மணிதான் அவர்கள் தாம்பத்தியத்தின் தலைவாசலாக அமைந்திருந்தது. இன்றும் அந்தத் தலைவாசல் இருந்தது. ஆனால்! அதைத் திறக்க அவன் இல்லை.

செல்லம்மாள் சேலைத் தலைப்பால் தன் கண்களைத் துடைத்துக் கொண்டாள். சன்னல் வழியே வந்த குளிர்காற்று செல்லம்மாளின் பார்வையை வெளி உலகத்துக்கு இழுத்தது. திரும்பவும் தன் வெறிச்சிட்ட பார்வையை சன்னலுக்கு வெளியே ஓட விட்டாள். அப்பொழுதுதான் மழை பெய்ய ஆரம்பித்தது. மழையென்றால் அவள் கணவனுக்குத்தான் எவ்வளவு பிரியம்? மழை பெய்து கொண்டிருக்கும்பொழுது அவன் சொல்வான்.

“வேலை செய்யாமல் சம்பளம் தருவதற்கு யாராவது இருந்தால், மழைக்காலத்தைப் போல் மகிழ்ச்சியான காலம் வேறெதுவும் இருக்க முடியாது. அதிலும் மழை பெய்யும் பொழுது அடுப்புக் கருகில் உட்கார்ந்து மனைவிக்கு ஒத்தாசை செய்தால் உடம்புக்கும் மனதிற்கும் குளிரே தாவ முடியாது!” என்று.

அவன் சொல்லும் இந்த வார்த்தைகளிலிருந்து ஒன்றைக்கூட அவள் மறக்கவில்லை. மழை காலத்தில் அவன் வீட்டில் இருக்கும் பொழுதெல்லாம் காரமாக ஏதாவது செய்து கொடுப்பாள். அதைத்தான் எவ்வளவு ருசித்துச் சாப்பிடுவான் அவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லம்மாள் கண்ணீர் மறைத்துக் கொண்டிருந்த தனது கண்களால் திரும்பவும் மணிக்கூட்டைப் பார்த்தாள். அது எப்பொழுதும்போல் தன் வேலையைச் செய்து கொண்டிருந்தது.

மணிக்கூடும் மனித வாழ்க்கையும் ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகள். மனித வாழ்க்கையில் ஒரு வினாடி கூட மணிக் கூட்டின் உதவியின்றிச் செல்வது கிடையாது மனிதன் தன் வாழ்க்கையையே மணிக்கூட்டிடம்தான் ஒப்படைத்திருக்கிறான்.

இதே மணிக்கூடு செல்லம்மாளின் வாழ்க்கையில் புஷ்பத் தொட்டிலில் படுத்துறங்கும் அனுபவத்தைக் கொடுத்திருக்கிறது. ஆனால் அதே மணிக்கூடு இன்று இரத்தம் வடியும் வெட்டுக் காயத்தில் ஐடினை ஊற்றுவதுபோன்று எரிவைக் கொடுத்துக் கொண்டிருந்தது.

அப்பொழுது செல்லம்மாள் கர்ப்பிணியாக இருந்தாள். வாழ்க்கையில் முதல் அனுபவம் இனிமையானதுதான். "பிரசவம் பயங்கரமானது." என்று பலர் சொல்லியும் செல்லம்மாள் அந்த முதல் அனுபவத்தை மகிழ்ச்சியுடன் எதிர்பார்த்திருந்தாள். அவளுக்கு மாதம் நெருங்கிக் கொண்டிருந்தது. இப்பொழுதெல்லாம் அவள் இரவில் சாப்பிடு வதில்லை. இல்லையென்று சாப்பிட்டாலோ, நெஞ்சில் கல்லை ஏற்றியது போன்ற அவஸ்தைதான். அன்றிரவு தூக்கமே இருக்காது. இது ஒரு குழந்தைக்குத் தகப்பனாகும் நாளை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் கணேசனுக்குத் தெரியாமல் போனது ஆச்சரிய மில்லை. ஆனால்! செல்லம்மாளும் இதை அவனுக்குச் சொல்ல வில்லை, சில சமயம் செல்லம்மாள் சாப்பிடவில்லை என்று அவன் அறிந்து விட்டால் அவனும் சாப்பிட மாட்டான். எப்படியும் சாப்பிட வைத்த பிறகுதான் அவனும் சாப்பிடுவான். செல்லம்மாள் அதிகம் பிடிவாதம் செய்தால், அவனுடைய கடைசி ஆயுதம் இதுதான்.

"நான் உன் அன்புக் கணவன். உன்னை விட ஐந்து வருடம் முந்திப் பிறந்தவன் நான் சொன்னால் நீ சாப்பிட மாட்டாயா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படிக் கொஞ்சலும் கெஞ்சலுமாகப் பேசும் கணவனை மீற முடியாமல் சாப்பிட்டு விடுவாள். வாழ்க்கையிலே அவளை முந்திப் பிறந்த கணவன் மரணத்திலும் அவளை முந்தி விட்டானே.

செல்லம்மாள் தன் இரு கரங்களாலும் தன் முகத்தை மூடிக் கொண்டு விம்மினாள்.

*"டா...ண்! டா...ண்!"*

செல்லம்மாள் நிமிர்ந்து பார்த்தாள் மணி ஐந்து! இந்த ஐந்து மணி அடிக்கும் பொழுது அனேகமாக அவள் கணவனுடன் தேநீர் அருந்திக் கொண்டிருப்பாள். அந்த நேரம் தான் எவ்வளவு இனிமையாக இருக்கும்! வாழ்க்கையில் கழியும் ஒவ்வொரு வினாடியும் மிகவும் பெறுமதியானது என்று புத்தகத்தில் படித்த ஞாபகம் அவளுக்கு. என்றாலும் வாழ்க்கையில் கழியும் ஒவ்வொரு வினாடியும் மிகவும் இனிமையானது என்பதை அவளுடைய தாம்பத்தியத்தில்தான் அனுபவித்திருக்கிறாள். கடந்த பத்து வருட காலமாக இந்த ஐந்து மணி அடிக்கும்பொழுது இருந்த மனநிலை வேறு இன்றிருக்கும் நிலை வேறு. அன்றும் இன்றும் அந்த மணிக்கூடு ஐந்து மணியை ஒரே சுருதியில்தான் அடித்துக் கொண்டிருக்கிறது. ஆனால்! அவளுடைய வாழ்க்கை தான் சுருதி மாறிவிட்டது! சுருதி மாறி விட்டதா? ஒரு தந்தியறுந்த அபசுரம் பேசிக் கொண்டிருக்கிறது.

முதல் பிரசவம் ஆஸ்பத்திரியில்தான் நடைபெற வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருந்தான், கணேசன். பிரசவ காலம் நெருங்கி விட்ட சமயம் அரசாங்க அலுவலாக கணேசன் வெளியூர் போக வேண்டி வந்துவிட்டது. செல்லம்மாளுக்குத் தைரியம் சொல்லி விட்டு அவன் போய் விட்டான். அவன் போன மறுநாள் வழக்கம் போல் மருத்துவ பரிசோதனைக்காகச் சென்றாள் செல்லம்மாள். ஆஸ்பத்திரிக்குப் போகும்போதே அவள் இடுப்பு நரம்புகள் கடுத்துக் கொண்டிருந்தன. செல்லம்மாளுக்கு அதன் அர்த்தம் புரியவில்லை. வீட்டுக்கு வரும்பொழுது மணி பதினொன்றாகி விட்டது. செல்லம்மாளின் தாயார் ஏதோ கசாயம் போட்டுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்தாள், ஆனால்! இரண்டு மணிக்கெல்லாம் பிரசவ வேதனை ஆரம்பித்துவிட்டது. மருத்துவத் தாதி வந்தாள் சரியாக மணி ஐந்தடிக்கும்பொழுது குழந்தை பிறந்து விட்டது.

குழந்தை பிறக்கும்பொழுது கணேசன் இல்லை இதை நினைத்து அந்த பிரசவ நேரத்தில் செல்லம்மாள் அழுதாள். இரண்டு நாள் கழித்து கணேசன் வந்தான். குழந்தை பிறந்து விட்டதை அறிந்து மகிழ்ச்சியுடன் செல்லம்மாளின் அறைக்குள் ஓடினான். கணவனைக் கண்டதும் செல்லம்மாளின் கண்களில் நீர் மல்கியது.

"செல்லா?" என்றான் கணேசன். அந்த அழைப்பில் எல்லாவற்றையும் மறந்தாள் அவள். அந்த அழைப்பின் இனிமையில் கண்களை மூடிக்கிடந்தாள். அவள் கண்களில் இருந்து நீர் வடிந்தது. அவன் அவள் பக்கத்தில் உட்கார்ந்து குழந்தையைப் பார்த்தான் அது நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தது. செல்லம்மாளின் தலையை வருடிக் கொண்டே கணேசன் கேட்டான்.

"நான் உன்னைத் தனியாக விட்டு விட்டுப் போய் விட்டேன் என்று பயந்தாயா?" என்று.

அவள் பதில் சொல்லவில்லை. அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள், அவன் அவள் கையை எடுத்து தன் தாடையில் வைத்து அணைத்தபடி சொன்னான்.

"நீ பயப்படக் காரணமே இல்லை. என் உயிர் உன் பக்கத்தில் தானே இருந்தது!"

அவள் தலையைச் சரித்துக் குழந்தையைப் பார்த்தாள். அவளால் ஒரு வார்த்தை கூடப் பேச முடியவில்லை. அந்த இனிமையிலே அவள் வாயடைத்துப் போய்விட்டது. கணேசன் மேலும் சொன்னான்.

"உன் அன்புக்கு இன்னொரு பங்காளி தோன்றிவிட்டாள் இனி என்னை யார் கவனிக்கப் போகிறார்கள்?"

செல்லம்மாள் அவன் கன்னத்தைக் கிள்ளினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இடத்தில் செல்லம்மாள் தன் எண்ணத்தை நிறுத்திக் கொண்டாள், மேலும் தொடர்ந்தால் அவள் உள்ளம் வெடித்து விடும்போல் இருந்தது.

செல்லம்மாள் மணிக்கூட்டைப் பார்த்தாள். கண்களுக்குத் தெளிவாகத் தெரியவில்லை. இருட்டு அந்த அறைக்குள் மெது வாக வந்து கொண்டிருந்தது. யாரோ வரும் சத்தம் கேட்டது. செல்லம்மாள் தன் பார்வையைக் கதவுப் பக்கம் திருப்பினாள். அவளுடைய மூத்த குழந்தை 'ரமணி' வந்து கொண்டிருந்தாள்.

"அம்மா! இருட்டுக்குள் உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்களே? விளக்கைப் பொருத்தட்டுமா?" என்று கேட்டாள் ரமணி.

"வேண்டாம் அம்மா! நான் பொருத்திக் கொள்கிறேன்" என்றாள் செல்லம்மாள்.

விளக்கு வெளிச்சத்தை விட இப்பொழுது இருள்தான் அவளுக்கு ஆறுதல் அளிக்கக் கூடியதாக இருந்தது.

ரமணி வாடிய முகத்துடன் அறையை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தாள். மகளிடம் செல்லம்மாள் சொன்னாள்.

"ரமணி! கதவைச் சாத்தி விட்டுப் போம்மா!" என்று.

ரமணி கதவை அடைத்துவிட்டுச் சென்றாள். இருந்த வெளிச் சமும் மறைந்து இருள் எங்கும் இடம்பெற்றுவிட்டது. இப்பொழுது செல்லம்மாள் இருளுக்குள் இருளாய் ஒன்றிப் போய் விட்டாள். ஆனால்? அவளுடைய தாம்பத்தியம் எப்பொழுதோ இருளுக்குள் ஒன்றி விட்டதே!...

*- 1952*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதி

வாழ்க்கையும் வாழ்வதற்கு வேண்டிய வழிவகைகளும் தெரிந்தவர்கள் இருக்கிறார்கள். உலகமும் உலகத்தின் உண்மையும் தெரிந்தவர்கள் இருக்கிறார்கள். சமூகமும் அதன் சாக்காடும் தெரிந்தவர்கள் இருக்கிறார்கள். ஆனால்! சிந்திப்பவர்கள்தான் மிகக் குறைவு.

தெரிந்ததைச் சிந்திப்பதில்லை, சிந்தனையில் கண்ட உண்மையை வாய் விட்டுச் சொல்வதில்லை. இந்த இரண்டையும் பின்னணியாகக் கொண்டதுதான் பெரிய மனிதத் தன்மை. இந்தப் பெரிய மனிதத் தன்மையால்தான் சமூகமே சாக்காடாகி விட்டது, ஏன்? மனிதனுமல்லவா பிணமாகிவிட்டான்.

வெறுப்புடன்மேசையில்கிடந்த கடிதத்தைப் பத்தாவது தடவையாகப் படித்தேன். அந்தக் கடிதம் சற்று நேரத்துக்கு முன்தான் என் கையில் கிடைத்தது.

"நீண்ட காலமாக உங்களை இந்தப் பக்கமே காணவில்லை. உங்கள் நண்பர் (என் கணவர்) பயங்கரமான சூழ்நிலையில் சிக்கிச் சிதைந்து கொண்டிருக்கிறார். ஒரு முறை எங்கள் வீட்டுக்கு வாருங்கள். வந்து நல்ல புத்திமதியைச் சொல்லுங்கள் அவருக்கு. ஆண்டவன் உங்களைக் காப்பாற்றுவான்."

*உங்கள் சகோதரி*
*சமீமா*

கடிதத்தைப் படித்து விட்டுத் திரும்பவும் சிந்திக்க ஆரம்பித்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரஷீத்! இதுதான் என் நண்பர்களின் பெயர். எவ்வளவு நல்லவன், பள்ளிக்கூட வாழ்க்கையில் ஒழுக்கத்துக்கும் நேர்மைக்கும் உதாரணமாக இருந்தவன். அந்த ஒழுக்கமும் நேர்மையுமல்லவா அந்தப் பணக்காரக் குடும்பத்துக்கு மாப்பிள்ளையாக்கியது. ஆனால்! இன்று அவனுடைய நிலை என்ன? அவனாகத்தான் மாறினானா? அல்லது ஏதோ ஒன்று அவனை மாற்றி விட்டதா? புரிந்துகொள்ள முடியாத ஒரு பிரச்சினை இது.

ரஷீதின் இந்த மாற்றத்தைப் பற்றிச் சமீமாவிடம் கேட்டுத்தான் தெரிந்து கொள்ள வேண்டும். இப்படியொரு எண்ணம் தோன்றியது எனக்கு.

விவாகமான தம்பதிகளின் வாழ்க்கையில் ஏற்படும் கோளாறு களைத் தீர்க்க வேண்டுமானால் கணவன் மனைவி இருவரையும் நெருங்கித்தான் முடிவு கட்ட வேண்டும். ஆனால்! சமீமாவை நெருங்க முடியாதே? இவள் இஸ்லாமியப் பெண்!

“ஆண்களின் கொடூரமான பார்வையில் இருந்தும் பெண்களைக் காப்பாற்றுங்கள்” என்று நபிகள் நாயகம் கூறியிருக்கிறார்கள், என்பது உண்மைதான். ஆனால்! ஆண்களின் கருணையான பார்வையில் இருந்தும் பெண்களைக் காப்பாற்றுங்கள் என்று யார்! தீர்க்க தரிசனம் கூறியிருக்கிறார்களோ எனக்குத் தெரியாது. நான் தெரிந்து கொண்டதெல்லாம், இந்தச் சமூகப் பெண்கள் உண்மையும் உலகமும் தெரியாமல் முட்டாள் தனத்தில் சாயந் தோய்த்தெடுக்கப்பட்டவர்கள் என்பதுதான்.

“ஆண்டவன் உங்களைக் காப்பாற்றுவான்” என்று முடிவடையும் கடிதம் இன்னும் என் மேசை மேல்தான் கிடக்கிறது. இப்படி எத்தனையோ பேர் என்னை ஆசீர்வதித்து இருக்கிறார்கள், ஆனால் யாருடைய வாழ்த்துதலும் இன்னும் பூர்த்தியாகவில்லை. ஏனென்றால் வாழ்க்கையில் அவ்வளவு கஷ்டம் எனக்கு. ஒரு சமயம் ஆண்டவன் அருள்தான் இந்தக் கஷ்டமோ? எது எப்படி இருந்தாலும் நண்பன் ரஷீதைக் காணவேண்டும். அவன் வாழ்க் கையில் சூழ்ந்துள்ள பயங்கரமென்ன? என்பதையறிய வேண்டு மென்ற எண்ணத்தில் அவன் வீடு நோக்கி நடந்தேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் மங்கிக் கொண்டிருந்தது. மலர்க் கரங்கள் மனை விளக்கேற்றும் நேரம். நான் அவன் வீட்டு வாசலில் நின்றேன். ஆம் ஆறு மாதங்களுக்குப் பிறகு நான் எனது நண்பன் வீட்டின் வாசலில் நின்று அவனைக் கூப்பிட்டேன்.

"உம்!" என்று ஒரு முரட்டுச் சத்தம் வீட்டுக்குள் இருந்து வந்தது. அதை அடுத்து ரஷீத் வந்தான். என்னைக் கண்டதும் அவன் தன்னைச் சரிப்படுத்திக் கொண்டு, சிரிக்க முயன்றான். அவன் என் தோளில் கையைப் போட்டுக் கொண்டே சொன்னான்.

"எனக்குத் தெரியும் நீ என்றாவது ஒரு நாள் என்னிடம் வருவாய் என்று."

"அது எப்படித் தெரிந்தது உனக்கு?" என்றேன் நான்.

"ஆறு மாதங்களுக்கு முன் என்னிடம் சண்டை போட்டுக் கொண்டு போகும்போதே எனக்குத் தெரியும். என்னை வெறுத்துத் தள்ள உன்னால் முடியாது என்று. ஏனென்றால் நம்முடைய நட்பு அப்படிப்பட்டது."

அவன் வார்த்தைகள் என் உள்ளத்தைத் தொட்டன. அந்த வார்த் தைகளோடு கலந்து வந்த குடி நாற்றம் என் மூக்கைத் துளைத்தது. இருவருமாக அவன் ரூமுக்குள் நுழைந்தோம். வழியில் கதவு சாத்தும் ஓசை கேட்டு நான் திரும்பிப் பார்த்தேன் ரஷீத் ஒரு கதவைச் சுட்டிக் காட்டி, "அதோ உன் தெய்வீக சகோதரி? உன்னைக் கூடக் கண்ணால் பார்க்கமாட்டாள். கதவிடுக்கால்தான் பார்ப்பாள்."

இதைச் சொல்லிவிட்டுச் சிரித்தான் அவன். நான் தலையைக் குனிந்து கொண்டேன். அவனுடைய ஏளனமான வார்த்தைகள், புரிந்துகொள்ள முடியாமல் இருந்த அவன் வாழ்க்கையின் மர்மக் கதவைத் திறந்துவிட்டது போல் இருந்தது எனக்கு. சிரித்துக் கொண்டே ரூமுக்குள் நுழைந்து ஒரு நாற்காலியில் உட்கார்ந்தேன்.

"உனக்கு ஒரு புதுமை தெரியுமா?" என்றான் ரஷீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“என்ன?” என்று ஆவலுடன் கேட்டேன்.

அவன், இஸ்லாமியப் பெண்களின் குறைபாடுகளைக் குடி போதையிலும்கூட வெகு தெளிவாகச் சொல்லிக்கொண்டு போனான்.

அவனுடைய அந்த வார்த்தைகள் மேலும் அவனுடைய வாழ்க் கையைத் தெளிவாக்கியது எனக்கு. ஏமாற்றப்பட்ட உள்ளம் சமூகத்தைப் பார்த்து நையாண்டி செய்கிறது. இது அவனுடைய இன்றைய நிலை அந்த நிலையை எனக்குப் புரிய வைத்தான் அவன்.

அவன் சிரித்தான். சிரித்துக் கொண்டே மேசை மீது பக்க வாட்டில் உட்கார்ந்தான். பக்கத்தில் இருந்த விஸ்கி போத்தலை எடுத்து கிளாசில் ஊற்றிக் குடித்தான். பிறகு என்னைப் பார்த்து சிகரட் பாக்கெட்டை நீட்டினான். அவன் நன்றாகக் குடித்திருந் தான், அவன் கண்கள் சிவந்திருந்தன. நான் ஒரு சிகரட்டை எடுத்துப் பற்றவைத்துக் கொண்டே கேட்டேன்.

“இந்த சாக்கடைத் தண்ணீர் இருந்து விட்டால் இந்த உலகத்தில் வேறெதுவும் உனக்குத் தேவை இல்லை அல்லவா?”

“அவன் சிரித்தான். மேசை மீது கையால் ஓங்கி அடித்த படி சிரித்தான். பிறகு அவன் சொன்னான்.”

“இதுவா சாக்கடைத் தண்ணீர்? இந்த உலகம், இந்த சமூகம் வீடு, நீ, நான், எல்லாமே சாக்கடைத் தண்ணிதான். ஆனால்! இது தன் உருவத்தை மாற்றவில்லை! அவ்வளவுதான்.”

மேசை மீது இருந்த விஸ்கி போத்தலைத் தன் மார்புடன் அணைத்துக்கொண்டு சோகமாக என்னைப் பார்த்தான். பிறகு மங்கிய குரலில் சொன்னான்.

“நண்பா! இதைச் சாக்கடைத் தண்ணி என்று நீ சொல்கிறாய்? ஆனால்! இதுதான் என் உலகம், வாழ்க்கை, மனைவி எல்லாம்! இப்படி நான் சொல்வது உனக்கு ஆச்சரியமாக இருக்கலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால்! இது என்னை அதன் பக்கம் இழுக்கவில்லை என்றால்? உன் நண்பன் இன்று இருக்கமாட்டான். ஒன்று ஊரை விட்டு ஓடி இருப்பான் அல்லது உயிரை விட்டிருப்பான்!"

"குடிகாரனாக வாழ்வதைவிட உயிரை விடுவது எவ்வளவோ மேல்" என்றேன் நான்.

"நான் குடிகாரன் என்று நீ சொல்கிறாய், நீ மட்டுமென்ன? இந்தப் பகுதியே அப்படித்தான் சொல்கிறது! ஆனால்! நான் ஏன் குடி காரனானேன்? என்று உனக்குத் தெரியாது, இந்த உலகத்தைக் கேள். அது உனக்கு பதில் சொல்லாது, ஆனால்! என் உள்ளத்தைக் கேள் அது நீண்ட கதையை உனக்குச் சொல்லும்."

அவன் கொஞ்சம் விஸ்கியை அருந்தி விட்டு மீண்டும் சொன்னான்.

இயற்கை, மனிதனுக்கு எவ்வளவோ கடமைப்பட்டிருக்கிறது. மனிதனும் இயற்கைக்குக் கடமைப்பட்டிருக்கிறான். இயற்கை யால் மனிதன் சிறந்தான், மனிதனால் இயற்கை சிறந்தது. இந்த இரண்டு சக்திகளுக்கும் மத்தியிலேதான், வாழ்க்கை, அறிவு, ஆராய்ச்சி என்ற தத்துவங்கள் பிறந்தன. வாழ்க்கைக்குத் தத்து வங்கள் உதவாது என்கிறார்கள். மனிதனே தத்துவமாக இருக்கும் பொழுது தத்துவம் பேசக் கூடாது என்று சொன்னால் அதற்கு அந்த அர்த்தமிருக்கிறதா?"

இப்படி ஒரு கேள்வியைப் போட்டு விட்டு என்னைப் பார்த்தான் ரஷீத். நான் ஏதாவது பதில் சொல்லுவேன் என்று அவன் எதிர் பார்த்திருக்க வேண்டும். என்றாலும் நான் ஒன்றும் சொல்ல வில்லை. அவனுடைய இந்தத் தத்துவங்களுக்கு பதில் சொல்ல வார்த்தைகள் இல்லை என்னிடம். நான் அவனையே பார்த்துக் கொண்டிருந்தேன். அவன் கொஞ்சம் குடித்துவிட்டு திரும்பவும் பேசத் தொடங்கினான்.

"கணவன், மனைவி என்றால் உறவும் உடலும் மட்டும் தானா? உள்ளத்திற்கு அதில் பங்கு கிடையாதா? இன்று இந்த இஸ்லாமியக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பங்கள் இருதயமில்லாத வாழ்க்கை தானே வாழ்ந்து கொண்டிருக்கின்றன. ஊரோடு ஒத்து வாழ வேண்டும் என்பதற் காக நியாயங்கள் கட்டுப்படுத்தப்பட வேண்டுமா?"

"இயற்கை மனிதனுக்கு எண்ணற்ற இன்பங்களை வாரிக்கொடுத்துக் கொண்டு இருக்கின்றது. அந்த இன்பத்தைத் தடை செய்ய, ஒரு சமூகத்தின், சாதியின், பழைமையும் பண்பும் குறுக்கிடுமானால், அந்த சாதியைப் பற்றிச் சமூகத்தைப் பற்றிக் குறிப்பிடுவதற்கு என்ன இருக்கிறது? காலைச் சூரியனின் கதிரொளியும், மாலைத் தென்றலும், முன்னிரவுச் சந்திரனும் இஸ்லாமியப் பெண்களின் ஜென்ம விரோதிகளா? இயற்கையின் இன்பத்தையும், புதுமையின் அழகையும் அனுபவிக்கக் கணவன் தனித்து நிற்க வேண்டு மானால்! வாழ்க்கையில் மனைவியின் பங்குதான் என்ன?"

இந்த இடத்தில் அவன் தன் பேச்சை நிறுத்தினான். பிறகு ஒரு சிகரட்டைப் பற்ற வைத்துக்கொண்டு திரும்பவும் பேசினான்.

"வாழ்க்கையில் மனைவியின் பங்கு என்ன? என்று தெரிந்து கொள்ளாத பெண்களால் இந்த மனித குலத்திற்கு எவ்வளவு நஷ்டம் தெரியுமா? இது நம் சமூகத்துக்கே ஒரு பெரும் சாபக் கேடு, கட்டுப்படுத்தப்படாத தொத்து நோய் மாதிரி. இந்த முட்டாள்தனம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. இந்த நிலைமையில் வாழ்க்கை எப்படிச் சுகமடைய முடியும்? இந்த சமூகத்துக்கு என்றொரு அகராதி ஏற்படுத்தினால் அதிலே மனைவி என்ற பெயருக்கு "அடிமை என்றுதான் பொருள் கொடுக்க வேண்டி வரும்! நம் சமூகத்துக்கு வெட்கமே கிடையாது."

அவனுடைய பேச்சு நின்றது. மழை பெய்து ஓய்ந்த மாதிரி ஒடிந்துபோன அவனுடைய உள்ளம் சிந்திய வார்த்தைகள், அவர் களுடைய வாழ்க்கையை வெகு இலகுவாகத் திறந்து காட்டின. என்றாலும் அவனுடைய மனதை மாற்ற வேண்டுமென்ற எண்ணத்தில், நான் மெதுவாகச் சிரித்துக் கொண்டு சொன்னேன். "தனி மனிதனின் செய்கைக்கு ஒரு சமூகத்தைக் குறை கூறுவது தவறு" என்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தனி மனிதனின் செய்கையல்ல. நமது சமூகத்தின் பெண்களே அப்படித்தான்" என்றான் அவன்.

"பெண்கள் ஆண்களின் ஆதரவில் வாழ்பவர்கள். அவர்களுக்கு விளக்கம் கொடுக்க வேண்டியவர்கள் நாம்தானே?" என்றேன்.

மாணிக்கத்தைச் சேற்றில் மறைப்பவர்கள் அவர்கள்! நம் புத்தி மதிகளை முந்தானையால் மூடுபவர்களிடம் என்னத்தை எதிர் பார்க்கிறாய் நீ?

அவனுடைய கேள்விக்கு பதில் கிடைக்கவில்லை : எனவே சமாதானம் கூறும் பாவனையில்,

"வாழையடி வாழையாக வந்து விட்ட பழக்கம் அது. பொறுத்துப் போக வேண்டியது நம்முடைய கடமையில்லையா?"

"மனைவியின் கடமை தெரியாதவர்களுக்கு, கடமை செய்ய நான் தயாராக இல்லை, கடமை என்ற ஒன்றுக்காக என்னையும் என் உள்ளத்தையும் உயர்த்திக் கொள்ள நான் விரும்பவில்லை. பொருத்துப் போக எனக்கு நேரமில்லை. வாழ்க்கையை விரும் பித்தான் விவாகம் செய்தேன். அந்த விவாகத்தில் எனக்கு வாழ்க்கை கிடைக்கவில்லையென்றால் நானாக ஒரு பாதையை அமைத்துக் கொண்டு வாழ்வது என்ன தவறு?"

"அமைத்துக் கொண்ட பாதையில் வாழ்க்கை கிடைக்குமென்று எதிர்பார்க்கிறயா?" என்றேன் நான்.

"இழந்த பிறகு எதிர்பார்ப்பதற்கு என்ன இருக்கிறது?" என்றான் அவன்.

"ஒன்றுமில்லாதபோது ஒரு பெண்ணை ஏன் துன்பத்துக்குள் தள்ள வேண்டும்?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"துன்பம் அது அவளாக ஏற்படுத்திக் கொண்டது. அதை முற்றாக அனுபவிக்க வேண்டியவள் அவள்தான். எனக்கு வேண்டியது அமைதி!" அவ்வளவுதான்.

இதைச் சொல்லிவிட்டு அவன் திரும்பவும் குடித்தான். பிறகு சொன்னான்.

"அந்த அமைதிக்காக, மன ஆறுதலுக்காகத்தான் குடிக்கிறேன். இந்தக் குடியினால் உள்ளத்தை மறக்கிறேன் உலகத்தை மறக் கிறேன் ஏன்? என் உடலையே மறந்து விடுகிறேன். இந்த மறதி யிலே ஒரு அமைதி கிடைக்கிறது. அந்த அமைதியே எனக்குப் போதும்."

இதைச் சொல்லிவிட்டுப் பக்கத்தில் கிடந்த படுக்கையில் விழுந்து படுத்துக் கொண்டான். நான் சிறிது நேரம் அவனையும் அவனது வாழ்க்கையையும் சிந்தித்துக் கொண்டிருந்து விட்டு அவனைப் பார்த்தேன். "ரஷீத்" என்று கூப்பிட்டேன். பதில் கிடைக்க வில்லை. குதிரை மூச்சு விடுவதுபோல் இருந்தது அவனுடைய மூச்சு. அவனையே சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தேன் மணி எட்டடித்தது. திரும்பவும் "ரஷீத்" என்று கூப்பிட்டேன். பதில் அவனுக்கும் அவன் மனைவிக்கும் இல்லை, இடையே ஏற்பட்டிருக்கும் இடைவெளியை நிரப்ப என்னிடம் எதுவும் இல்லை! எழுந்து நின்று "ரஷீத்" என்று கூப்பிட்டேன் பதில் கிடைக்கவில்லை.

"வருகிறேன் நண்பா! என்று சொல்லிக் கொண்டே வெளியே வந்தேன். நான் வருவதை உணர்ந்த ரஷீதின் மனைவி சமீமா! தன் அறைக்கதவைச் சாத்திக் கொண்டாள்! உலகம் இருண்டு கிடந்தது. அந்த இருளுக்குள் நுழைந்து நடந்தேன் வீட்டை நோக்கி.

நாலைந்து நாட்களுக்குப் பிறகு ஒருநாள் கண்விழித்தெழுந்த பொழுது என் மனைவி சொன்னாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உங்கள் நண்பர் ரஷீத் மறைந்தாகி விட்டாராம்!" என்று.

செய்தி கேட்டு என் உயிர் மயங்கியது. நீண்ட நேரத்திற்குப் பிறகு ஒரு பெருமூச்சு வெளி வந்தது. அதை அடுத்து வந்த வார்த்தைகள் இவை.

"நீ விரும்பிய அமைதி உனக்குக் கிடைத்து விட்டதா? நண்பா!"

*- 1952*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நத்தார் பண்டிகை

பகலெல்லாம் மார்கட்டில் சுற்றிக் கொண்டிருந்த தானியேல் பசிக்களை மிகுதியால் மரக்கறிக் கடையின் ஒதுக்குப் புறத்தில் போய் படுத்துக் கொண்டான்.

உணவருந்திப் பசியைப் போக்கும் இந்த உலகத்தில், நித்திரை யால் பசியைப் போக்குவது தானியலின் புதிய கண்டுபிடிப்பு! பசியைப் போக்க அந்த வழி மட்டும் அவனுக்குக் கிடைக்க வில்லையென்றால், ஏதாவது ஒரு ஹோட்டலுக்குள் புகுந்து பசி தீருமட்டும் சாப்பிட்டு விட்டு காசு கொடுக்காமல் வெளியேற வேண்டும்! இது அவனால் செய்ய முடியாத காரியம். எனவே யாருக்கும் தொல்லை இல்லாமல் நித்திரையை நிகூஷ்டயாக்கிக் கொண்டான்.

'தேவகுமாரன் மறுபடியும் இந்த உலகத்தில் அவதரிப்பார்' என்பதில் நம்பிக்கை இல்லாவிட்டாலும், தேவகுமாரன் தன்னை அடியோடு கைவிடமாட்டார் என்ற நம்பிக்கையில் மார் கட்டுக்குள் சுற்றித் திரிந்து ஏதாவது கூலிவேலை செய்து தன் காலத்தைக் கழித்து வந்தான் அவன். மார்க்கட்டில் எப்பொழுதும் கூலி கிடைக்குமென்று சொல்ல முடியாதுதான் சில சமயம் ஒன்றுமில்லாமலும் போய்விடும். அன்றைக்கும் அப்படித்தான் ஒன்றும் கிடைக்கவில்லை. பசியைப் போக்கப் படுக்கையில் விழுந்து விட்டான்.

மனிதன் சன்னலை அடைத்தால் கடவுள் கதவைத் திறந்து விடுவார் என்று அவன் தாய் அடிக்கடி சொல்லுவாள். ஆனால்! அவன் வாழ்க்கையில் மனிதன் தான் கதவை அடைத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்குப் பதிலாகக் கடவுள் மார்க்கட்டில் கிடைக்கும் கூலி மூலம், இலேசாகச் சன்னலைத் திறந்து காட்டிக் கொண்டிருந்தார். என்றாலும் அன்று கடவுளும் சன்னலை அடைத்து விட்டார்! அதனால்தான் அவனுக்கு ஒன்றும் கிடைக்கவில்லை. எனவே பசியை ஏமாற்ற நித்திரையில் தஞ்சம் புகுந்தான் அவன்.

தானியல் பசியை மறக்கடிக்கும் உபாயத்தில் இருந்து கண் விழித்தபொழுது உலகம் நன்றாக இருட்டிக் கிடந்தது. மார்க் கட்டின் மத்தியில் இருந்த மின்சார விளக்கு பனிப்புகையினூடே மங்கலாகத் தெரிந்தது. உடம்பை முறித்து சுடக்கு விட்டுக் கொண்டே எழுந்து நடந்தான் தானியல். உலக வாழ்க்கையில் எவ்வித இலட்சியமும் இன்றி சலனமற்ற நிலையில் நடந்தான் அவன்.

நத்தார் பண்டிகையைக் கொண்டாட உலகம் நெருப்புடன் விளையாடிக் கொண்டிருந்தது! தேவகுமாரன் பிறந்ததையும் பிறக்கப் போவதையும் எண்ணி மகிழ்ச்சியடைந்த மனிதர் கூட்டம் காசைக் கொடுத்துத் தலையிடியை விலைக்கு வாங்கிக் கொண்டிருந்தது. ஊரின் நான்கு திசைகளிலும் இருந்து வரும் வெடிச் சத்தங்கள் ‘இன்று நத்தார் பண்டிகை’ என்பதை ஞாபகப் படுத்திக் கொண்டிருந்தன. அவன் வானத்தை நிமிர்ந்து பார்த் தான். வானத்தில் தாரகைகள் தெளிவாக இல்லை. பனிப்புகை மறைத்துக் கொண்டிருந்தது. குளிர் காற்றால் அவன் உடல் சிலிர்த்தது. தனது இரு கைகளையும் மார்பில் கட்டிக் கொண்டு, நகரத்தின் மத்தியில் இருந்த பாலத்தில் ஏறிக் கொண்டிருந்தான் அவன்.

பாலத்தின் மத்தியில் தொங்கிக் கொண்டிருந்த மெர்க்குரி விளக்கு வெளிச்சம் தானியலின் கறுத்த உடம்பில் இலேசான நீல நிறத்தைப் பூசியது.

எண்ணெய் படாத சிக்கேறிய தலை. கழுத்தில் கருத்த நாடாவில் தொங்கிக் கொண்டிருக்கும் கறுத்துப் போன அலுமினியத்தினாலான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலுவை. அழுக்கேறிய பைஜாமாசாரன், இவைதான் தானியல் அல்லது தானியல்தான் அவை என்றபடி அமைந்திருந்தது அவனது தோற்றம்.

பாலத்தில் இருந்து வீசிய குளிர் காற்றில் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள, பாலத்தின் சுவரோரம் ஒண்டி உட்கார்ந்து கொண்டான். பக்கத்தில் இருந்த பஸ் கொம்பனியில் மணி பத்தடித்தது! தெருவில் போய்க் கொண்டிருந்த வாலிபர்கள் ஒரு யானை வெடியைக் கொளுத்திப் பாலத்தின் மத்தியில் போட்டனர். அது வெடித்த சத்தம் தானியலின் மனதில் ஒரு சலனத்தை உண்டாக்கி விட்டுப் போயிற்று.

இன்றைக்கு பதினைந்து வருடங்களுக்கு முன் தானியலுக்கு பத்து வயதிருக்கும். இது போன்ற ஒரு நத்தார் பண்டிகை தினம். நாலைந்து நாள் காய்ச்சலுக்குப் பின் கொஞ்சம் குணமடைந் திருந்தான் தானியல். என்றாலும் அவனால் நடக்க முடியவில்லை. எனவே அவன் தாயார் “தானி! நத்தார் பிரார்த்தனையை வீட்டி லேயே செய்வோமா?” என்று கேட்டாள். தானியலும் ‘ஓம்!’ என்றான் பிரார்த்தனைக்கு ஆயத்தம் செய்தாள் அவன் தாய்.

நன்றாக அலங்கரிக்கப்பட்டிருந்த ஒரு பீடத்தில் பாலன் பிறந்த கதையைச் சித்தரிக்கும் படம் ஒன்று வைக்கப்பட்டிருந்தது. பீடத்தைச் சுற்றி மெழுகுதிரிகள் எரிந்து கொண்டிருந்தன. தானியலின் தாய் பீடத்துக்கு முன்னால் உட்கார்ந்தாள். தானியலும் அவள் பக்கத்தில் உட்கார்ந்திருந்தான். தாய் தேவ கீதம் பாடினாள். சின்ன தானியலும் தனக்கு தெரிந்தவரை முணுமுணுத்தான்.

பாலன் பிறப்பதற்குச் சற்று நேரம் இருந்தது. தானியலின் தாய் பக்திப் பரவசமாகப் பாடிக் கொண்டிருந்தாள். குழந்தை தானியல் உலகத்தை மறந்து தூங்கிக் கொண்டிருந்தான். “டூ...ம்!” மாதா கோவில் பீரங்கி அலறியது. அந்தச் சத்தத்தில் “அம்மா!” என்றலறியபடி எழுந்தான் தானியல். பீரங்கிச் சத்தத்துக்கில்லாத சக்தி குழந்தையின் அம்மா என்றழைப்புக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது! பாட்டை நிறுத்தி விட்டுத் தானியலைப் பார்த்தாள் அவன் தாய். தானியல் படுக்கையில் உட்கார்ந்து அங்குமிங்கும் பார்த்து விழித்துக் கொண்டிருந்தான். விசயத்தை உணர்ந்து விட்ட அவன் தாய் சொன்னாள்.

"பாலன் பிறக்கப் போகும் சமயத்தில் தூங்கலாமா? அதுதான் கடவுள் கோபித்துப் பீரங்கிச் சத்தம் போட்டு எழுப்பினார்!" என்று.

"தூங்கினால் கடவுள் கோபித்துக் கொள்வாராம்மா?" தானியல் கேட்டான்.

எரிந்துபோன மெழுகு திரிகளுக்குப் பதிலாக வேறு மெழுகு திரிகளை ஏற்றி வைத்துக் கொண்டே அவள் சொன்னாள்.

"உம்....! கோபித்துக் கொள்வார்! அவர் கோபித்துக் கொண்டால் உனக்குப் பட்டுச் சட்டை தரமாட்டார். உன் காய்ச்சலைச் சுகமாக்க மாட்டார்! தெரியுமா?" என்றாள்.

"சரியம்மா! நான் தூங்கமாட்டேன்" என்று சொல்லி விட்டு முழங்காலில் உட்கார்ந்து பிரார்த்தனை செய்வதுபோல் பாவனை செய்தான் தானியல்.

தாயார் சிரித்துக் கொண்டே, "தானி பாலன் பிறந்தார் என்ற பாட்டைப் பாடுகிறேன் நீயும் பாடு" என்றாள். அவனும் அவளோடு சேர்ந்து பாடினான். சிறிது நேரம் பாடிவிட்டுச் சொன்னாள்.

"தானி! பீடத்தைப் பார் பாலன் பிறக்கப் போகிறார்" என்று.

தானியல் பீடத்தை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் தாய் பீடத்தை மறைத்திருந்த ஒரு வெள்ளைத் துணியை அகற்றினாள். அங்கே செலோலைட்டினாலான ஒரு பாலன் பிறந்திருந்தார்! தானியலுக்கு ஏதோ அற்புதம் நிகழ்ந்த மாதிரி இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அம்மா! பாலன் பிறந்தாச்சி!" என்று சொல்லி மகிழ்ச்சியுடன் கை தட்டினான்.

அதன் பிறகு அவ்வளவு இனிமையான நத்தார் பண்டிகை தானியலுக்குக் கிடைக்கவில்லை! ஏனென்றால் அடுத்த பண்டி கைக்கு முன் அவன் தாயார் இறந்து விட்டாள்! இல்லை கொலை செய்யப்பட்டாள்!

தெருவில் ஏற்பட்ட ஆரவாரம் தானியலின் சிந்தனையைக் கலைத்தது. அவன் நிமிர்ந்து பார்த்தான். வர்ண விளக்குகளால் அலங்காரம் செய்யப்பட்ட ஒரு கரோல் பஸ் வண்டி பாலத்தின் மேல் அவனைத் தாண்டிப் போய்க் கொண்டிருந்தது. அதில் இருந்தவர்கள் ஆடிப்பாடிக் கொண்டிருந்தனர். அந்த பஸ் அவன் பார்வையில் இருந்து மறையும் வரை பார்த்துக் கொண்டிருந் தான். பஸ் மறைந்ததும் வானத்தைப் பார்த்தான் வானம் இன்னும் தெளிவடையவில்லை! பனிப்புகை மூடியிருந்தது. மணி பதினொன்று.

வெகு நேரமாக அடங்கிக் கிடந்த பசி தானியலின் வயிற்றைக் குடைந்தது. வலது கையால் வயிற்றைத் தடவிக் கொடுத்தபடி நிமிர்ந்தான். பாலத்தின் இரு ஓரங்களிலும் சனங்கள் நடந்து கொண்டிருந்தார்கள். சாரி சாரியாக நல்ல கிறிஸ்தவர்கள் அந்த நடு நிசியில் கோவிலுக்குப் போய்க் கொண்டிருந்தார்கள். பட்டு உடையும் பாதித் தூக்கமும் முட்டி மோத நடந்து கொண்டிருந் தார்கள் அவர்கள். சிறு வயதில் அவள் தாய் இருந்த காலத்தில் இதேபோன்று இந்த நேரத்தில் கோவிலுக்குப் போயிருக்கிறான் அவன். ஆனால் இன்று?

தாய் இல்லாத காரணமோ அல்லது தன்னைப் போல் மற்றவர் களையும் நேசிக்கும் தன்மையற்ற காரணமோ? என்னவோ? கிறிஸ்தவர்களின் முக்கியமான தினத்தில் அனாதையாக தெருவோரத்தில் ஒதுங்கிக் கிடந்தான் அவன். தாயைப் பற்றி அதிகமாக அவனுக்கு ஒன்றும் தெரியாது. அவள் ஒரு 'நர்ஸ்'! யாரோ ஒருவன் ஏதோ ஒரு காரணத்துக்காக அவளைக் கொலை செய்து விட்டான்! அவ்வளவு தான் அவனுடைய முன்னறி தெய் வத்தைப் பற்றி அவன் தெரிந்து கொண்டதெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதையில் நடந்து கொண்டிருந்த மனிதன் ஒருவன் அவன் காலில் இடறி விட்டுத் திரும்பிக் கூடப் பார்க்காது போய்க் கொண்டிருந்தான். தானியல் அந்த அவசரப் பிரகிருதியைப் பார்த்து விட்டுத் தன் கால்களை இன்னும் கொஞ்சம் அதிகமாக முடக்கிக் கொண்டான்.

நத்தார் பண்டிகையின் நடு இரவுப் பிரார்த்தனைக்கு முதலாவது அழைப்பு மணி மாதா கோவிலில் ஒலித்தது. மணியோசையைக் காது கொடுத்துக் கேட்டுக் கொண்டிருந்தான் தானியல். பாலன் பிறக்கும் வைபவத்தைக் காண கிறிஸ்தவர்களை அழைக்கிறார்கள். ஏன் நானும் போனால் என்ன? பனிரெண்டு வருடங்களுக்குப் பிறகு இப்படியொரு எண்ணம் தோன்றியது அவனுக்கு! குனிந்து தான் உடுத்தியிருந்த கிழிந்து போன பைஜாமாவை பார்த்தான் பிறகு ஏதோ ஒன்றை எண்ணிச் சிரித்தான்!

"உன்னைப்போல் அயலானையும் நேசி" இந்த வாக்கியத்தை தானியலின் வாய் முணுமுணுத்தது. புத்தாடை புனைந்து பிரார்த்தனையில் ஈடுபட்டிருக்கும் ஆயிரம் ஆயிரம் கிறிஸ்த வர்களுக்கு மத்தியில் இந்த அழுக்கேறிய உடையுடன் அவன் எப்படிப் போவான்."

"சுளீர்" தானியலின் வயிற்றுக்குள் பசி குத்தியது! இனி அவனால் அந்த வேதனையைத் தாங்க முடியாது. எப்படியாவது ஏதாவது சாப்பிட வேண்டும். தானியல் தன் இருப்பிடத்தை விட்டெழுந் தான். எழுந்து நடந்தான். அவர் பார்வை எல்லையற்று இருந்தது. அவன் நடையும் ஜீவனற்று இருந்தது. சற்றுத் தூரம் சென்றிருப் பான். விளக்கு வெளிச்சம் அவன் கண்களைக் குத்தியது. தலையைத் தூக்கிப் பார்த்தான். வர்ண விளக்குகள் அலங்கரிக் கப்பட்டிருந்த மாதா கோவிலைக் கண்டான்.

வர்ண விளக்குகளுடன் போட்டி போட்டுக் கொண்டு ஆடவரும் பெண்டிரும் அலங்கார உடையணிந்து கோயிலுக்குப் போய்க் கொண்டிருந்தனர். இந்தக் காட்சியைக் கோயிலின் தலைவாசலில் நின்று பார்த்தான் தானியல். புனிதமான தினத்திலே பரிசுத்தமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்தவர்களுக்கு முன்னால் தன்னை ஒரு காட்சிப் பொருளாக வைக்க விரும்பாதவன்போல் கோயில் சுவரோரமாக இருந்த இருட்டுக்குள் தன்னை மறைத்துக் கொண்டான்.

"ஆராதனைக்கு நேரமாச்சி இன்னுமென்ன செய்றீங்க! கெதியா வாங்க."

சத்தம் வந்த திசையில் தலையைத் திருப்பிப் பார்த்தான். அவனுக்கு நேரே ரோட்டுக்கு மறுபுறத்தில் இருந்த வீட்டுப் படியில் நின்று வீட்டுக்குள் இருந்தவர்களைத் துரிதப்படுத்திக் கொண்டிருந்தாள் ஒரு முதியவள். தானியல் உற்றுப் பார்த்தான். "திரேஸா ஆன்ரீ!" ஆச்சரியத்துடன் முணுமுணுத்தான் அவன்.

திரேஸா ஆன்ரியை அவனுக்கு நன்றாகத் தெரியும். அவனுடைய தாய் இருந்த காலத்தில் எத்தனையோ முறை அந்த வீட்டுக்குப் போயிருக்கிறான் அவன். "சின்ன தானி! சின்ன தானி! என்று திரேஸா ஆன்ரி முத்தமிடாத நாள் ஒன்று கூட இருக்காது. ஆனால்! இன்று?

அவன் திரும்பவும் அந்த வீட்டுப் பக்கம் தன் பார்வையை ஓடவிட்டான். அப்பொழுதுதான் அவசரவசரமாக வெளியே வந்து கொண்டிருந்தது. ஒரு இளம் ஜோடி!

"கெதியா வாங்க! கெதியா வாங்க!" என்று சொல்லிக் கொண்டே திரேஸா ஆன்ரி படி இறங்கினாள். அந்த இளம் ஜோடி அவளைப் பின் தொடர்ந்தது. தானியல் தன்னை இருளுக்குள் நன்றாக மறைத்துக் கொண்டான். அவர்கள் அவனைத் தாண்டிச் சென்றனர்.

"என்ன? திரேஸா ஆன்ரிக்குப் பின்னால் செல்பவள் லீலாவா?" அவன் வாய் முணுமுணுத்தது.

ஆச்சரியத்துடன் கண்களை அகலத் திறந்து பார்த்தான். ஆம் லீலாதான்! சிறு வயதில் அவனுடன் ஆடிப்பாடித் திரிந்த அதே லீலாதான்! இன்று எவ்வளவு பெரியவளாகி விட்டாள்? அவளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கணவனும் வந்து விட்டான். இன்னும் சில காலத்தில் அவளுக்கு ஒரு குழந்தையும் வந்துவிடும். "லீலா?" அவன் அடிவயிற்றில் இருந்து கிளம்பியது அந்தச் சத்தம். அவன் கண்கள் மலர்ந்து கலங்கியது.

"கதவுக்குப் பூட்டுப் போட்டியா லீலா?" திரேஸா ஆன்ரி கேட்டாள்.

"இல்லையம்மா சும்மாதான் சாத்திவிட்டு வந்தன்" லீலா சொன்னாள்.

மூவரும் சற்றுத் தயங்கினர். திரேஸா ஆன்ரி சொன்னாள்.

"சரி, சரி நேரமாகுது. வாங்க இந்த நேரத்தில் எந்தக் கள்ளன் வரப் போறான்?"

மூவரும் கோயிலை நோக்கி நடந்தனர்.

அவர்கள் கோயிலுக்குள் நுழையும் வரை பார்த்துக் கொண் டிருந்தான் தானியல்.

அவன் வயிற்றுப் பசி விஸ்வரூபம் எடுத்தது. பசியைப் போக்க அவன் வழக்கமாகக் கையாளும் தூக்கத்தை எதிர்பார்த்தான். தூக்கம் வரவில்லை பசிதான் வந்தது.

"வேறு வழியில்லை. திரேஸா ஆன்ரியின் வீட்டுக்குள் நுழைய வேண்டியதுதான்."

இந்த எண்ணம் தோன்றியதற்குப் பின் தயக்கமும் தோன்றியது. வாழ்க்கையில் ஒரு நாளும் செய்யாத ஒரு காரியத்தைச் செய்யத் தூண்டியது அவன் பசி! "திரேஸா ஆன்ரியின் வீடுதானே?" இப்படியொரு கேள்வியோடு சமாதானம் கிடைத்தது அவனுக்கு, வேறு வழியில்லை. அடிமேல் அடி வைத்து வீட்டுக் கதவடிக்கு வந்தான். அவன் உடல் இலேசாக நடுங்கியது. தைரியத்தை வர வழைத்துக் கொண்டு கதவைத் திறந்தான். நடு ஹோலுக்குள் விளக்கெரிந்து கொண்டிருந்தது மேசையின் மீது கிறிஸ்த்துமஸ் கேக், வாழைப்பழம், சில பண்டிகைப் பலகாரங்கள் எல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்காக வைக்கப்பட்டிருந்தன. இரண்டெட்டில் மேசையை அணுகினான். ஒரு கேக்கை எடுத்துச் சாப்பிட்டான். வாழைப் பழம், பிஸ்கட், பலகாரம் இப்படியே மூன்று வளையம் வரும் பொழுது வயிறு நிரம்பிவிட்டது. இப்பொழுது தண்ணீர் தேவைப் பட்டது. பக்கத்தில் இருந்த ஒரு கண்ணாடி அலுமாரிக்கு மேல் ஒரு சிறிய கண்ணாடிக் கூசாவில் தண்ணீர் இருந்தது. தண்ணீர் கூசாவை எடுத்தான். என்ன ஆச்சரியம்? கண்ணாடிக் கூசாவுக்குப் பக்கத்தில் ஒரு தங்க மோதிரம் இருந்து மின்னிக் கொண் டிருந்தது! தானியல் ஸ்தம்பித்து விட்டான். அது தங்க மோதிரம் தானா? தங்கத்தை இங்கே ஏன் போடுகிறார்கள் பித்தளை மோதி ரமாக இருக்குமோ? தானியல் தன் மனதைத் தட்டிக் கழித்துவிட்டுத் தண்ணீரைக் குடித்தான். திரும்பவும் அவன் மனம் அந்த மோதிரத்தைச் சுற்றி வந்தது. கையில் எடுத்து விளக்கு வெளிச் சத்தில் பார்த்தான். "ஓம் தங்கந்தான்!" மோதிரத்தை இருந்த இடத்தில் வைத்தான். பிறகு அங்கிருந்து திரும்பினான். அவன் கண்களில் சிகரட் தென்பட்டது. ஒரு சிகரட்டை எடுத்துப் பற்ற வைத்தான். நேராக வாசலுக்கு வந்தான்.

"மனிதன் சன்னலை அடைத்தால் கடவுள் கதவைத் திறப்பார்?" என்ற வாக்கியம் ஞாபகத்துக்கு வந்தது. திறந்த கதவைச் சாத்தி விட்டு தெருவில் இறங்கி நடந்தான் அவன்.

"பாலன் பிறந்தார் பாவிகளை மீட்க" என்ற பாடலோசை கோயி லுக்குள் இருந்து வந்தது.

தானியல் ஒரு ஏப்பம் விட்டு விட்டு நடந்தான். நத்தார் பண்டிகை மற்றவர்களை விட வயிறு நிரம்பி இனிமையாக இருந்தத அவனுக்கு.

"பாலன் பிறந்தார் பாவிகளை மீட்க" என்ற பாடலை முணு முணுத்தபடி நடந்தான் தானியல்.

*- 1953*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருட்டறை

உலகம் நன்றாக இருண்டு கிடந்தது. கிராமத்தை விட்டு ஒதுங்கித் தனியாக இருந்தது கிழவி சகீனாவின் குடிசை. இருட்டுக்குள்ளே இருளை அடக்கிக் குருட்டுத் தவம் செய்து கொண்டிருந்த அந்தக் குடிசையின் முற்றத்தில் உட்கார்ந்து ஏதோ சிந்தித்துக் கொண் டிருந்தாள் கிழவி சகீனா! இருட்டோடு ஒட்டிக் கொண்டிருந்த சகீனாவின் குடிசை இருளடைந்து கிடப்பதை உணர முடியா தபடி சிந்தனைக்கு இடம் போட்டுக் கொடுத்திருந்தாள். நேற்று வரை பொழுதோடு விளக்கேற்றி வைத்துவிட்டு மறு காரியம் பார்க்கும் அவள் இன்று எல்லாவற்றையும் மறந்து யோசித்துக் கொண்டிருந்தாள்.

அறுபது வருடங்களுக்கு முன் ஒருநாள் அந்தக் குடிசையில்தான் சகீனா பிறந்தாள். இன்று வரை அந்தக் குடிசையில்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறாள். அவளுக்கு முன் அவள் தாய் தந்தையர்கள். அவர்கள் தாய் தந்தையர்கள் என்று எத்தனையோ தலைமுறைகள் இருந்து மடிந்து விட்டார்கள் அந்தக் குடிசையில். இது அவளுடைய முறை.

அறுபது வருடங்கள் எப்படியோ உயிரோடு இருந்து விட்டாள்.

அறுபது வருடங்கள்!

நாளைக்கு இருப்பது நிச்சயமில்லை என்று சொல்லும் இந்த உலகத்தில். அறுபது வருடங்கள் நீண்ட காலம்தான். இந்தக் காலத்திலே நேற்று வரை ஏற்படாத கலக்கம் கவலை. சிந்திக்க வேண்டிய சந்தர்ப்பம் இன்று அவளுக்கு ஏற்பட்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறக்குறைய அவளுடைய பந்துக்கள் எல்லாரும் செத்து மடிந்து விட்டார்கள். இந்த நிலையிலும் கூட அவள் ஒரு நாளும் கவலைப்பட்டது கிடையாது. அந்தக் கிராமத்தில் உள்ளவர் களுக்கு முன்னாலும் அவள் கவலையற்றவளாகத்தான் காணப் பட்டாள். வாழ்க்கையில் எல்லாவற்றையும் தாங்கிக் கொள்ளும் சக்தியுள்ளவர்கள் என்ற எண்ணத்தில் தலை நிமிர்ந்து நடந்தவள் அவள். இதற்குக் காரணம் அவள் மனதில் கொண்டிருந்த பெருமிதம் தான். அந்தப் பெருமிதத்துக்கும் காரணம் இருக்கத் தான் செய்தது. அதில் ஒன்று அறுபது வருடங்கள் இந்த உலகத்தில் வாழ்ந்து விட்ட நம்பிக்கை. மற்றது அவள் மகன் ரஸாக் இருக் கிறான் என்ற தைரியம். இந்த இரண்டிலும்தான் அவளுடைய வாழ்க்கையின் பிடிப்பு இருந்தது.

வாழ்க்கையில் நம்பிக்கையற்றுத் தளர்ந்து போகும் நேரங்களி லெல்லாம் அவள் தனக்குள்ளேயே சொல்லிக் கொள்வாள்.

"எனக்கென்னடி கொறைச்சல்? அறுபது வருசம் இந்த ஒலகத்துல சீவிச்சிட்டன். கடைசி காலத்துக்கு ஒரு மகன் இருக்கான் வேல யப்பாரு" என்று.

இந்த நம்பிக்கையிலேதான் அவள் வாழ்க்கை தொங்கிக் கொண் டிருந்தது. இந்த நினைப்பில்தான் தள்ளாத வயதிலும் தலை நிமிர்ந்து நடக்க முடிந்தது, அவளால்.

ஆனால், எந்த நம்பிக்கையில் வாழ்ந்தாளோ அந்த நம்பிக்கையில் அவள் மகன் மண்ணையள்ளிப் போட்டு விட்டான். அந்த மண் அவள் மனதில் கிடந்து கரித்தது! அதிலே வேதனையோடு ஏமாற்றமும் வழிந்தது.

கையில் இருந்த அப்பத்தை காகம் பறித்துக் கொண்டு பறக்கும் பொழுது குழந்தையின் மனநிலை எப்படி இருக்குமோ அப்ப டித்தான் இருந்தது, அவளுடைய மன நிலையும்.

யாருக்காக இந்த உலகத்தில் இன்னும் கொஞ்ச காலம் வாழ வேண்டும் என்று நினைத்தாளோ? யாருடைய தைரியத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊன்று கோலாகக் கொண்டு வாழ்ந்தாளோ? அந்த மகன் அவள் வாழ்க்கையை அர்த்தமற்றது என்று சொல்லிவிட்டான்! அவள் உயிரோடிருந்த அறுபது வருட வாழ்க்கையையும் வெட்ட வெளியாக்கி விட்டான்.

இந்த நிலையிலும் அவள் தனக்குள்ளே முணுமுணுத்துக் கொண் டாள்! இந்த முணுமுணுப்பு வாழ்க்கையில் பழகிப் போன ஒன்று.

"உனக்கென்னடி கொறைச்சல்? இந்த உலகத்துல அறுபது வருசம் சீவிச்சிட்டா....!"

இந்த வார்த்தைகள் முடிவதற்குள் அவள் மகன் சொன்ன வார்த் தைகள் ஞாபகத்துக்கு வந்தன. அந்த ஞாபகத்திலே தந்தி அறுந்த வீணை போல, சுருதியற்றுப் போய்விட்டது, அவளுடைய முணு முணுப்பு. ஒரு பெருமூச்சு விட்டபடி எழுந்து குடிசைக்குள் புகுந் தாள். அப்பொழுதுதான் இரவாகி விட்டதை அவள் உணர்ந்தாள்.

"அடி! நாசமானவளே! இன்னும் விளக்கேத்தல்ல?" என்று தன்னைத்தானே நொந்து கொண்டு இருட்டில் தட்டுத்தடுமாறி விளக்கை ஏற்றி வைத்தாள்.

செய்வதற்கு வேலை இல்லை. கிழவியின் மனம் இருந்த நிலையில் எதையும் செய்ய ஊக்கம் இல்லை. எனவே வழக்கமாகப் படுக்கும் இடத்தில் தனது கிழிந்த பாயை விரித்து அதில் உட்கார்ந்தாள்.

"ரஸாக் சாப்பிட வருவானே!" என்ற எண்ணம் சுழன்றது. "வந்தா லென்ன? மதியச் சோறு இருக்குது திம்பான்" என்று தனக்குள்ளேயே சமாதானம் செய்து கொண்டாள்.

இந்த இடத்தில் திரும்பவும் ரஸாக் சொன்ன வார்த்தைகள் உள்ளத்தில் கோடு கிழித்துக் கொண்டிருந்தன. அந்த எண்ணத்தை மறந்து விட முயன்றாள். ஆனால்! எதை மறக்க முயன்றாளோ அதே எண்ணங்கள்தான் செக்கு மாடுபோல் சுற்றிச்சுற்றி வந்து கொண்டிருந்தன. வந்து தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணத்தை மாற்றும் முயற்சியில் தன் இரு கால்களையும் நீட்டிக் கொஞ்சம் சௌகரியமாக உட்கார்ந்து கொண்டாள்.

"வாய் புளிப்பேறிக் கிடக்குது வெத்தில போட்டு எவ்வளவு நேரமாச்சு?"

அவள் கண்கள் வெற்றிலைப் பெட்டியைத் தேடின. கைக் கெட்டிய தூரத்தில்தான் இருந்தது. வெற்றிலைப் பெட்டியை இடது பக்கமாகச் சாய்ந்து இழுத்துப் பக்கத்தில் இருந்த இரும் புலக்கை பக்கமாகக் கிடந்த வெற்றிலை துவைக்கும் உரல் இவைகளை எடுத்து வைத்துக்கொண்டு வெற்றிலை கூட்ட ஆரம்பித்தாள். புகையிலை காய்ந்து சருகாகிக் கிடந்தது!

"நாசமாப் போன மொய்தீன் கடப் போயில எப்பவும் சருகுதான்."

அவள் வாய் வெறுப்பால் கோனியது. வெற்றிலையைப் பக்கு வமாக மடித்து வெற்றிலை உரலுக்குள் வைத்துப் பெருவிரலால் அமர்த்தி விட்டாள். இரும்புலக்கையை எடுத்து உள்ளங்கையில் தேய்த்து துடைத்து விட்டு வெற்றிலை துவைக்க ஆரம்பித் தாள். வெற்றிலைக் கூட்டு இருகி வரும்பொழுது எழுந்த வாசைன கிழவியின் சோர்ந்து போன நரம்புகளுக்கு உற்சாகத்தை ஊட்டியது. சிறிது நேரத்தில் துவைப்பதை நிறுத்தி விட்டு ஆள்காட்டி விரலால் துவையலைத் தோண்டி எடுத்து வாயில் போட்டுக் கொண்டாள். வெற்றிலைச் சாறு உடலுக்கு விறுவிறுப்பைக் கொடுத்தது. அந்த விறு விறுப்பிலே மகனைப் பற்றிய எண்ணங்கள் திரும்பவும் சுழன்றது. கால்களை நீட்டி வலது பக்கமாகச் சரிந்து படுத்தாள் கிழவி. கண்கள் தன்னாலேயே மூடிக் கொண்டன. திரும்பவும் அவள் மகன் பேசிய வார்த்தைகள் ஞாபகத்துக்கு வந்தன.

"போறான் உட்டுட்டு வேலயப்பாரு" அவள் மனதிற்குக் கட்டளை யிட்டாள். மனம் விடுவதாக இல்லை. அது எதிர்நீச்சல் அடித்துக் கொண்டிருந்தது. "அப்படித்தான் என்னத்தச் சொல்லிவிட்டாள்?" இந்தக் கேள்விக்கு அவள் மனம் விடை சொல்ல முயன்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னடா தம்பி! நேரங்காலத்தோட ஊட்டுக்கு வந்துட்டா?" என்று கிழவி கேட்டாள்.

"வராம என்ன செய்யச் சொல்ரா? மாடு மாதிரி ஒழைச்சாலும் புண்ணியமில்ல!"

அலுப்போடு சொன்னான் ரஸாக். அதில் கோபமும் கலந்திருந்தது.

"ஏண்டா தம்பி கோபம்? யாருக்கிட்டயாச்சும் சண்டகிண்ட போட்டுக்கிட்டு வந்தியா...?" கிழவி கேட்டாள்.

"சண்டையா? அவன் மண்டய ஒடச்சிருப்பங்கா தப்பிட்டான், மாட்டுக்கும் மனுசனுக்கும் வித்தியாசம் தெரியாதவன்" என்று கத்தினான்.

"ஏண்டா என்ன நடந்திச்சு?"

"என்ன நடக்கிறகா அவன்ட மாடு வெயிலில நிண்டுச்சாம் வானத்துக்குக் கிளம்பறான்?"

"அவன்ட கொணந்தான் தெரியுமே! நாமென்னத்துக்கு அவன்ட மாட்ட வெயிலில உட்ட?"

"அவன்ட கொணம் அவன்ட ஊட்டுல இருக்கட்டும்கா மாடு தானா பெரிசு? நானும்தான் விடிஞ்சா பொழுதுபட்டா வெயிலில கெடக்கிறன் என்னப் பத்தி யோசிச்சானா?"

"உம்.... நீ ஒலகம் தெரியாத புள்ள, யாரப்பத்தியும் யாரும் கவலப் படமாட்டாங்க. நம்மப்பத்தி நாமதான் கவலப்படணும் வயிறொன்று இருக்குதே!"

"வயித்தப் பாத்தாப் போதுமா? மானத்தக் காப்பாத்தவேனாமா?" என்று கத்தினான் ரஸாக்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“கோவம் பசிய ஆத்தாதுடா தம்பி! நீயென்ன செய்வா ஒனக்குத் தெரிஞ்சது அவ்வளவுதான்” என்றாள் கிழவி.

“ஓ! ஒனக்கு எல்லாந்தெரியும்.” அலுத்துக் கொண்டான் ரஸாக்.

“இன்னொரு தரம் சொல்லுடா? மகனே! நானென்ன ஒலகம் தெரியாதவளா?” கிழவி கொஞ்சம் பெருமிதத்தோடு கேட்டாள்.

“ஒலகம் தெரிஞ்சதனால தாங்கா ஒனக்கு இந்தக் கேடு.” ஒரு வெறுப்போடு சொன்னான் ரஸாக்.

கிழவி தலையைத் தூக்கி மகனைப் பார்த்து விட்டுச் சொன்னாள்.

“எனக்கென்ன கேடு வந்துட்டுதா? இந்த ஒலகத்தில அறுபது வருசம் சீவியம் செஞ்சிட்டன்! ஒன்னப் போல கொழந்தயா நான்?” இருமாப்போடு கேட்டாள் கிழவி.

குழந்தை என்று தாய் சொன்னது ஒரு மாதிரியாத்தான் இருந்தது ரஸாக்குக்கு. என்றாலும் இந்தக் கிழவியோட பேசி முடிவு காண முடியாது என்ற ஒரு முடிவுக்கு வந்த ரஸாக் துண்டை எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டு கேட்டான்.

“ஒலகம் தெரிஞ்ச மாதிரிப் பேசுரியே, ஒன்ட முகம் உனக்குத் தெரியுமாகா?”

இந்தக் கேள்வியைக் கேட்டுவிட்டு அவன் போய் விட்டான். அவனைப் பொறுத்த வரையில் அது சாதாரணமான கேள்வி தான். ஆனால் அவளுடைய மனதையல்லவா அது உலுக்கி விட்டது? அறுபது வருடம் இந்த உலகத்தில் உயிர் வாழ்ந்து விட்டேன் என்ற நம்பிக்கையில் வாழ்ந்து கொண்டிருந்தவளைப் பார்த்து மகன் கேட்ட கேள்வி ஒரு பெரும் தாக்குதல்தான்! அந்தத் தாக்குதலிலே அவள் உயிர் நாடி தளர்ந்து விட்டது. அறுபது வருட வாழ்க்கையும் அர்த்தமற்றதாகி விட்டது! அப்படியானால் என்ன? அவள் முகம் அவளுக்குத் தெரியாதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இடத்தில் கிழவியின் மனம் வாழ்க்கையின் ஆரம்பத்துக்கே சென்று விட்டது.

அப்பொழுது சகீனாவுக்கு ஆறு வயது இருக்கும். ஒரு நாள் அவளுடைய தகப்பனார் ஒரு சிறு தகரப்பெட்டி ஒன்றை வாங்கி வந்தார். பல வர்ணங்களில் சித்திர வேலைப்பாடு செய்திருந்த அந்தப் பெட்டியின் முகப்பில் ஒரு கண்ணாடி பதித்திருந்தது! அந்தச் சின்னஞ் சிறு தகரப்பெட்டி சகீனாவின் குழந்தை உள்ளத்தை வெகுவாகக் கவர்ந்தது. அதில் மயங்கிப்போன சகீனா அந்தப் பெட்டியை ஆயிரம் தடவை புரட்டிப் புரட்டிப் பார்த்தாள். அப்பொழுதுதான் அதில் பதித்திருந்த கண்ணாடியைக் கண்டாள்.

கண்ணாடியைக் கூர்மையாகப் பார்த்தாள் சகீனா! அந்தக் கண்ணாடிக்குள் இருந்து ஒரு குழந்தை சகீனாவை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தது. தன்னைப்போல் ஒரு குழந்தை அந்தப் பெட்டிக்குள் இருந்து பார்த்துக் கொண்டிருந்தது, பெரும் ஆச்சரியத்தைக் கொடுத்தது சகீனாவுக்கு. பெட்டியை எடுத்துக் கொண்டு தாயிடம் ஓடி "உம்மா! இங்கப்பாருங்க இதுக்குள்ள ஒரு புள்ள" என்று சொல்லிக் கண்ணாடியைப் பார்த்தபடி கூத்தாடினாள். இதைப் பார்த்த தாயார் கண்ணாடிப் பெட்டியைப் பறித்துக் கொண்டாள். தன்னுடைய மகிழ்ச்சியைப் பறித்துக் கொண்ட தாயாரைப் பரிதாபமாகப் பார்த்துக் கொண்டு நின்றாள் சகீனா. அழுகை வெளிக் கிளம்ப ஆயத்தமாகிக் கொண்டிருந்தது.

கண்கலங்கி நிற்கும் குழந்தையைப் பார்த்துத் தாய் சொன்னாள். "பொண்ணாப் பொறந்தவள் கண்ணாடி பார்க்கக் கூடாதுடி!" என்று.

"ஏனும்மா?" என்று அழுதுகொண்டே கேட்டாள்.

"சொன்னாக் கேளு சகீனா! ஆகாதென்டா ஆகாது தான் வாய மூடிக்கிட்டு பேசாமப் போ!" என்று தாய் கத்தினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் நின்றால் அடி விழும் என்ற பயத்தால் அங்கிருந்து போய் ஒரு மூலையில் உட்கார்ந்து அன்றையப் பொழுதை அழுது கொண்டே கழித்தது அந்தக் குழந்தை.

அவ்வளவுதான். அதன் பிறகு கண்ணாடியில் முகம் பார்ப்பது ஆகாத காரியமாகி விட்டது சகீனாவுக்கு. அந்த ஆகாத காரியத்தை அதன் பிறகு ஒரு நாளும் அவள் செய்தது கிடையாது. அது மட்டுமா இன்னும் எத்தனையோ காரியங்கள் ஆகாது என்ற காரணத்தால் அவள் வாழ்க்கையை விட்டு விலகிப் போய் விட்டன! அந்த ஆகாது என்ற வார்த்தை அவள் வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியையும் கட்டிப் போட்டுக் கொண்டே வந்திருக்கிறது. இனம் தெரியாத ஒரு சுமையைச் சுமந்து கொண்டுதான் இந்த அறுபது வருடங்களையும் கழித்திருக்கிறாள் அவள்! இன்று அதை எண்ணிப் பார்த்த பொழுது எல்லாம் வெறும் சூனியமாய் வெட்ட வெளியாய் இருந்தது அவளுக்கு!

காலமும் அதன் மாற்றமும் தொட்டுக் கூடப் பார்த்ததில்லை. உலகத்தையும் அதன் போக்கையும் ஒரு நாள் கூட அவள் எண்ணிப் பார்த்ததில்லை. குடிசையைச் சுற்றி இருந்த அந்தத் தட்டு வேலிக் குள்தான் தனது அறுபது வருட வாழ்க்கையையும் கழித்திருக் கிறாள் அவள். அவள் மட்டுமென்ன? இஸ்லாமியப் பெண்களே இப்படித்தான் இருந்திருக்கிறார்கள்.

காலத்தையும் அதன் மாற்றத்தையும் உணராதவர்கள் அறுபது வருடமென்ன? ஆயிரம் வருடங்கள் வாழ்ந்தாலும் அர்த்தமற்ற வாழ்க்கைதான். வாழ்க்கையில் எவ்வளவுதூரம் ஏமாந்துவிட்டோம். இல்லை ஏமாற்றப்பட்டு விட்டோம் என்பதை எண்ணிய பொழுது அவள் உள்ளம் விம்மியது. இருட்டிலே திசை தெரியாத ஒரு இடத்தில் அகப்பட்டுக் கொண்டதுபோல் தத்தளித்தாள். மூச்சுத் திணறியது. மூடியிருந்த கண்களைத் திறந்தாள் குடிசை இருண்டு கிடந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்று நேரத்திற்கு முன் ஏற்றி வைத்த விளக்கு எண்ணெய் இல்லாமல் அணைந்து போயிருந்தது. அதன் திரி மட்டும் புகைந்து கொண் டிருந்தது. அந்தச் சுடர் விளக்கு என்ன தத்துவத்தைப் போதித் ததோ? அவள் அதையே பார்த்துக் கொண்டே இருட்டுக்குள் உட்கார்ந்திருந்தாள்.

உலகமும் அவள் வரையில் இருட்டுக்குள்தான் இருந்தது.

*- 1953*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பைத்தியக்காரன்

அவன் இந்த உலகத்துக்கே ஒரு புதிர்! விளங்காத காவியம்! அவனைப் பற்றி யாருமே சரியாகத் தெரிந்து கொள்ளவில்லை. தெரிந்து கொள்ளாமலே பலப்பல அவனைப் பற்றிப் பேச ஆரம்பித்து விட்டார்கள் இந்த மனிதர்கள்.

மர்மத்தில் மயங்கிப் போகும் மனிதர்கள் கூட்டம் அவனையும் ஒரு மர்மமாக்கிப் பொழுது போக்கியதில் ஆச்சரியமில்லை. ஆனால்! அவனை அதிசயமாக்க அவர்கள் ஆச்சரியமாகிக் கொண்டிருந் ததுதான் புதுமை.

அவர்களுடைய கோணல் பார்வை பல கோணத்தில் இருந்தும் அவனைத் தாக்கிற்று. வாழத் தெரியாதவன். சோம்பேறி, ஊமை, செவிடு என்றெல்லாம் சொல்லித் தங்கள் பேச்சுச் சுதந்திரத்தை உறுதிப்படுத்திக் கொண்டனர். வேறு சிலர் உலகத்தையும் வாழ்க் கையையும் அதிகமாகத் தெரிந்துகொண்ட மனப்பான்மையில் அவனைப் பைத்தியக்காரன் என்றனர். பித்தம் தலைக்கேறியவன் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட வேண்டியவன் என்றெல்லாம் சொன்னார்கள். முடிவில் அவன் பித்தன் என்றே கருதப்பட்டான்.

நாளுக்கு நாள் அவனைப் பித்தன் என்று சொல்லும் மனிதக் கும்பல் அதிகரித்துக் கொண்டே இருந்தது. ஓடுகிறவனைப் பார்த்து நாய் குலைப்பது போல! ஆனால்! அவன் ஓடவுமில்லை ஒதுங்கவுமில்லை. அவன் போக்கே ஒரு தனிப்பாதை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் யாரைப் பித்தன் என்று கூறியதோ? அந்த அவர்கள் அணியில் ஒருவனாக ஆக்கும் தகுதியைத் தெரிந்தோ தெரியாமலோ அவனையும் அந்த வரிசையில் வைத்துப் பார்க்கத் தொடங்கி விட்டார்கள் இந்த மனிதர்கள்.

மானிட சாதியின் சுதந்திரத்துக்குப் பாடுபட்டவர்களை எழுத் தாலும் பேச்சாலும் மனித உள்ளங்களைத் தட்டி எழுப்பிய வர்களை, இலக்கியத்திலே கருத்திலே புதுமையைப் புகுத்திய வர்களைப் பித்தர்கள் என்பதில் அர்த்தமிருக்கிறது.

நடமாடித் திரிந்தவன் முடமாகிப் போனது புரிந்து கொள்ளப் படாத மர்மம்! சுடுகாடு, நடு இரவு. மனித எலும்புக் கூடுகளின் மத்தியில், ஆனந்தக் கூத்தாடினானே அவனையும் "பித்தன்" என்று தான் அழைக்கிறார்கள்.

ஆனால்! அவன்?

அவன் அவனே தான். அவனைப் பற்றித் தெரிந்து கொண்டவனும் அவனாகத்தான் இருக்க முடியும்.

அதோ அவன் வருகிறான். நொண்டி நொண்டி நடந்து வருகிறான். நகரத்தின் முக்கிய பாதை அது. வேகமும் விறுவிறுப்பும் நிறைந்த அந்தப் பாதையில் அவன் சாவதானமாக நடந்து வருகிறான். நாகரீகத்தின் உச்சநிலை, அவசரமும் அகங்காரமும் தான்! என்று முடிவுக்கு வந்துவிட்ட மனிதப் பிரகிருதிகளின் மத்தியில் நிதான மாக நடந்து வருகிறான். அவசரமாகப் போய் வந்து கொண்டி ருக்கும் மனித நடமாட்டத்திலே, கடிவாளம் இடப் பட்ட குதிரை யைப்போல தார் ரோட்டில் நின்று கையை நீட்டுகிறான். ஓடிக் கொண்டிருக்கும் ரெயில் வண்டியில் இருந்து விடுபட்ட ரெயில் பெட்டியைப்போல், அத்தனை பேரில் ஒருவன் ஒரே ஒரு மனிதன் அவன் அருகில் நின்று ஏதோ அவன் கைக்குள் வைத்து விட்டுப் போகிறான். அவன் திரும்பவும் தன் நடையை ஆரம்பிக்கிறான். இதுதான் அவனுடைய முடிவில்லாத பிரயாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியன் சுட்டெரித்துக் கொண்டிருக்கும் நடுப்பகல் அணலைக் கக்கும் தார் ரோட்டு. இந்த இரண்டுக்கும் மத்தியிலே நிதான மாக அடியெடுத்து வைத்து நடப்பான். நடந்து கொண்டே இருப்பான். திடீரென்று ஒருநாள் பயங்கரமான காற்றும் மழையும் அடிக்கும். அப்பொழுதும் அவன் ஓடமாட்டான் ஒதுங்க மாட்டான் அதே நிதானம் அதே நடை! பசி இல்லை பணமும் இருந்ததில்லை அவனிடம். நோயுமில்லை, மருந்தும் தேவைப் படவில்லை, அவனுக்கு. வாழவேண்டுமென்று நினைத்தவனு மில்லை சாவைப் பற்றிச் சிந்தித்தவனுமில்லை. பயமுமில்லை கடவுளுமில்லை அவனுக்கு! விருப்பு வெறுப்பற்று வாழ்க்கையின் எல்லைக் கோட்டுக்கப்பால் நின்று உலகத்தை ஏளனமாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

விருப்பு வெறுப்பற்றவன் ஒரு துறவிதான். என்றாலும் துறவிகள் தங்கள் உடலைப் பாதுகாத்துக் கொள்ள எப்பொழுதும் மறந்த தில்லை. ஆனால்! அவன்? பைத்தியக்காரன் இவை எல்லா வற்றிற்கும் அப்பாற்பட்டவன். ஆம் அவன் மனிதன்! அவனுடைய கதை?...?

மாயா லோக தத்துவத்தைத் தாண்டி மனித வாழ்க்கையை மரணப் பாதையில் இருந்து தடுக்க ஏற்பட்டதுதான் வைத்தியம். அதன் வெற்றி முற்றுப் பெறாத சம்பவம்! அத்தகைய வைத்திய மாணவனாகப் பயிற்சி பெற்று கொண்டிருந்தவன்தான் சுந்தரம். ஆனால் அவன் உடல் தத்துவத்தை மறந்து போனது ஆச்சரிய மில்லை. உள்ளத்தை ஆராய வேண்டிய சமயத்தில் எண்ணத்தை இழந்து போனதுதான் அதிசயம்.

அன்று வழக்கம்போல் சுந்தரம் வகுப்பறையில் நுழைந்தான். அங்கே அப்பொழுது இருதய நோயைப் பற்றிய விரிவுரை நடந்து கொண்டிருந்தது. அவன் தன் ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டே இடது புறம் திரும்பிப் பார்த்தான். அவன் உள்ளம் அடித்துக் கொண்டது...! ஆசையும் அவசரமும் முட்டி மோதியது. எப்பொழுது வகுப்பு முடியும் என்பதுதான் அவனுக்குக் கவலை. இந்த இரண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளாக யாரைக் காணாமல் துடிதுடித்தானோ அவள் வகுப்புக்கு வந்திருந்தாள். ஆம் அவனுடைய உயிர் கமலா வகுப்புக்கு வந்திருந்தாள்.

வகுப்பிலே இருதய நோய் பற்றிய பேச்சு விரிவுரையாகிக் கொண்டிருந்தது. அதே சமயம் உள்ளம் வேறு இடத்தில் வியாக் கியானம் தேடிக் கொண்டிருந்தது.

கமலா! ஏன் இரண்டு நாளாக வகுப்புக்கு வரவில்லை? வகுப்புக்கு வராமல் எங்கே சென்றிருந்தாள்? ஏன் எதற்காக? இந்தக் கேள்வி களுக்கெல்லாம் விடை கிடைக்கவில்லை அவனுக்கு. அவளைப் பற்றிய இந்த இரண்டுநாள் இரகசியம் விளங்காத புதிர்! முடிவு காண முடியாத வெட்டவெளி?

இருதய நோயைப் பற்றிய விரிவுரை முடிந்துவிட்டது. வைத்திய மாணவர்கள் ஒருவர் பின் ஒருவராக வெளியே போய்க் கொண் டிருந்தனர். சுந்தரமும் அவசரவசரமாக வெளியே வந்தான். கமலா வைச் சந்திக்க விரைந்தான். ஆனால் கமலா போய் விட்டாள்! பெண்கள் விடுதியை நோக்கி வெகுவேகமாகப் போய்க் கொண் டிருந்தாள். சுந்தரம் பின் தொடர்ந்தான் அவள் கிட்டவில்லை. அவனைவிட்டு வெகு தூரம் போய் விட்டாள். பெண்கள் விடு தியின் இரண்டாவது மாடியில் அவள் தன் படுக்கையறையில் நுழைவதை அவன் பார்த்தான். அவள் இவனைத் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. பூமியைவிட்டு வெகு தூரம் உயர்ந்திருந்த அந்த மாடி வீட்டைப் பார்த்தான். அவள் படுக்கை அறையையும் அவளையும் ஒரு பிச்சைக்காரனைப்போல் பார்த்துக் கொண்டு நின்றான்.

ஆயிரம் கேள்விகள் அவன் உள்ளத்தில் தோன்றின. அவனுடைய பார்வையில் இருந்து ஒவ்வொரு பொருளும் மறைந்து கொண்டே இருந்தது. முடிவில் பூதாகரமான ஒரு பெரும் கேள்வி அடை யாளந்தான் அவன் கண்களுக்குத் தென்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் கேள்வி அடையாளத்துக்குள் அவள் காதலி கமலா நின்று கொண்டு மௌனம் சாதித்தாள். அவள் பதில் அளிக்கவில்லை. சுற்றிச் சுழன்று கொண்டிருந்த இருதயத்தை சுய உணர்வால் தாங்கிப் பிடித்தபடி தன் விடுதியை நோக்கி நடந்தான்.

காதல் கதை கண்ணீர் கவிதான். ஆரம்பம் கரைபுரண்டோடும் காட்டு வெள்ளம்! முடிவு தண்ணீர் போன தடம். காய்ந்து வறண்டு வெடித்துப் போன நிலம்தான் மிஞ்சும். காதல் என்றால் வாழ்க்கைத் தோல்வி என்று பொருள் கொடுக்கவில்லை, அகராதி. அனுபவம்தான் அப்படிச் சொல்கிறது.

சுந்தரமும் கமலாவும் ஒரே கிராமத்தில் ஒரே குடும்பத்தில் பிறந்தவர்கள். பெரியவர்களுக்குள் ஏற்பட்ட விரோதம். அந்தச் சிறு உள்ளங்களைச் சுக்கு நூறாக்கிவிட்டது. பெரியவர்களால் அவர்கள் பாதையிலே வெட்டிவிடப்பட்ட பள்ளத்தில் கமலா மிகவும் சுலபமாக விழுந்துவிட்டாள். அத்தோடு சுந்தரமும் இழுத்துச் செல்லப்பட்டான்.

கமலாவின் தந்தை ஒரு கரடு முரடான மனிதர். தனது எண்ணத்தைச் சாதிக்க சுந்தரத்தின் தாய்வழி பைத்தியக்கார சந்ததி என்ற கதையைக் கட்டிவிட்டார். ஒருநாள் சுந்தரத்தையும் அந்த நோய் பாதிக்கும் என்று நம்பச் செய்துவிட்டார் அந்த மனிதர். கமலா சற்று யோசித்தாள். என்ன செய்வது? என்ற கேள்விக்கு விடை கிட்டாமல் திண்டாடினாள். இந்தத் திண்டாட்டத்தைப் பயன் படுத்திக் கொண்டு வேறு ஒரு வாலிபனுடன் முடிச்சுப் போட முனைந்தார் அவள் தந்தை, படிப்பு முடிந்தவுடன் விவாகம் என்ற ஒப்புதலுடன் ஒரு படித்த வாலிபனைத் தேடினார். அவனும் கிட்டி விட்டான்.

இதையறிந்த கமலா கற்சிலையானாள். அவளால் அந்த நிகழ்ச்சியில் இருந்து விடுதலை பெற முடியவில்லை! முயலவில்லை. இந்த வாழ்க்கை ஒப்பந்தத்தின் காரணமாகத்தான் அவள் கல்லூரிக்கு வரவில்லை. இந்த விவகாரங்கள் ஒன்றும் சுந்தரத்துக்குத் தெரியாது. தெரிந்தாலும் என்ன! இதைவிட அதிகமாக நிலை குலைந்து போக அவனிடம் என்ன இருக்கிறது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலை தவறியவன் நெறி தவறவில்லை. நேராகத் தன் விடுதியை நோக்கி நடந்தான். விடுதியிலே ஆறுதல் அளிக்கக் கூடிய இடம் வாசகசாலை ஒன்றுதான். எனவே வாசகசாலைக்குள் புகுந்து ஒரு மூலையில் கிடந்த நாற்காலியில் உட்கார்ந்து சிந்திக்கத் தொடங்கினான்.

"கமலாவின் இந்தச் செயலுக்குக் காரணம் என்ன? நெருப்பிலே பொன்னைப் புடம் போடுவதுபோல் உள்ளத்தை வேதனையில் தள்ளுவது தானா? காதல்! இந்தக் காதலைப் பற்றித்தான் கவிஞர்கள் காவியம் இயற்றினார்கள்? வீம்புக்கு வேட்டையாடி இருக்கிறார்கள் வெறும் புகழுக்காக!

காளிதாசன் காதல் காவியத்தை வானளாவப் புகழ்கிறார்களே எல்லாம் தெரிந்தது போல, அப்படியானால் அவன் இலக்கியங்கள் சமுதாயத்துக்குச் செய்த தொண்டு என்ன? கருத்துக்குப் பொருத் தமற்ற செயல், பண்புக்குப் பொருத்தமற்ற நிலை......சீ......! வாழத் தெரியாத உலகம்.

அவனுடைய சிந்தனையைத் தடை செய்தாள் ஜெயம்!

"என்ன சுந்தரம் உலகத்தை விட்டு ஒதுங்கி விட்டவன்போல் ஒரு மூலையில் உட்கார்ந்து விட்டாய்! நீ இன்றைய பத்திரிகையைப் படிக்கவில்லையா! என்று கேட்டாள்.

சுந்தரம் ஒன்றுமே பேசவில்லை மெதுவாக நிமிர்ந்து அவளைப் பார்த்தான். அப்பொழுது ஜெயம் ஒரு ஆங்கிலச் செய்தித்தாளைப் படித்துக் கொண்டிருந்தாள். அதில்:

"வைத்தியக் கல்லூரி மாணவி கமலா தேவிக்கும், தொழில் நுட்பக் கல்லூரி மாணவன் நடராஜனுக்கும் அரசாங்கச் சட்டப்படி வாழ்க்கை ஒப்பந்தம் செய்யப்பட்டது...."

இந்தச் செய்திக்கு மேல் சுந்தரத்தின் காதில் எதுவும் விழவில்லை! அவன் கண்களில் இருந்து இரண்டு சொட்டுக் கண்ணீர் பூமியில் விழுந்தது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தித்தாளைப் படித்துவிட்டு சுந்தரத்தைப் பார்த்த ஜெயம். அவன் இருந்த நிலையைத் தெளிவாகப் புரிந்து கொண்டாள். சுந்தரமும் கமலாவும் உறவினர்கள் மட்டுமல்ல உள்ளத்தால் ஒன்றுபட்ட காதலர்கள் என்பதையும் உணர்ந்தாள் வேதனைப் பட்டாள்.

“சுந்தரம்! இந்தச் செய்தி உன் உள்ளத்தை பெரும் வேதனைக் குள்ளாக்கி விட்டது என்ன?” என்று கேட்டாள்.

சுந்தரம் சிரித்தான்! அந்தச் சிரிப்பில் காய்ந்து போன சருகு இலை யின் சலசலப்புக் கூட இல்லை. அவன் எழுந்து நின்றான். அவன் அடிவயிற்றில் இருந்து ஒரு பெருமூச்சு வெளிவந்தது. அதன் பிறகு அவன் வாயில் இருந்து வார்த்தைகள் வெளி வந்தன.

“வேதனை உள்ளத்துக்கல்ல ஜெயம்? உலகத்தின் கருத்துக்கு, காதலைக் காவியமாக்கிய கயமைத் தனத்துக்கு! உலகம்! காதல்!! தூ!!!”

அவன் அறிவு கொதித்தது அந்தக் கொதிப்பின் எதிரொலிபோல் அவன் சிரித்தான்!

அந்த எக்காளச் சிரிப்பின் எதிரொலி காதலின் கருத்துக்கு எட்டி யதோ என்னவோ? ஆனால் மனிதர்களின் காதுக்கு எட்டியது. அதனால்தான் அவன் பைத்தியக்காரன்.

- 1952



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாகம்

எழுந்து நின்று பிரசங்கம் செய்வது போன்றதல்ல வளைந்து நெளிந்து வாழ்க்கை நடத்துவது?

மனித சமுதாயத்தின் துன்பங்கள் எங்கே இருந்து ஆரம்பிக்கின்றன? என்பது தீர்க்கப்படாத விஷயம் மட்டுமல்ல, பரிகாரம் கிடைக்காத துர்ப்பாக்கியமும் கூட.

மதமும் வாழ்க்கையும் இரண்டறக் கலந்து கிடக்கும் ஒரு சமூகத்தில் ஏழைகளின் கண்ணீர் துடைக்கப்படாத பிரசங்கங்களினாலோ வேதாந்த விசாரங்களினாலோ எவ்வித பயனுமில்லை.

தன் கண்களிலே துளிர்த்த நீரைப் பெருவிரலால் தொட்டுத் துடைத்து விட்டு புரண்டு படுத்தாள் செயிறம்பு.

வானத்தை முட்டும் மாளிகைகள் எவ்வளவு உண்மையோ அவ்வளவு உண்மை பூமியைத் தொட்டு நிற்கும் மண் குடிசைகளும். அந்தச் சிறிய கிராமத்திலே மனிதத் தன்மையின் இடுப்பு ஒடிந்து விட்ட தரிசனத்தைக் கட்டியங் கூறி நின்றது அந்த ஓலைக் குடிசை. இரண்டு முழ அகலத்தில் ஒரு திண்ணை, கூரைப் பத்திக்கும் பூமிக்கும் மூன்று அடி இடைவெளி அதை மறைக்கும் கைங்கரியத்தைச் செய்து கொண்டிருந்தது ஒரு ஓட்டை விழுந்த சாக்கு.

திண்ணையில் செயிறம்பின் வாப்பா படுத்திருப்பதற்கு அறிகுறியாக இருமல் சத்தம் வந்து கொண்டிருந்தது. திண்ணையின் இடது புறமாக வீட்டின் வாசல் கதவு ஓலைப்படலையின் உருவத்தில், எட்டடிக் குச்சில் என்பார்களே அதுதான் அந்த வீட்டின் பரப்பு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணைந்து போவதற்காக எரிந்து கொண்டிருந்தது ஒரு தகர விளக்கு. அதற்குச் சற்று அப்பால் நாலைந்து மண் பானைகள் சேர்ந்த ஒரு அடுக்கு. பக்கத்திலே சிரட்டையால் மூடிய தண்ணீர் குடம். ஒரு மரப்பெட்டி, மூலையிலே இழுத்துக் கட்டிய கயிற்றுக் கொடி அதிலே கந்தைத் துணிகள். இவைகள்தாம் அந்த வீட்டில் வாழ்க்கையின் நடுவிலே பிதுங்கிய சம்பத்து.

இவைகளுக்கு மத்தியிலேதான் ஒரு கிழிந்த பாயில் படுத்துப் புரண்டு கொண்டிருந்தாள் செயிறம்பு. அவளுக்குத் தூக்கம் வரவில்லை. தூக்கம் எங்கிருந்து வரும்? அடுத்த வீட்டில் கலியாணம்! செயிறம்பின் உயிர்த் தோழி ருக்கியாவுக்கு கலியாணம். கலியாண வீட்டு உணர்ச்சியின் உந்தலுக்கு உள்ளத்தைப் பறிகொடுத்து கூரை முகட்டைப் பார்த்தபடி படுத்துக் கிடந்தாள் அவள்.

செயிறம்பின் வாழ்க்கையில் பின்னிப் பிணைந்து கிடந்த ஒரு உயிர் இன்று மணப்பெண்ணாக மாறி விட்டாள்! நாளை மனைவி பிறகு அவள் பாதை வேறு. ஆனால்! இவள்?

வாழ்க்கையில் இரண்டு வருடங்கள் பிந்திப் பிறந்தவள் ருக்கியா? காது குத்துவதில் இருந்து பூப்பெய்தியது வரை ருக்கியா பிந்தித் தான் வந்தாள். ஆனால் கலியாணத்தில் மட்டும் செயிறம்புவை முந்தி விட்டாளே?

கலியாணத்திற்கு பந்தக்கால் நாட்டி வெள்ளைகட்டி நிறத் தாள்களால் சோடனை செய்தது வரை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள் செயிறம்பு. அந்த வேலைகள் எல்லாம் வேடிக்கை விசயமாகத் தான் தெரிந்தது அவளுக்கு.

ஆனால், அன்று மாலை பெட்ரோ மாக்ஸ் விளக்குகளின் ஒளிக் கதிர்கள் இருளை நீக்கிப் பளிச்சென்று பாய்ந்த பொழுது அவள் உள்ளத்திலும் ஏதோ ஒன்று பாய்ந்தது. அதன் பிறகுதான் அவளுக்கு மெல்ல மெல்ல விசயங்கள் புரிந்தன. புரிந்து கொண்ட பிறகு நெஞ்சை உறுத்தின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலியாண வீடென்றால் இலேசுப்பட்டதா? எத்தனை விதமான கூக்குரல்கள்! அதிகாரக் குரல், அன்புக்குரல், கேலிக்குரல் இத்தியாதி, இத்தியாதி! இவைகளையெல்லாம் கிரகித்தபடி உணர்ச்சிகளை உள்ளடக்க முடியாமல் தவித்துப் போனாள் செயிறம்பு. கலியாண வீட்டிலே ஒரு குரல்

"என்னத்தகா... பார்த்துக்கிட்டு.? பொண்ணுக்கு மருதாணியப் போடுங்க."

இதையடுத்து மற்றொரு குரல்

"மச்சியக் கூப்பிடுகா.... அவதான் போடட்டும் மொதல்ல...."

இந்தச் சத்தங்கள் காதில் விழுந்ததும் செயிறம்பு தன் வலக் கரத்தைப் பார்த்தாள். பத்து நாளைக்கு முன்பு தான் ஹஜ்ஜுப் பெருநாள் வந்து போனது. அன்று கையில் இட்ட மருதாணியின் சாயச் சிவப்பு இன்னும் மறையவில்லை. அதற்குள் இன்னொரு முறையா? இது மணப் பெண்ணுக்கு மருதாணி போடும் சம்பிரதாயம், வழமையான முத்திரை.

மருதாணி போடுவது இஸ்லாமியப் பெண்களுக்கு ஒரு கலை. இந்தக் கலை செயிறம்புக்குக் கை வந்திருந்தது. புத்தி தெரிந்த நாள் முதலாய் பெருநாள் காலங்களில் கைக்கு மருதாணி போட ருக்கியா செயிறம்பை நாடித்தான் ஓடி வருவாள் ஆனால் இன்று?

இயற்கை உவந்தளித்த அழகு, செயிறம்பிடம் பரிபூரணம் பெற்றிருந்தது. இந்த அழகிலே ருக்கியாவுக்குக் கொள்ளை ஆசை. நினைத்த பொழுதெல்லாம் செயிறம்பின் கழுத்திலே தனது இரு கரங்களையும் போட்டு இழுத்து இறுக அணைத்தபடி ருக்கியா சொல்லுவாள்.

"அடி செயிறம்பு! நீ மட்டும் ஆம்பிளையா இருந்தா நான் ஒன்னத்தாண்டி கட்டிக்குவன்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அணைப்பிலே இருவர் மார்பும் இறுகி நிற்கும். இருவருடைய நெஞ்சில் இருந்தும் சூடான மூச்சுக் கிளம்பும். அப்படிப்பட்ட ருக்கியா இன்று ஒருவருக்குக் கழுத்தை வளைந்து கொடுக்க ஆயத்தமாகி விட்டாள். ஆனால் செயிறம்பு?

விழித்துக் கொண்டு படுத்திருப்பது ஒரு பயங்கர சோதனை. சிந்தனைகளுடன் படுக்கையில் புரண்டு அலுத்துப் போன செயிறம்பு எழுந்து வீட்டுச் செத்தையில் இருந்த ஒரு ஓட்டையினூடாகக் கலியாண வீட்டைப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

கண்வழி புகுந்து உள்ளத்தைத் தொட்ட அந்தக் காட்சியிலே உணர்வைச் சுண்டிவிடும் ஒரு சிலிர்ப்பு ஏற்பட்டது அவளுக்கு. புரிந்தும் புரியாத ஒரு உணர்ச்சியின் சீண்டல் உடலெல்லாம் பாய்ந்து பரவியதிலே ஏற்பட்ட ஒரு பரபரப்பு. வாழ்க்கையின் நாதம் அந்தக் கலியாண வீட்டில் இருந்துதான் பிறக்கிறது என்பதை அறிந்து கொண்டது போன்ற ஒரு அங்கலாய்ப்பு.

இளமையின் துருதுருத்த நரம்புகள் சூடேறி இரத்தம் கொதித்துக் குமிழ் விட்டு, வெடித்து வெளியேறுவது போன்ற ஒரு வெதுவெதுப்பு. எல்லாவற்றையும் உதறித் தள்ளிவிட்டு மணப்பெண் இருக்கும் இடத்தில் தான் போய் உட்கார்ந்து கொள்ள வேண்டுமென்கிற ஆவல்! செய்ய வேண்டுமென்ற துருதுருப்பு செய்ய முடியாத பெண்மையின் ஏழ்மை.

இந்தப் போராட்டங்களுக்கு மத்தியிலே உடலெல்லாம் வியர்வை சொட்ட கைகளால் அடிவயிற்றை அமுக்கிப் பிடித்தபடி நின்றாள் செயிறம்பு. செத்தையில் தீ மூட்டுமளவிற்கு அவள் மூச்சு சூடேறி இருந்தது. இந்த சமயத்தில்தான் கலியாணப் பந்தலை நோக்கிக் கூச்சல் போட்டபடி வந்தான் ஒரு சிறுவன்.

"மாப்பிள வாராரு! மாப்பிள வாராரு!!

"மாப்பிள வாராரு!" செயிறம்பு வாய்க்குள் முணுமுணுத்துக் கொண்டாள். தன் விரல்களால் வேலியின் ஓட்டையைப் பெரிதாக்கிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு ஆவலோடு பார்வையைச் செலுத்தினாள். இந்த மாப் பிள்ளையைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை அவளுக்கும் இருந்தது.

ஆறு மாதத்துக்கு முன் இந்த மாப்பிள்ளையைத்தான் செயிறம் புக்குப் பேசினார்கள். ஆனால் அவன் இன்று ருக்கியாவின் மாப் பிள்ளையாக வந்து கொண்டிருக்கிறான்.

செயிறம்புவிற்கு இந்தப் பையனை மாப்பிள்ளையாக எடுக்க முயற்சி செய்தார் அவள் தந்தை. முயற்சி பலிக்கவில்லை. சீதனம் என்ற கொடுமை அந்த முயற்சியில் மண்ணை வாரிப்போட்டு விட்டு மறுபக்கம் திரும்பிக் கொண்டது. ஆமாம். பணம் பாதையை மாற்றி விட்டது.

செயிறம்பின் தந்தை ஒரு தொகைப் பணம் சீதனம் தருவதாகச் சொன்னார். மாப்பிள்ளை அதை விட இரண்டு மடங்கு கேட்டான். பாவம் அந்த அப்பாவித் தந்தை ஏழை மட்டுமல்ல நோயாளியும் கூட அவ்வளவு பணத்துக்கு எங்கே போவான்?

அதன் பிறகு செயிறம்பின் வீட்டில் இருந்த கலியாணம் ருக்கி யாவின் வீட்டுக்கு மாறியது. ருக்கியாவின் சகோதரர்கள் நல்ல உழைப்பாளிகள் மாப்பிள்ளை கேட்ட தொகையைக் கொடுக்க சம்மதித்தார்கள். கலியாணம் நிச்சயமாகியது பெண்ணுக்காக அல்ல. பொன்னுக்காக கலியாணம் அங்கே நடக்கிறது.

இந்த எண்ணங்களால் நெஞ்சு வெடிக்குமளவுக்கு விம்மித் தணிந்தது.

வெடி கிளப்பிய கிடு கிடுப்பு ஒரு புறம். பெண்களின் குரவை ஒலி மற்றொரு புறம். இந்த ஓசைகளுக்கு மத்தியிலே மாப்பிள்ளை கலியாணப் பந்தலுக்குள் நுழைந்தான்!

கலியாணச் சம்பிரதாயங்கள் எல்லாம் முடிந்து விட்டன. கோப்பி பலகாரம் பரிமாறிக் கொண்டிருந்தார்கள். செயிறம்பின் மனதில் எழுந்த புயல் ஓயவில்லை. அந்தப் புயலுக்கு ஈடு கொடுக்க முடி யாமல் அவள்தான் எப்படிச் சோர்ந்து போனாள்? நெஞ்சு வலித்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல அவள் கால்களும் வலித்தது. பெருமூச்சு விட்டபடி அந்தக் கிழிந்த பாயில் தளர்ந்து விழுந்தாள்.

நேற்றுத் தன்னைப் போல் தனியாகக் குமரியாக இருந்த ருக்கியா இன்று மனைவியாக மாறிவிட்டாள்! பணம் எப்படியெல்லாம் மனிதனை மாற்றி விடுகிறது? ஒரு பெண்ணுக்கு மட்டும்தான் ஆண் தேவையா? ஆணுக்குப் பெண் தேவையில்லையா? தேவை யென்றால் இந்த ஆண்கள் ஏன்? ஆடு மாடுகளை விலை கூறி விற்பதுபோல் தங்களைத் தாங்களே விலை கூறி விற்கிறார்கள்.

மஹர்ப் பணம் கொடுத்த பின்னர்தான் கணவன் என்ற உரிமை யோடு ஒரு பெண்ணின் கையைப் பிடிக்க வேண்டும் என்று குர்ஆன் கூறுவதாக ஹதீஸ் சொல்லுகிறார்கள். இது வெறும் பிரசங்கம் மட்டும்தானா? வாழ்க்கையின் நடைமுறைக்கு வர வேண்டாமா? குர்ஆனின் கோட்பாடுகளை வாழ்க்கையிலும் கடைப்பிடித்தாலென்ன?

அவள் கண்களில் இருந்து கண்ணீர் வடிந்தது. அந்த இளம் உள்ளத்தின் ஆசைகள் எல்லாம் கரைந்து கண் வழியாக வந்து கொண்டிருந்தன. கேட்ட பணத்தைக் கொடுத்திருந்தால் அந்தக் கலியாணத் திருக்கோலம் அத்தனையும் இந்த வீட்டில் அல்லவா நடந்திருக்கும்? வாழ்க்கையின் தலைவாசலில் இன்று செயிறம்பு அல்லவா நின்றிருப்பாள்.

இந்த இடத்தில் அவள் உடல் சிலிர்த்தது. நெஞ்சு விம்மித் தணிந்தது. நாவறண்டு தாகம் எடுத்தது. பக்கத்தில் இருந்த தண்ணீர்க் குடத்தை இழுத்து அது மூடி இருந்த சிரட்டை நிறைய நீரைக் கொண்டு குடித்தாள்.

தாகம் தீர்ந்ததா?

எப்படித் தீரும்?

தாகம் நாவில் அல்ல அவள் நெஞ்சில் இருந்தது!

*- 1968*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிழா

திருவிழாக் கோலம் பூண்டு திருவாகனமேறிக் கடவுளர் திருக் கோலமாக வீதி வலம் வரும் காட்சி பக்தி சிரத்தையுள்ளவர்களுக்கு நெஞ்சை நிரப்பும் காட்சிதான்.

இந்தத் திருக்கோலம் கடவுளுக்கு மட்டுமல்ல, மனிதனுக்கு முண்டு.

வாழ்க்கை சிலருக்குத் திருக்கோலமாகத் திருவிழாக் கோலமாக அமைந்து விடுகிறது! பலருக்குத் தீவெட்டி பிடிக்கும் வேலை தான் மிச்சம்!

முருகப்பனுக்குத் தீவெட்டி பிடிக்கும் வேலை என்னவோ இல்லைதான். ஆனால் தீயோடு விளையாடும் வேலை அவனு டையது! பசியில் கொதிக்கும் வயிற்றுக்குள் நெருப்பை அள்ளிப் போட்டு நிரப்பவில்லை அவன். உடம்பைத்தான் நெருப்பில் வாட்டி எடுத்தான்.

முருகப்பன் ஹோட்டல் சமையல்காரன்.

ஒரு காலத்தில் சாதாரண தேநீர் கடை சிப்பந்தியாகத்தான் இருந்தான் முருகப்பன். இன்றைய பெரிய ஹோட்டல் அன்றைய தேநீர் கடையாக இருந்த பொழுதுதான் அவன் அங்கு வேலைக்குச் சேர்ந்தான். சமையல் வேலையில் அவன் கைவைத்த அன்று முதல் கடையில் வியாபாரம் பெருகியது. அவன் கையில் என்ன மந்திர சக்தி இருந்ததோ? அந்த வட்டாரத்து மக்கள் அவன் கைபட்ட உணவில் தனி ருசி இருப்பதாகப் பேசிக் கொண்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளுக்கு நாள் சமையல் சட்டிகள் பெரிதாகிக் கொண்டே வந்தன. கல்லாப்பெட்டி என்றழைக்கப்பட்ட கல்லிப்பெட்டி இப்பொழுது தேக்குமர மேசையாக மாறியது. சாப்பாட்டுப் பகுதி, தேநீர் பகுதி, முதலாம் கிளாஸ், இரண்டாம் கிளாஸ் என்றெல்லாம் உருவாகித் தேநீர் கடை ஹோட்டலாக மாறியது! காஷியரின் ஆசனம் கூடச் சற்றுப் பெரிதாகத் தென்பட்டது. இப்பொழுதெல்லாம் பட்டணத்திலே முதல் தரமான பெரிய ஹோட்டல் அது ஒன்றுதான். இந்த மாற்றங்களெல்லாம் முருகப்பனை அசைக்கவில்லை! அவன் இன்றும் சமையல்காரனாகத்தான் இருந்தான்.

பெரிய விறகு அடுப்புகளிலே நாலு பெரிய சட்டிகளை ஒரு காலத்தில் வைத்து முருகப்பன் சமையல் செய்வது பார்ப்பதற்கு ஒரு அலாதியான காட்சிதான். சட்டிக்குள் இருக்கும் பதார்த்தங்களை ருசி பார்க்க முனைவதுபோல தீ நாக்குகள் எழும்பிப் பின்வாங்கும். அந்த நேரத்தில் முருகப்பனின் கையும் அவன் கைக்குள் சிக்கியிருக்கும் கரண்டியும் சுற்றிச் சுழன்று வரும் லாவகம், கைதேர்ந்த சிலம்ப விளையாட்டுக்காரனைத் தான் ஞாபகப்படுத்தும். அந்த வேளையிலே சற்று ஒதுங்கி நின்று பக்கவாட்டில் அவன் உடம்பைக் கவனித்தால் நெருப்புக்குப் பக்கத்தில் வைத்த மெழுகுச் சிலை எப்படி உருகிப் பளபளக்கும்? அப்படிச் சுடர் விடும் அவனது கறுத்த மேனி!

ஆயிற்று.

சமையல் வேலை முடித்து நிமிர்ந்து ஆள்காட்டி விரலை வளைத்து நெற்றியில் வைத்து குறுக்கே ஒரு இழுப்பு. சர்...ர்! என்று தண்ணீர் வடியும். தண்ணீரா அது? உழைப்பால் உடலைப் பிழிந்த சாறு! வியர்வை நீர்.

மற்றவர்கள் நினைப்பதுபோல் அவனுக்கு அந்த ஒருவேலை சுமையல்ல! கைவந்த ஒரு விளையாட்டு! அவன் மனைவி ராசம், மகள் நளினி, இவர்கள் வாழத்தான் அவன் அப்படி விளையாடினான். வேடிக்கை காட்டினான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் ஒரு நாடக மேடையென்றால், சமையல்கார முருகப்பனும் ஒரு நடிகன் என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். ஏனென்றால் இந்த சமையல்கார வேடத்தைக் கலைந்துவிட்டு அந்த ஹோட்டலில் இருந்து வெளியேற வேண்டிய நாள் ஒன்று அவன் குறுக்கே வந்து நின்றது.

முதலாளியின் தம்பிக்கும் முருகப்பனுக்கும் வாய்த்தர்க்கம். எதிர் பாராத சமயத்தில் முதலாளியின் தம்பி முருகப்பனை அடித்து விட்டான். அவனை ஒரு பிடியில் பிழிந்து அடுப்புக்கு நெருப்பாக்கி இருப்பான் முருகப்பன். ஆனால் மற்றவர்கள் விடவில்லை. நாலைந்து பேர் வந்து அவனைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார்கள். அதற்குமேல் முருகப்பனால் அங்கே இருக்க முடியவில்லை. வெளியேறிவிட்டான்.

அந்த ஹோட்டலில் அவன் சேரும்பொழுது தனிக்கட்டையா கத்தான் இருந்தான். இன்று அதைவிட்டு வெளியேறும் பொழுது மனைவியும் ஒரு குழந்தையும் இருந்தனர். அதுதான் அவன் வாழ்க்கையின் மிஞ்சிய மதிப்பு!

வாழ்க்கை இதோடு முடிந்து விடுகிறதா? அவன் திரும்பவும் ஒரு தேநீர் கடையில் போய்ச் சேர்ந்தான். அவசியம் ஏற்படும் பொழுது அடுப்பிலும் மற்ற நேரங்களில் மேசையிலும் அவன் கைகள் விளையாடின.

இன்பத்திலும் துன்பத்திலும் இடறி விழுபவன்தான் மனிதன். அதற்குத்தான் பெயர் வாழ்க்கை. ஆசையும் பாசமும் அதற்கு ஊன்றுகோல். உயிர் ஊட்டும் சத்து!

அன்று மட்டக்களப்பில் திருவிழா. கிழக்கு மாகாணமே சாதி மத பேதமின்றித் திருக்கோலம் பூண்டு திரளும் மாமாங்கப் பிள்ளையார் கோயில் திருவிழா!

அன்று காலை முருகப்பன் கடைக்கு போகப் புறப்பட்டபொழுது மனைவி ராசம் சொன்னாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இன்றுதான் கடைசித் திருவிழா கொஞ்சம் நேரத்தோடு வாங்க என்ன?"

"சரி"

"இன்னுமொன்று!" அவள் வார்த்தையை இழுத்துப் பிடித்தாள்.

"என்ன?"

"இந்த முற எப்படியாவது ஒரு செப்புக்குடம் வாங்கவேணும். கடையிலே கொஞ்சம் காசி வாங்கி வாங்க!"

"செப்புக்குடம் வாங்குவதென்டா குறஞ்சது முப்பது ரூபா வேணுமே?"

"அவ்வளவு பெரிய குடமா வாங்கப் போறம்? பத்து ரூபாக்கெல்லாம் வாங்கலாம் போதும்."

முருகப்பன் ஒன்றும் பேசவில்லை. கடைக்குப் போய் விட்டான்.

ஆசை என்பது மனித உள்ளத்தின் ஊற்று நீர்! அது எப்பொழுதும் ஏதாவது ஒன்றுக்கு அஸ்திவாரம் இட்டுக் கொண்டேதான் இருக்கும்!

ஆனால்! ராசத்துக்கு ஆசை வருவதும் அதிசயமாகத் தான் வரும். அவள் விவாகம் செய்து நாலு வருசங்களாகின்றன. இந்த நாலு வருசங்களில் ஒரே ஒரு முறைதான் அவளுக்கு ஆசை வந்தது. அதுவும் குழந்தை நளினி பிறந்த பிறகுதான் அதுவும் வந்தது.

குழந்தை நளினிக்குக் காது குத்தி அந்தத் துவாரத்தில் தங்கத் தினாலான ஒரு தூக்கனம் போட்டுப் பார்க்க வேண்டுமென்று ஆசைப்பட்டாள். அந்த ஆசை இரண்டு வருடங்களுக்குப் பிறகு எப்படியோ நிறைவேறியது. இப்பொழுது மற்றொரு ஆசை செப் புக்குட ரூபத்தில் எப்படியோ அவள் மனதில் வந்து விழுந்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசைகளை துரத்தி விட்ட சந்நியாசியல்ல அவள். ஆசைகளுக்கு இடம் போட்டுக் கொடுக்கும் வாழ்க்கை வசதிகள் தன் கணவனுக்கு அமையவில்லை என்ற காரணத்தினால் விருப்பு வெறுப்புகள் அற்ற ஒரு வாழ்க்கைச் சூழ்நிலையைத் தனதாக்கிக் கொண்டிருந்தாள்.

இந்தச் சமயத்தில்தான் அவள் உள்ளத்தில் வந்து விழுந்தது அந்த ஆசை. இரண்டு மாதங்களுக்கு முன் ராசம் தன் மாமியின் வீட்டுக்குப் போயிருந்தாள். அவள் மாமியும் அப்படியொன்றும் வசதியானவள் அல்ல. ராசத்தைப் போல்தான் அவர்கள் வாழ்க்கையும். என்றாலும் அந்த வீட்டில், செப்புக் குடம், குத்து விளக்கு, வட்டில் போன்ற செப்புப் பாத்திரங்கள் நாலைந்து இருந்தன. வீட்டில் செப்புப் பாத்திரங்கள் இருப்பது ஒரு மங்களமான காட்சியல்லவா?

ராசத்திடம் செப்புப் பாத்திரம் என்று சொல்லக்கூடிய மாதிரி எதுவும் இருக்கவில்லை. ஒரே ஒரு எண்ணெய் விளக்குத்தான் இருந்தது. அதுவும் எண்ணெய்க் கரி பிடித்து இரும்பு விளக்காகக் காட்சியளித்தது. தன் வீட்டிலும் குறைந்தது ஒரு செப்புக் குடமாவது இருக்க வேண்டாமா? இந்த ஆசை அவள் மனதில் விழுந்தது. அதோடு இந்தத் திருவிழாவிலே அதை வாங்கிவிட வேண்டும் என்ற திட்டமும் இருந்தது.

முருகப்பன் இத்தகைய சிந்தனைகளில் மனதை மேயவிட்டு உடம்பைக் கடை வேலையில் வளைத்துக் கொண்டிருந்தான்.

ஆயிற்று, நகரசபை மின்சார நிலையத்தில் இருந்து வழமையாக ஆறு மணியை அறிவிக்கும் ஊது குழல் ஓசை எழுப்பிற்று. முகத்தை அலம்பித் துவாலையில் துடைத்தபடி, முதலாளி மேசை என்றழைக்கப்படும் அந்தப் பச்சை நிறக் கல்லிப் பெட்டிக்கு முன்னால் வந்து நின்றான் முருகப்பன்.

தொழிலாளி வேலியைத் தாண்டி முதலாளி என்ற இலக்கண வரம்புக்குள்ளும் கட்டுப்படாது, சற்று இடைக்காலத்தில் முன்னேறுவதற்கு மூச்சு விட்டுக் கொண்டிருந்த அந்தக் கடைச் சொந்தக்காரர் தலையைத் தூக்கி முருகப்பனைப் பார்த்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன முருகப்பா?"

"இன்று திருவிழாவுக்குப் போக வேணும். அதுதான் கொஞ்சம்...."

"அப்படியா சரி! வேறென்ன வேண்டும்!"

"செலவுக்குக் காசி கொஞ்சம் வேணும்!"

"ச்சூ...ச்சூ....! நேரத்தோடு சொல்லி இருக்கக் கூடாதா முருகப்பா?"

அவர் கை கல்லாப் பெட்டியை ஆராய்ந்தது. இரண்டு ரூபாய் நோட்டு, ஒரு ரூபாய் ஐம்பது சதம் என்று எல்லாமாக ஐந்து ரூபாய் அவன் கைக்குள் வைத்தார்.

"இந்தா முருகப்பா இப்போதைக்கு இவ்வளவுதான் இருக்கிறது."

அவன் காசு கேட்டு இல்லையென்று சொன்ன நாட்கள் மிகவும் குறைவுதான். முருகப்பன் அவர் முன்னால் எதுவுமே பேசவில்லை. படி இறங்கி வீட்டை நோக்கி நடந்தான்.

தெருவில் நடப்பது அபாயம்போல் இருந்தது. திருவிழாவுக்குப் போவதும் வருவதுமாக இருந்த கார்களும் பஸ்களும் ஊர்வலம் செல்வதுபோல் காட்சியளித்தன! மனித நடமாட்டமும் அப்படித்தான். கரும்பு, தோடம்பழம், சர்பத் போத்தல் இவை களைத் தூக்க முடியாமல் சுமந்து கொண்டு செல்பவர்கள் ஒரு புறம். பெட்டி, பாய் விளையாட்டுச் சாமான்களுடன் செல்ப வர்கள் மற்றொரு புறம். இவர்களுக்கு மத்தியிலே திருவிழாவை நோக்கி ஆடை கசங்காமல் அழகு நடை போடுபவர்கள், இத்தியாதி அவசரமும் அழகு நடையும் ஒன்றையொன்று முட்டி மோதித் தள்ளித் தடுமாறிக் கொண்டிருக்கும் அந்தத் தெருவிலே எப்படியோ வளைந்து நெளிந்து நடந்து வீடு வந்து சேர்ந்தான் முருகப்பன், நன்றாக இருட்டி விட்டது.

அவன் முகபாவத்தைப் பார்த்ததும் ராசத்துக்கு விசயம் புரிந்து விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன? ஒங்களத்தான்! திருவிழாவுக்கு எங்க போக உடம்புக்கு ஒரு மாதிரியா இருக்கு!

"ஏன் உடம்புக்கென்ன?"

"தலையிடி மயக்கம் வராப்பிள இருக்கு......!"

"அதெல்லாம் சரியாகிவிடும் கெதியா வேலைய முடிச்சிட்டு வெளிக்கிடு....."

"குழந்தையும் தூங்கிட்டாள்......!"

"தூங்கினா என்ன ராசம்? இரண்டு மூன்று நாளா ஒரே கருப்பு பலூன் எண்டு கேட்டுக் கொண்டே இருந்தது. பாவம் ஏமாந்து போகும், எழுப்பிச் சட்டையப் போடு நான் தூக்கிக் கொள்ரன்."

ராசத்துக்கு அதற்குமேல் பேசுவதற்கு இடம் இருக்கவில்லை பேசாமல் திருவிழாவுக்குப் போகப் புறப்பட்டாள்.

குழந்தை நளினியைத் தோளில் போட்டுக்கொண்டு முன்னால் நடந்தான் முருகப்பன். பின்னால் நடந்தாள் ராசம். பாம்பு ஊர்ந்து கொண்டிருப்பதுபோல் நகர்ந்து கொண்டிருந்த அந்தக் கும்பலோடு அவர்களும் கலந்து கொண்டனர்.

முருகப்பன் நடந்து கொண்டிருந்தான் அவன் மனம் எங்கெல் லாமோ சுற்றிச் சுழன்று அலைந்து வந்தது.

பழைய முதலாளியை ஒரு முறை நினைத்துக் கொண்டான். அவன் அந்தக் கடையில் உழைத்துக் கொண்டிருந்த பொழுது தான் அவர் உயர்ந்தார். அவன் இன்னும் உழைத்துக் கொண் டிருக்கிறான் உயரவில்லை.

இப்பொழுதுமென்ன அவன் போனால் வேண்டாமென்றா சொல்லுவார்? முதலாளியின் தம்பி இருப்பதால் அவன்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக மறுக்கிறான். தெருவில் முதலாளி கண்டால் சிரிக்காமல் போகமாட்டார்! முதலாளிகளில் ஒருவர், நன்றி மறவாத நல்லவர்!

யார் நல்லவராக இருந்தும் அவனுக்கென்ன லாபம். மனைவியின் செப்புக்குட ஆசையைப் போக்க முடியாதவனாக மரக்கட்டை யாகத்தானே போய்க் கொண்டிருக்கிறான்!

நெருக்கடியான கூட்டமும் கூச்சலும் கோயில் வந்து விட்டதை அறிவித்தன. அவன் தலையைத் தூக்கித் தெருவைப் பார்த்தான். கோயில் பக்கம் இருந்து வந்த கார் ஒன்று அவன் கண்ணில் பட்டது. என்ன நினைத்துக் கொண்டானோ கையைக் காட் டினான் கார் நின்று விட்டது. காரை நெருங்கினான் முருகப்பன். பழைய முதலாளி சாரதியின் இடத்தில் இருந்தார்.

"யார் முருகப்பனா! கோயிலுக்கா?"

"....................................."

"என்ன வேணும் முருகப்பா?"

"இருபது ரூபா காசு தாங்க!"

முதலாளி ஆச்சரியத்துடன் அவன் முகத்தைப் பார்த்தார். அந்த முகத்தில் எவ்வித உணர்ச்சியும் தெரியவில்லை.

அடுத்த நிமிசம் அவன் முகத்துக்கு முன்னால் இரண்டு பத்து ரூபாய் நோட்டுக்கள் விரிந்தன! அதை வாங்கிச் சட்டைப் பைக்குள் போட்டுக்கொண்டு பின்னால் நகர்ந்தான் முருகப்பன்.

முதலாளி இலேசாகச் சிரித்தார். அவர் நெஞ்சு நிறைந்திருந்தது. கார் மெல்ல நகர்ந்தது.

*- 1961*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊதுகுழல்

இராதையின் அருகில் அவள் தோழி சசி!

நீண்ட நேரமாக ஏதோ ஒன்றை அறிவதற்காக முயற்சி செய்து கொண்டிருந்தாள் சசி! அந்த முயற்சியில் ஒன்றன் பின் ஒன்றாகப் பல கேள்விகள் பிறந்தன அவளிடமிருந்து.

"இராதை!"

"உம்!"

"ஏன் ஒரு விதமாக இருக்கிறாய்?"

"ஒன்றுமில்லே! எப்பொழுதும் போல்தான் இருக்கிறேன்."

"இத்தனை நாளும் இப்படித்தான் இருந்தாயா?"

"வேறு எப்படி? இருந்தேனாம்!"

"அதோ நீரில் தெரியும் உன் முகத்தைப் பார் அது உனக்குப் பதில் சொல்லும்."

இராதை நீரைப் பார்த்தபடி பேசாமல் இருந்தாள். சிறிது நேர மௌனத்திற்குப் பிறகு சசி பேசினாள்.

"இராதை!"

"உ.......ம்....!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“உண்மையைச் சொல்லமாட்டாயா? என்னடி உனக்கு நேர்ந்தது? இராதை ஒன்றுமே பேசவில்லை வெறும் பார்வை ஒன்றைத் தோழி மீது படரவிட்டாள்.

சசி திரும்பவும் தொடர்ந்தாள்.

“ஒன்றுமில்லை என்று சொல்கிறாயே இராதை! உன் கண்களேன் இப்படிப் பால்போல் வெளுத்துக் கிடக்கின்றன.......? மினு மினுக்கும் மேனியேன் புழுதி படிந்து கிடக்கின்றது? மூக்கின் நுனியிலே முத்து முத்தாக வேர்த்து நிற்குமே வியர்வைத் துளிகள்! அவை மறைந்துபோன மாயமென்ன? இத்தனையும் உன்னில் வைத்துக் கொண்டு ஒன்றுமில்லையென்கிறாயேடி! இதை நான் நம்ப வேண்டுமா?”

சசியின் குரலில் கருணையும் கவலையும் கைகோர்த்து நின்றன.

இராதை, தலையைத் தூக்கித் தன் தோழியைப் பார்த்தாள். அவள் கண்களில் கண்ணீர் கரைகட்டி இருந்தது. கரகரத்த குரலில் மெல்லப் பேசினாள் இராதை.

“சசி! என்னவென்று சொல்லேண்டி! ஒன்றுமே புரியவில்லையே? உணவிலும் இன்பமில்லை, உறக்கத்திலும் அமைதியில்லை. உள்ளத்தை மத்துப் போட்டு கடைவது போன்ற ஒரு பாவனை! அந்தப் பாவனையிலே நான் பலமிழந்து போனது போன்ற ஒரு வேதனை. உடல் தளர்ந்து, உற்சாகமிழந்து உலகமே ஒரு இருட்டுக் குகை போன்று தென்படுகிறது! என்னடி செய்வேன் நான்?”

“இப்படியெல்லாம் உன்னைத் துன்புறுத்தி, உன் அழகை மங்க வைத்துக் கொண்டிருக்கிறதே ஒன்று! அது என்னவென்றுதான் உன்னைக் கேட்கிறேன்?”

இராதை தன் நெஞ்சில் உள்ள பாரத்தைக் குறைத்துக் கொள்வது போன்று ஒரு பெருமூச்சு விட்டாள். நெஞ்சு உயர்ந்து தணிந்தது. “எப்படிச் சொல்வேன். என்னவென்று செல்வேனடி. நெஞ்சில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பது புரிகிறது. புரியாமலும் இருக்கிறது! எல்லாவற்றையும் உன்னிடம் சொல்லிவிட நினைக்கிறேன். ஆனால் வார்த்தைகளை மறந்து விடுகிறேன். எல்லாம் தெரிந்தது போல் இருக்கிறது. தெரியாதது போலும் இருக்கிறது. என்னடி செய்வேன் நான்?"

இதைச் சொல்லி விட்டு இராதை சோர்ந்து போய் சசியின் தோள் மேல் சாய்ந்தாள். இராதையின் இந்த நிலையைக் கண்டு வெகுவாக கலங்கினாள் சசி! இவளுக்கு நோயா! அல்லது மனக்கவலையா? ஏன் ஏற்பட்டது எதனால் ஏற்பட்டது? ஒன்றுமே புரியவில்லை அந்த அன்புள்ள தோழிக்கு.

"இராதை! ஒன்று செய்கிறாயா? என்னோடு வருகிறாயா?"

"எங்கேயடி என்னைக் கூப்பிடுகிறாய்?"

"எங்கே போனாலென்ன! பயமா இருக்கிறதா?"

"பயமில்லை சசி. ஏதோ இனம் தெரியாத ஒரு ஏக்கம்!"

"அந்த ஏக்கம்தான் என்னவென்று கேட்கிறேன் நீ சொல்ல மறுக்கிறாய். ஏதோ கனவுலகத்தில் பேசுவது போன்று பேசுகிறாய்! உனக்கும் புரியவில்லை எனக்கும் புரியவில்லை!! வேண்டாம் நீ சொல்ல வேண்டாம் எழுந்து வந்தால் போதும் வா!"

சசி இராதையின் கையைப் பிடித்து இழுத்தாள். இராதையும் அவளைப் பின் தொடர்ந்தாள். இருவரும் ஆடல் கூடத்தை நோக்கிச் சென்றனர். ஆடல் கூடத்தை நெருங்கியது. இராதை சற்றுத் தயங்கி நின்றாள்.

"என்ன இராதை!"

"ஆடல் கூடத்துக்கு அழைத்து வந்தால் என்மனக் கவலை மாறிவிடும் என்று நினைக்கிறாயா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“நீ கவலையில் சோம்பிக் கிடக்கிறாய். உன்னோடு சேர்ந்து நானும் உற்சாகமற்றுப் போகிறேன். இருவருக்கும் தெம்பூட்டத்தான் இப்படி உன்னை அழைத்து வந்தேன்.”

“சசி!”

“ஒன்று செய்கிறாயா?”

“ஒன்பது செய்கிறேன் என்னவென்று சொல்லேன் இராதை”

“நான் இப்படியே இந்த மேடையில் உட்கார்ந்து உங்கள் ஆட்டத்தைப் பார்க்கிறேன் நீ போய் ஆடுகிறாயா?”

“உன்னால் ஆட்டத்தில் கலந்து கொள்ள முடியாதா இராதை?”

“முடிந்தால் இப்படிச் சொல்லுவேனா சசி?”

“என்னமோடி? உன் மனக்கவலை நீங்கி நீ பழைய நிலைக்கு வந்தால்போதும். இந்த மாலைக் காட்சியும் மங்கையர் ஆட்டமும் உன் உள்ளத்திற்கு இதம் அளிக்கிறதா பார்ப்போம்.”

இதைச் சொல்லிவிட்டு சசி ஆடல் கூடத்தை நோக்கி நடந்தாள். தனிமையில் விடப்பட்ட இராதை ஆட்டத்தைப் பார்க்கவில்லை ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். இரண்டொரு வெள்ளைத் துண்டுகள் கிழக்குத் திசையில் இருந்து மேற்குத் திசையை நோக்கி நகர்ந்தன. அவள் உள்ளமும் ஏதோ ஒன்றைத் தேடி அலைந்தது. குழப்பமடைந்து கொண்டிருந்த அந்த நெஞ்சிலே மெல்ல மெல்ல ஏதோ ஒன்று புரியத் தொடங்கியது.

நேற்று மாலை காற்றிலே மிதந்து வந்து அவள் காதுக்குள் புகுந்து இன்ப லாகிரியை ஊட்டியதே ஒரு ஓசை! ஆமாம் குழல் ஓசை ஒரு வினாடி நேரந்தான் அதன் பிறகு அது மறைந்துவிட்டது. அவ்வளவுதான் அந்த நொடியிலேயே அவள் உடல் தளர்ந்து உள்ளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நலிந்து இன்னொரு முறை அந்த ஓசையைக் கேட்கமாட்டோமா? என்று ஒரு ஏக்கம் அவள் உள்ளத்தைக் கௌவிக்கொண்டது. அது எப்படி? எங்கிருந்து வந்தது? புரியவில்லை இராதைக்கு. புரியாத புதிராக இருந்து அழித்துவிட முயல்கிறது! அவள் அந்த ஆடல் கூடத்தினருகில் இருந்து மேடையில் அமர்ந்தபடி சிந்தனையில் மூழ்கியிருந்தாள்.

இருந்தாற்போலிருந்து அவள் உணர்ச்சியும் உடல் நரம்புகளும் குத்திட்டு நின்றன. காதுகள் இரண்டையும் கூர்மையாக்கிக் கொண்டு கவனித்தாள். இராதை! நேற்று மாலை கேட்ட அதே குழலோசை அவள் காதுக்குள் வந்து புகுந்தது! கண்கள் மலர நான்கு பக்கமும் பார்வையைச் சுழற்றினாள் இராதை! எங்கிருந்து வருகிறது ஓசை?

மேகத்தின் அசைவிலே. மென்காற்றின் நெளிவிலே, செடிகளின் கிளுகிளுப்பிலே அந்த ஓசை கேட்டது! தோழிகளின் ஆட்டத்திலே அவர்கள் சிரிப்பொலியிலே அந்தக் குழலோசை கேட்டது இராதைக்கு! அவள் இரத்த ஓட்டத்திலே அந்த ஓசை கேட்டது! உள்ளத் துடிப்பிலே, உணர்ச்சிக் கொந்தளிப்பிலே அந்த ஓசை கேட்டது! உலகமே ஓசையாக, ஓசையே உலகமாகத் தோன்றியது அவளுக்கு.

சோகமும் சோர்வும் நீங்கியவளாக எழுந்து நின்றாள், இராதை பெருவெள்ளம் தனக்குள் அகப்பட்டதையெல்லாம் இழுத்துச் செல்வதுபோல அந்தக் கானவெள்ளம் இராதையை இழுத்தது. அந்த இழுப்புக்குத் தன்னை அர்ப்பணித்து விட்டு மெல்ல நகர்ந்து கொடுத்தாள் இராதை! இராதை போய்க் கொண்டிருந்தாள். கிராமத்தின் எல்லையில் இருந்த கடைசி வீட்டையும் தாண்டிப் போய்க் கொண்டிருந்தாள். பார்த்த இடமெல்லாம் பச்சை நிறமாகத் தோன்றிய புல் தரையில் கால்களைப் பதியவைத்து நடந்து போய்க் கொண்டிருந்தாள்.

மேயச் சென்ற மாடுகள் தங்கள் மேய்ச்சலையும் கன்றுகளையும் விட்டுவிட்டு அந்தக் குழலோசையைக் கேட்டு நகர்ந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராதையும் நடந்தாள். அவள் உள்ளத்தில் மூச்சைத் தவிர வேறொன்றுமிருக்கவில்லை! கண்களிலே ஒளியிருந்தது. ஆனால்! உலகம் அவள் வரையில் மறைந்து விட்டது! காற்றைப்போல் அந்தக் கானமும் நிறைந்திருந்தது.

"இராதை!"

"என்னடி சசி?"

"எல்லாம் நிறைந்து விட்டதா?"

"குறை எப்போதடி இருந்தது எனக்கு?"

"உண்மை, உன்னையே நீ மறந்திருந்தபொழுது, வேறு எதைப் பற்றி ஞாபகம் இருக்கப் போகிறது?"

"அப்படி நான் என்னடி செய்தேன்?"

"நீயல்ல, உனக்குள் நீயாகவும், நீயல்லாமலும் இருந்ததே ஒன்று அது!"

தோழிகள் இருவரும் கலகலவென்று சிரித்தனர்.

"சசீ! எண்ணியது கிட்டும்பொழுது இன்பத்தின் எல்லையே கிடைத்து விடுகிறதடி!"

"ஆமாம் அந்த இன்பத்தின் எல்லையை நானும் கேட்டேன். இத்தனை நாள் எங்கேயடி இருந்தான்?"

"எனக்குள்தான் ரூபமாகவும் அரூபமாகவும் இருந்தான்! தெரிந்த வனாகவும் தெரியாதவனாகவும் இருந்தானடி! ஓசையாக ஓசையின் நாதமாக, அந்த நாதத்தின் ஓங்காரமாக இருந்து என்னை வாட்டி வதைத்து விட்டானடி! அந்தக் குழலோசையின் லயிப்பிலே என்னை மட்டுமல்ல, எல்லாவற்றையும் புரிந்து கொண்டேனடி நான்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பித்துப் பிடித்தவள்போல் பேசிய இராதையின் பேச்சைக் கேட்டு "கிளுக்"கென்று சிரித்தாள் சசி. இந்தச் சிரிப்பில் இராதை கலந்து கொள்ளவில்லை. அவள்தான் ஓசையில் லயித்திருந்தாளே?

காலம் மெல்ல நகர்கிறது.

அந்தக் கிராமம் காடு, மேடு, களம் எல்லாமே அந்தக் கான வெள்ளத்தில் மயங்கிக் கிடக்கின்றன. இராதை உண்ணும்பொழுதும் உறங்கும்பொழுதும் அந்த ஊது குழலின் ஓசையையே உயிர் நாடியாகக் கொண்டிருந்தாள்.

ஒரு நாள் திடீரென்று அந்தப் பிரதேசமே செயலற்றுப் போயிற்று? கம்பியறுந்த வீணையின் நாதம் தடைப்படுவதுபோல் அந்த ஊது குழலின் ஓசை தடைப்பட்டது! கிராம மக்கள் தடுமாறினர். மேய்ச்சலை நிறுத்தி விட்டு ஆவினங்கள் ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டு நின்றன. கோழிகள் குப்பையைக் கிளறவில்லை. பெண்கள் மத்துக் கயிறோடும் பால் செம்போடும் தெருவை நோக்கி வந்தனர். செய்த வேலைகளையெல்லாம் விட்டு விட்டு, ஆண் பெண் குஞ்சு குழந்தை என்று பேதமில்லாமல் எல்லாரும் தெருவில் நின்று வெகு தூரத்துக்கப்பால் ஏக்கத்தோடு பார்த்துக் கொண்டு நின்றனர்.

இராதை சுற்றும் முற்றும் பார்த்தாள். அவள் உடல் வியர்வையால் நனைந்தது. உள்ளம் துடித்தது. உயிர் பதறியது, மேல் மூச்சுக் கீழ் மூச்சு வாங்க வெட்ட வெளியைப் பார்த்துக் கொண்டு நின்றாள். இனம் தெரியாத ஏக்கம் இழப்பு அவள் உள்ளத்தில் பட்டு வெடித்தது. அந்த வெடிப்பிலே தன்னைத்தான் அழித்துப் புதைத்து விட்டது போன்று குமைந்து நின்றாள் அவள்.

"எங்கே இராதை?"

சசி விசயம் புரிந்தவளாக இராதையின் வீட்டை நோக்கி ஓடினாள்.

"எங்கே இராதை? இராதை எங்கே? வீட்டுக்குள் இருந்து கூக்குரல் கிளம்பியது! இராதையைத் தேடி வாசலுக்கு ஓடி வந்தாள் சசி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதோ இராதை ஓடுகிறாள்! வெறிபிடித்தோடுகிறாள். வீதியை விட்டுத் தெருவைக் கடந்து ஓடுகிறாள். முந்தானை காற்றில் பறக்க முடியவிழ்ந்து முகத்தை மறைக்க இராதை ஓடுகிறாள்! காற்றுக்கில்லாத வேகம் அவள் கால்களுக்கு எப்படி வந்தது? உடலையும் உலகத்தையும் மறந்து ஓடுகிறாள் இராதை! அவள் ஓட்டத்தைக் கண்டு தோழி சசி அவளைப் பின் தொடர்கிறாள்.

"இராதை!"

*"உ.....ம்....?"*

"என்னடியம்மா அப்படி ஓடி வந்தாய்?"

"ஓடி வந்தேனா?"

"இல்லை இல்லை! காற்றாய்ப் பறந்து வந்தாய்?"

இராதை தலையை சரித்துச் சசியைப் பார்த்தாள்.

"ஏன் அப்படிப் பார்க்கிறாய் இராதை? எதற்காக ஓடினாய்?"

"இதென்ன கேள்வி இது? இந்தக் கிராமமே செயலற்றுப் போனபோது அதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்கச் சொல்கிறாயா? ஏன் ஓடினேன்? எதற்காக ஓடினேன்? எனக்கே புரியவில்லை சசி! ஆயிரம் குதிரைகள் பூட்டி இழுத்த ஒரு வேகம்!"

"கண்டாயா அவனை?"

*"உம்....!"*

"அதோ இரதம் ஒன்று போகிறதே! அதில் அவன் தான் போகிறானா?"

*"உ....ம்.....!"*

"எங்கே போகிறான்?"

"கேட்காத கேள்விக்குக் கிடைக்காத பதில் தானடி அது!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“இது என்ன இந்த முந்தானைக்குள்?”

“ஊது குழல்!”

“அவன் ஞாபகமாக இதை வைத்துக் கொள்ளச் சொல்லித் தந்தானா?”

“இது என்னடி! இப்படிச் சொல்கிறாய்? இதில் தானே என் உயிர் உறைந்து கிடந்தது!”

“காதலன் தந்த காணிக்கை! என்று சொல்ல வெட்கமாக இருக்கிறதா?”

“சசீ....!” இராதை ஆச்சரியத்தோடு அலறினாள். அவள் கண்களை நேருக்கு நேர் சந்திக்க முடியாமல் தடுமாறினாள்.

“கண்ணன் என் காதலனா?”

“ஊரும் மக்களும் அப்படித்தான் சொல்கிறார்கள்.”

“ஊரும் உலகமும் எப்பொழுதும் உண்மையைத்தான் பேசுகிறதா?”

“எனக்கென்னடியம்மா தெரியும்? காதில் பட்டதைச் சொன்னேன்.”

“கண்ணன் என் காதலன்!” இராதை ஒரு புன் சிரிப்பை உதிர்த்தாள். பிறகு நெஞ்சு அதிரும்படி பேசினாள்.

“இராதை கண்ணனின் காதலி?”

“காலங்களை வென்று காலத்தையும் வென்றபின் காதலியாடி நான்? நாம் எல்லாவற்றையும் மறந்து துறந்து அவனைக் கண்டோமா? அவன் நம்மைக் கண்டானா? ஊது குழலின் ஓசையிலே நாம் மயங்கினோமா? அவன் மயங்கினானா?”

“காலிங்கனுக்கு எடுத்துச் சென்ற பால் குடங்களை கிராமத்துக் குழந்தைகளுக்கு எடுத்துச் செல்லுங்கள் என்று சொன்னபொழுது, மக்கள் அரசன் கட்டளைக்கு அடி பணிந்தார்களா அல்ல. அவனுக்கா? காலிங்கன் கக்கிய கொடிய நச்சுக் காற்றிலே சிக்கிச் சிதைந்தது உலகமா? அல்லது ஹம்சன் என்ற கொடுமையா? இத்தனைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறகு உலகம் அவனாகவும் அவனே உலகமாகவும் வியாபித்து நின்ற பொழுது தலை நிமிர்ந்து பார்க்கும் தைரியம் யாருக்கு வந்தது? யாருக்கு வந்தது?" யாருக்கடி வந்தது?"

"இராதை!....!

சசியின் இந்த அலறலிலே இராதையின் ஆவேசம் சற்றுத் தணிந்தது என்றாலும் அவள் மேலும் பேசினாள்.

"சசி எனது இந்தக் கேள்விகளுக்கு விடை கிடைக்கும் பொழுது உலகத்துக்கும் உண்மை கிடைத்து விடும்."

சசி அன்போடு இராதையின் தலையை வருடி விட்டபடி கேட்டாள். "ஒன்றுமில்லாத ஓட்டைக் குழலுக்காகவா? உன்னையே மறந்து ஓடினாய்!"

தோழியைப் பரிதாபத்தோடு பார்த்து முறுவலித்தாள் இராதை.

"சசி ஒன்றுமில்லாத ஒன்றிலே பிறந்ததுதானேடி கடவுள் என்ற தத்துவம், வெறும் ஓட்டைக் குழலின் ஓசையிலே இந்த உலகம் மயங்கவில்லையா? உலகத்தோடு சேர்ந்து நம் உயிரும் உறங்க வில்லையா? உலகமெனும் ஊசலிலே உயிர் கொண்ட மனிதர் களை உறங்க வைத்து உய்விக்க இந்த ஊதுகுழல் அவசியந்தான்! அதனால்தான் ஓடினேன். மீட்டு வந்தேன்! இதைவிட வேறொன்றும் அறியேனடி நான்! வா போகலாம்."

இராதை யமுனைப் படுகையிலே அடியெடுத்து வைத்து நடந்தாள். புரிந்தும் புரியாதவளாக அவளைப் பின் தொடர்ந்தாள் தோழி சசி!.

- 1962



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோதனை

சில சமயம் சில சிறுகதைகள் நம்மிடையே வாழ்ந்து மறைந்து போன மனிதர்களின் ஞாபகச் சின்னமாக அமைந்துவிடுகின்றன.

ஞாபகச் சின்னங்கள் சிலையாக மட்டுமல்ல. கதையாகவும் இருக்கலாம், இருக்க வேண்டும்.

எழுத்துக்கள் கொள்கைகள், இலட்சியங்கள் எல்லாமே ஆரம்பத்தில் வெற்றியை நோக்கித்தான் சென்று கொண்டிருக்கின்றன. முடிவில் தோல்வியில் துவண்டு விடுவதுமுண்டு.

தோல்வியைக் கண்டு துவண்டு விடுவதினாலேயே அதிகமான வர்கள் தோற்றுப் போய் விடுகிறார்கள். வள்ளுவன் சொன்னது போல் ஒரு புன்னகையால் அலட்சியப்படுத்தி விட்டால், தோல்வியும் வெற்றியாகிவிடும்.

வெற்றியும் தோல்வியும் வாழ்க்கையோடு ஒட்டிப் பிறந்தவை. எனவேதான் இந்த இரண்டுக்கும் மத்தியில் சிக்கிக் கொண்டு சோதனைக்குள்ளாகிறான்.

சோதனையும் வேதனையும் ஒன்று சேர்ந்து மனிதனை வேட்டை யாடுகின்றன! இப்படியொரு சோதனையில் தோற்றுப்போன என் நண்பன் ஒரு ஓவியக் கலைஞன்.

நம்மிடையே வாழ்ந்து மறைந்து போன ஒரு மனிதன் கையைப் பிடித்து இழுத்து வந்து மற்றவர்கள் முன்னால் நிறுத்துவது தான் ஞாபகச் சின்னம் என்றால் இந்தக் கதை!.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்க்கண்டு என் பள்ளித்தோழன். நானும் அவனும் ஒன்றாகப் படித்தோம். நண்பர்களானோம். எட்டாம் வகுப்பில் என்று நினைக்கிறேன். மார்க்கண்டு பாடசாலைக்கு வருவதை நிறுத்திக் கொண்டான். நான் தொடர்ந்து படித்தேன். மார்க்கண்டு எங்கே போனான். என்னவானான். ஒன்றுமே தெரியவில்லை. நான் படிப்பை முடித்துக் கொண்டு, உத்தியோகம், குடும்பம் என்று பல சுமைகளைச் சுமந்து திக்குமுக்காடிய வேளையில் மார்க் கண்டின் ஞாபகம் என் மனதில் மறைந்திருந்ததில் வியப்பில்லை.

ஒரு நாள் தெருவில் வந்து கொண்டிருந்த பொழுது மார்க்கண்டு தென்பட்டான்! அவன்தானா? என்று ஆச்சரியத்தோடு உற்றுப் பார்த்தேன்.

அவன் என்னருகில் வந்து தோளில் கை வைத்து.

"என்ன அப்படிப் பார்க்கிறாய்? நான்தான் சாச்சாத் மார்க்கண்டு" என்றான்.

அந்த அரும்புச் சிரிப்பு இன்றும் அவனிடம் அப்படியே இருந்தது. இந்தியர்கள் பேசும் பாணியில் பேசினான் அவன்.

"ஆச்சரியம் இருக்காதா என்ன? திடீரென்று ஒருநாள் மறைந்து போனவன் இன்று தோன்றி இருக்கிறாய்!" என்றேன்.

"வாழ்க்கையென்றால் அப்படித்தாம்பா இருக்கும். செக்குமாடு போல சுத்தரத நான் விரும்பல்ல. இந்தியாவுக்குப் போனன். போன காரியம் முடிஞ்சு போச்சு வந்துட்டன்" என்றான்.

"என்ன காரியத்துக்குப் போய் எதை முடித்துக் கொண்டு வந்தி ருக்கிறாய்?" என்று கேட்டேன்.

"உனக்குத்தான் தெரியுமே பள்ளி நாட்களில் சித்திர பாடம் வந்தால் ஒன்று அடி வாங்குவேன். இல்லாட்டா பெஞ்சி மேல நிப்பன்! அது மட்டுமா? உன் விரல்கள் விறகு வெட்டத்தான் உதவும் ஓவியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீட்ட வராது என்று நமது ஆசிரியர் நையாண்டி செய்வாரே? அத சோதனை பண்ணிப் பார்க்கத்தான் இந்தியா போனன். வெற்றியோட திரும்பி வந்தன்" என்றான்.

நான் ஆச்சரியத்தோடு அவன் முகத்தைப் பார்த்தேன்.

என்ன அப்படிப் பார்க்கிறே? என் விரல்கள் எப்படிப் பட்டதுன்னு பார்க்க விரும்பினா என் வீட்டுக்கு வா!" என்றான்.

"எங்கே உன் வீடு?" என்று கேட்டேன்.

"104, பிள்ளையார் கோயில் தெரு"

"கட்டாயம் வருகிறேன்" என்றேன் நான்.

"நிச்சயம். உன்னை எதிர்பார்ப்பேன் வா!" என்று சொல்லிவிட்டுப் போய் விட்டான்.

அன்று மாலை அவனையும் அவனுடைய திறமையையும் சந்திக்க அவன் வீட்டுக்குப் போனேன். ஒரு பெரிய ஓவியம் கூடம் ஒன்று என்னை வரவேற்றது. அவன் ஒரு திரையில் ஓவியம் வரைந்து கொண்டிருந்தான். சுவர்களில் சிறியதும் பெரியதுமாகப் பல ஓவியங்கள் காட்சியளித்தன. எல்லாமே அற்புதமான படைப்புகள் தாம். ஒரு திறமையான கலைஞனின் கனவுகள் என்ற மனநிறைவைத் தந்தன.

"அடே! நீ எப்ப வந்தே?" என்று கேட்டபடி என் முதுகில் தட்டினான் மார்க்கண்டு.

"நான் வந்து வெகுநேரமாகி விட்டது. உன் கனவைக் கலைக்காமல் நீ படைத்த கனவுகளோடு உறவாடிக் கொண்டிருக்கிறேன்" என்றேன்.

"இப்பொழுது நீ சொல். என் விரல்கள் விறக வெட்டவா லாயக்கு?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“முயற்சி மெய்வருத்தக் கூலி தரும்” என்றேன் நான்.

“முயற்சி மட்டுமல்ல ரோஷமும் என்று சொல்! என்னை நையாண்டி செய்த ஆசிரியரை மட்டந்தட்ட” என்றான் அவன்.

“அப்படிச் சொல்லாதே மார்க்கண்டு. நீ இவ்வளவு பெரிய ஓவியனாக வந்ததே அந்த ஆசிரியரால்தான். அவருடைய நையாண்டியே உனக்கு ஆசீர்வாரமாக அமைந்துவிட்டது.”

என்றேன் நான். அவன் தலையசைத்தான். அதன் பிறகு சமயா சமயங்களில் அவன் வீட்டுக்குப் போவேன். அங்கே இருந்து அவன் வரையும் சரஸ்வதி தேவியின் படத்தைப் பார்த்து விட்டு வருவேன். ஒரு நாள் நான் அவன் வீட்டுக்குப் போன போது உள்ளே ஒரு பெண்ணின் பேச்சுக் குரல் கேட்டது! எனவே நான் உள்ளே போகாமல் வெளியிலேயே தங்கிட்டேன். சிறிது நேரத்தில் அந்தப் பெண் வெளியில் வந்தாள். அவள் முகம் வாடியிருந்தது. முந்தானை யால் கண்களைத் துடைத்தபடி சென்று விட்டாள்! நான் ஓசைப் படாமல் உள்ளே சென்றேன். அவன் வழமைபோல் ஓவியம் தீட்டிக் கொண்டிருந்தான்.

“வந்து விட்டாயா? வா!” என்றான் ஓவியம் தீட்டிய படியே.

நான் அவன் பக்கத்தில் உட்கார்ந்தேன்.

“வாசலில் ஒரு பொண்ணு போகுதே பாத்தியா?” என்று கேட்டான்.

“பார்த்தேன் யாரவள்?”

“ஒரு இளம் பெண் அதிலும் அழகாக இருந்தாள்! யாராய் இருப்பாள்?” என்றான்.

“ஒரு இளைஞன் ஒரு பெண்ணைப் பார்த்து அழகானவள் என்று சொன்னால் அதிலும் ஒரு ஓவியக் கலைஞன் சொன்னால் நிச்சயம் அவள் அவன் காதலியாகத்தான் இருப்பாள்!” என்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சரியாகச் சொன்னாய் நீ! அவள் ஒரு டாக்டரின் மகள். மறைந்து போன அவள் தந்தையின் படத்தை வரைந்தெடுக்க என்னிடம் வந்தாள். ஓவியம் முடியும் வரை தினமும் வந்து போவாள். முடிந்த பிறகு அவள் தினமும் வரவேண்டுமென்று நான் கவலைப் பட்டேன். படத்தை முடித்துக் கொடுத்தேன். பணம் வாங்க வில்லை இப்பொழுது தினமும் வந்து போகிறாள்!" என்றான்.

"சரிதான் உன்னையும் உன் திறமையையும் கண்ட பிறகு அவள் உனக்குக் கடன் காரியாகி விட்டாள். அந்தக் கடனைத் தீர்க்கத்தான் இப்படி வருகிறாளோ என்னவோ?"

"அவளா? நானா? யாருக்கு யார் கடன் என்று தெரியவில்லையே?"

"அதிருக்கட்டும் அவள் ஏன் அழுதுகொண்டு போகிறாள்?"

"இதோ பார்! இந்தப் படத்தை வரையத் தந்தவர் சரஸ்வதி பூஜைக்கு வேண்டும் என்கிறார்கள் இன்னும் மூன்று நாட்களுக்குள் இதை முடித்துக் கொடுத்தாக வேண்டும். இதைப்பத்தி அவளுக்குக் கவலை இல்லை! வேலையை விட்டு விட்டு சினிமாவுக்கு வா என்கிறாள். என்னுடைய இலட்சியத்திற்கும் அவளுடைய கனவுக்கும் இடையில் போராட்டம். அதுதான் அழுமூஞ்சித்தன மாகப் போகிறாள்" என்றான்.

"சரிதான் இருவருமே கடன்காரர்கள் தான்!" என்றேன் நான்.

எனக்கும் வேலைத் தொல்லைகள் மூன்று நான்கு நாட்கள் அந்தப் பக்கம் போகவில்லை! ஒரு நாள் ஞாயிற்றுக்கிழமை அவன் வீட்டுக்குச் சென்றேன். அங்கே நாலைந்து வேலையாட்கள் சாமான்களை ஒதுங்க வைத்துக் கொண்டிருந்தார்கள். சுவரில் மாட்டியிருந்த ஓவியங்களெல்லாம் கீழே அடுக்கி வைக்கப் பட்டிருந்தன! நான் உள்ளே நுழைந்தபொழுது மார்க்கண்டு எதிர்ப்பட்டான்.

"வா, வா!! உன்னைத்தான் எதிர்பார்த்திருந்தேன்" என்று வரவேற்றான். மார்க்கண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இதெல்லாம் என்ன மார்க்கண்டு வீடு மாற்றுகிறாயா?" என்று கேட்டேன்.

"விதி மாறிய பிறகு வீடு மார்றதுல ஆச்சரியமில்லை"

"நீ என்ன சொல்கிறாய்?" என்று கேட்டபடி ஆச்சரியத்துடன் அவன் முகத்தைப் பார்த்தேன்.

"நான் தோற்றுவிட்டேன்! ஓவியக் கலைஞன் என்று மார்தட்டிய மார்க்கண்டு தோற்று விட்டான் என்கிறேன்!" என்றான்.

"எனக்கொன்றும் விளங்கவில்லை மார்க்கண்டு விபரமாகச் சொல்லு" என்றேன்.

"உனக்கு எல்லாம் விளங்கி விடும் என்னுடன் வா!" என்றழைத்துச் சென்றான்.

நான் அவனைப் பின் தொடர்ந்தேன். அங்கே அவன் எழுதிய சரஸ்வதி படத்தைக் கண்டேன். அற்புதமான படைப்பு! வீணை மீட்டும் அந்த விரல்களில்தான் எத்தனை லாவகம். அந்தத் தளிர் விரல்களைப் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது மென்மையான அந்த வீணையின் நாதம் மெல்ல வந்து காதுக்குள் புகுவது போன்ற ஒரு பிரமை!

"அற்புதமான படைப்பு!" என்று வாய்விட்டுப் பாராட்டினேன்.

"அற்புதம்தான். ஆனால் அவச்சுரம் விழுந்து விட்ட அற்புதம்!" என்றான் அவன்.

"ஏன்! என்ன நடந்தது?" ஆவலோடு கேட்டேன்.

"என்ன நடக்க வேண்டுமென்று நான் எதிர்பார்த்தேனோ அது நடக்கவில்லை. எது நடக்கக் கூடாதோ அது நடந்து விட்டது.

"ஏன் இதை அவர்கள் கொண்டு போகவில்லையா?"

"இல்லை கலைவாணிதான் என்னைச் சோதித்து விட்டாளே!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் அவன் முகத்தைப் பார்த்தேன். அவன் பெருமூச்சு விட்டு விட்டு பக்கத்தில் இருந்த படம் ஒன்றை எடுத்துக் கலைவாணியின் படத்துடன் வைத்தான். பிறகு!!

"பார்! நன்றாகப் பாரு! கலைவாணி எப்படி என்னைச் சோதனைக்குள்ளாக்கி இருக்கிறாள் பார்!" என்றான்.

நான் பார்த்தேன். இரண்டு படங்களையும் உற்றுப் பார்த்தேன். ஒன்று அவன் காதலியின் படம். மற்றது கலைவாணியின் படம். அந்த இரண்டு படங்களையும் பார்த்து நான் அதிர்ந்து போனேன்! ஏமாற்றத்தோடு அவன் முகத்தைப் பார்த்தேன்.

"உள்ளத்தில் இருந்தது உருவத்தில் பதிந்து விட்டது. ஒரு பெண்ணின் முகத்தைப் பார்த்துச் சரஸ்வதிக்கு முகம் வைத்தது என்று குற்றம் சாட்டினார்கள்! நான் என்ன செய்வேன்? மனித முகத்தைத் தெய்வத்துக்கு வைத்தால் அது வணக்கத்துக்குப் பயன்படாது என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்கள்!" அவன் கண்கள் கலங்கி விட்டன.

என்னால் ஒன்றுமே பேசமுடியவில்லை. நான் அதிர்ந்து போய் நின்றிருந்தேன். திரும்பவும் அவன் பேசினான்.

"இது எனக்குப் பெருத்த அவமானம்டா! ஓவியக் கலைக்கு மாசு கற்பித்த அவமானம்! கலைவாணி என்னைச் சோதித்தாள். நான் தோற்றுப்போய் விட்டேன். அந்தக் காலத்தில் நமது ஆசிரியர் சொன்னாரே? அது போல என் விரல்கள் விறகு வெட்டுவதற்குக் கூடப் பயன்படுமோ என்னவோ?" என்றான்.

"இப்பொழுது என்னதான் செய்யப் போகிறாய் மார்க்கண்டு?" என்று கேட்டேன்.

"நான் அவள் வீட்டுக்கு மூட்டை கட்டுகிறேன்" என்றான்.

அதன் பிறகு?

அவன் கலைஞனாக இல்லை கணவனாகி விட்டான்!

- *1960*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர்வலம்

மனிதன் ஏன் பிறக்கிறான்? என்ற கேள்விக்குப் பல தரப்பட்ட பதில்கள் வரலாம்! ஆனால் பெண் ஏன் பிறக்கிறாள் என்று கேட்டால், 'பிள்ளைகளைப் பெற்றெடுக்க' என்ற பதில் உடனே வரும்!

முகத்தைத் திருப்பிக் கொள்வதில் பயனில்லை. கொஞ்சம் நேராகப் பார்க்கும் தைரியம் வேண்டும் நமக்கு.

நமது சமூகமும் அதன் அமைப்பும் இப்படி முகத்தைத் திருப்பிக் கொள்ளும் மனப்பான்மையில்தான் பின்னப்பட்டுக் கிடக்கிறது. பெண்களைப் பற்றி எண்ணிப் பார்க்கும் பொழுது தாய்மையும் தனித்து நின்று அழிந்து போகும் தன்மையும் தான் மிஞ்சி இருக் கின்றன. இவற்றை விட வேறு ஏதாவது இருக்கிறதா? இருக்கிற தென்றால் அது என்ன? என்ன அது?

ரகுமத்து தனக்குத் தானே இந்தக் கேள்வியைக் கேட்டுக் கொண்டாள். கடைசி வரை பதில் கிடைக்கவில்லை அவளுக்கு.

நீட்டி நிமிர்ந்து படுக்கையில் கிடந்தாள் ரகுமத்து. வீடு இருண்டு கிடந்தது. திண்ணையில் எரிந்து கொண்டிருந்த விளக்கு வெளிச்சம், கதவிடுக்கால் நுழைந்து வீட்டுச் சுவரில் நீண்ட ஒளிக்கோடு போட்டுக் கொண்டிருந்தது. எண்ணங்களை உதறித் தள்ளி விட்டு ஆழ்ந்த நித்திரையில் மூழ்கிவிடத் துடித்தது அவள் நெஞ்சு. முடியவில்லை. நெருப்பில் வாட்டிய வெற்றிலை போல் துவண்டு கிடந்தது அவள் தளிர் மேனி. நெஞ்சு மட்டுமென்னவோ காதரைச் சுற்றி வளைந்து கொண்டிருந்தது.

யார் இந்தக் காதர்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரகுமத்தைப் பொறுத்தவரையில் உடல், உயிர், உலகம், வாழ்க்கை எல்லாம் அந்தக் காதராகத்தான் இருந்தான். சற்றுத் தூரத்தில் இருந்து கலியாண வீட்டுச் சந்தடியும் சலசலப்பும் அவள் காதில் வந்து விழுந்து கொண்டிருந்தன. வீட்டுக்கு முன்னால் தெருவில் மனித நடமாட்டமும் பேச்சுக் குரலும் கேட்டன. எல்லாம் கலியாண வீட்டுச் சந்தடிகள் தாம்.

ரகுமத்தின் புலனில் பாதி அழுது வடியும் தனது எதிர்காலத்தைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தது. மற்றொரு பாதி கலியாண வீட்டுச் சந்தடிகளைக் கிரகித்துக் கொண்டிருந்தது.

மூடியிருந்த கண்களைத் திறந்து இருட்டைப் பார்க்க வேண்டு மென்று நினைத்தாள். ஆனால்! அந்தக் கண்களுக்குள் காதர் நின்றான். கண்களைத் திறந்தால் அவன் நழுவி விடுவானோ? அவள் கண்களைத் திறக்கவில்லை. வாழ்க்கையில் நழுவி விட்ட வனை, நிலையில் இழுத்துப் பிடித்து நிறுத்த முயன்றாளா? முயல்வதற்கு என்ன இருக்கிறது? உயிர் இருக்கும் வரை அவன் உள்ளம் இருக்கும் வரை அவன் நினைவும் இருக்கும். அது மறக்காது. மறக்கக் கூடிய வகையிலா அவன் அன்பு செலுத்தினான்! அவள் மனம் அசை போடத் தொடங்கியது.

அன்று மாலை ஊரே கலகலப்பும் கட்டுக்கோப்பும் நிறைந்திருந்தது! நாளை வரப்போகும் ஹஜ்ஜுப் பெருநாளைக் கொண்டாடு வதற்காக, மக்கள் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தனர். ரகுமத்தின் வீட்டிலும் அதே நிலைதான்.

ரகுமத்தின் காக்கா செய்யது, தைக்கக் கொடுத்திருந்த உடுப்புகளை எடுப்பதற்காகக் கடைத் தெருவுக்குப் போயிருந்தான். தாயார் கறிபுளி வாங்கச் சந்தைக்குப் போய் விட்டாள். ரகுமத்து காலையில் இருந்து வீட்டு வேலைகளை எல்லாம் செய்து முடித்து விட்டாள். கருக்களானதும் வீட்டுக்குள் மஞ்சள் நீர் தெளித்துச் சாம்பிராணி தூபம் போட வேண்டிய வேலைதான் இருந்தது. அத்தோடு இன்னு மொரு வேலை? மருதாணி அரைத்து கையில் இட்டுக் கொள்ளும் வேலைதான் அது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த இஸ்லாமியப் பெண்ணுக்கும் மருதாணி போட்டு கொள்ள வில்லையென்றால் பெருநாள், கொண்டாட்டமாக இருக்காது. எனவே ரகுமத்து முற்றத்தில் நின்ற மருதாணி மரத்தை நோக்கி நடந்தாள்.

மரம் சற்று வயதானது. கீழே நின்று ஆய்வதற்கு இலைகள் இல்லை. எனவே மரத்தில் ஏறி ஒரு கந்தில் சாய்ந்து நின்றபடி மற்றொரு கந்தில் இருந்த இலைகளை ஆய்ந்து கொண்டிருந் தாள் ரகுமத்து.

அந்தச் சமயம் பார்த்துதானா அவன் வரவேண்டும்? சைய்ய திடம் மருதாணி இலை வாங்கிப் போக வந்தான் காதர். தலை வாசல் கதவைத் திறந்து கொண்டு வளவுக்குள் வந்து விட்டான் அவன். காதரைக் கண்டவுடன் ரகுமத்துக்கு ஒன்றுமே ஓட வில்லை. வெட்கத்தில் அவள் நெஞ்சு குவிந்தது. முகம் சிவந்து வியர்வை அரும்பியது. வேறு வழியில்லை. அவசரவசரமாகக் கீழே இறங்க முயன்றாள். முடியவில்லை. சேலை சதி செய்தது. அவள் சேலை ஒரு மொட்டைக் கந்தில் சொருகிக்கொண்டு அவளைத் திண்டாட வைத்தது. பூமியை நோக்கி ஒரு காலும் கந்தில் ஒரு காலுமாகத் தவித்தாள்.

ரகுமத்தை மரத்தில் பார்த்த காதர் தனக்குள் இலேசாகச் சிரித்தபடி வெளியே போக முனைந்தான். ஆனால் அவள் நிலையைப் பார்த்ததும், ஆபத்துக்குப் பாவமில்லை என்ற உண்மை புரிந்தது. ஒரே பாய்ச் சலில் ரகுமத்தை அணுகி அவள் இடையில் கை கொடுத்துக் கீழே இறக்கினான்.

அவ்வளவுதான். கலைந்த தன் சேலையை அள்ளிப் பிடித்தபடி ஓடினாள். ஓடிச் சமயலறைக்குள் மறைந்துவிட்டாள். வெட் கத்தால் உடலும் உள்ளமும் துடித்தன, அவளுக்கு.

ரகுமத்தைத் தொட்டு இறக்கிய காதர், அவள் கூந்தலின் இருந்து நழுவிய மருதாணிப் பூவை மறக்கவில்லை. அவள் ஓடி மறைந்ததும், கீழே கிடந்த மருதாணிப் பூவை எடுத்து அவள் மறைந்த இடத்தைப் பார்த்தபடி ஒரு புன்சிரிப்போடு முகர்ந்தான். முகர்ந்தபடி நகர்ந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது அந்தச் சிரிப்பிலே அவள் துவண்டாள். அவன் செயலிலே தன்னை மறந்தாள். அவன் தொட்ட இடத்தையும் அதில் கிடைத்த உணர்வையும் எண்ணி அவள் நெஞ்சு தவித்தது. உடலெல்லாம் சிலிர்த்தது. நினைவிலே இன்பத்தை அனுபவிக்கும் பொழுது உணர்விலே எத்தனை வேதனை? அந்த வேதனையிலேயும் இனிமை இருக்கிறதே!

உணர்ச்சி அலைகள் கொந்தளித்த நிலையில் எல்லாவற்றையும் மறந்து தன் இடுப்பை அவன் தொட்டுப் பிடித்த உணர்வை எண்ணி விம்மியது அவள் நெஞ்சு. அவனது அந்தப் பிடியிலே அவள் அடைந்த கத கதப்பு! ஆண்மையின் அழுத்தம்!

"உம்மா......!"

நெஞ்சுக்குள் ஏதோ அடைத்துக் கொண்டது போல் திக்கு முக்காடியபடி கண் விழித்தாள் ரகுமத்து. இருட்டாகிக் கிடந்தது! திண்ணையில் எரிந்து கொண்டிருந்த விளக்கு அணைந்து விட்டது போலும். கலியாண வீட்டுச் சந்தடி மும்முரமாகக் கேட்டுக் கொண்டிருந்தது.

பக்கத்து வீட்டுக் கதவு திறக்கும் ஓசை! அதையடுத்துக் கூரையில் தூங்கிக் கொண்டிருந்த கோழியொன்று கொக்கரித்தது. தெருவிலே காரொன்று கலியாண வீட்டை நோக்கி ஓடுகிறது. திண்ணையில் படுத்துக் கொண்டிருந்த அவள் தாய் இருமிய சத்தம் கேட்டதும் தாயைச் சுற்றி அவள் எண்ணங்கள் சுழன்றன.

உம்மாவின் மனதில் இருந்த ஆசை அதற்கு மாறாக அங்கே நடக்கப் போகும் கலியாணம் பாபம் அந்தத் தாய் உள்ளம் என்ன பாடுபடும்! வேதனைக்குமேல் வேதனை, எண்ணங்களில் மட்டு மல்ல வாழ்க்கையிலும் கூடத்தான்.

இஸ்லாமியப் பண்பாட்டில் விவாகமாவதற்கு முன் ஒரு ஆணும் பெண்ணும் நட்புறவு கொள்வது ஒழுக்கம் கெட்ட செயல்தான். இருந்தும் இளங்கன்று பயமறியாது என்பதற்கிணங்க, ஆசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைந்த உள்ளத்தோடு அன்பு செலுத்தினார்கள், இருவரும். காதர் ஒரு தமிழ் ஆசிரியன். ரகுமத்து ஏழாவது வரை படித்தவள். எனவே பண்பும் நாகரீகமும் தெரிந்து ஆசைக்கு வேக மூட்டாமல் இடம் பொருள் அறிந்து தங்கள் அன்பை வளர்த்துக் கொண்டார்கள்.

சமய சந்தர்ப்பங்களில் – விவாகம் வானுலகில் நிச்சயிக்கப் படுகிறது – என்று வேதாந்தம் பேசுவார்கள் முதியவர்கள். ஆனால்! இங்கே தாய் தந்தையர்கள் தாம் மக்களின் விவாகத்தை நிச்சயிக்கிறார்கள். அதிலும் ஆண்களின் தாய் தந்தையர்கள் என்ன நினைக்கிறார்களோ அதுதான் இறைவன் கட்டளை. அந்தக் கட்டளை காதரைப் பணிய வைத்தது, ரகுமத்தைப் பலி வாங்கி விட்டது.

இன்றிரவு அங்கே காதருக்குக் கலியாணம்! அவன் அங்கே மணக் கோலத்தில் காட்சியளிக்கிறான். இங்கே இவள் பிணமாகிக் கொண்டிருக்கிறாள்.

சமுதாயமும் அதன் சம்பிரதாயங்களும் அவிழ்க்க முடியாத சிக்கல்! புரிந்து கொள்ள முடியாத புதிர்! இல்லையென்றால் நாலு பேருக்கு முன்னால் தாலிக்கட்டுவதன் மூலம் முன் பின் தெரியாத ஒருத்தி மனைவியாவதும் நாலு வருசங்கள் பழகி அன்பு செலுத்திய ஒருத்தி வேற்றாளுமாகி விடும் அற்புதம் நிகழ்கிறதே!

காதர் வாழ்க்கையில் நல்லவன்! ஆனால் தாய் தந்தையர்கள் முன்னால் ஒரு கோழை? ஐந்து ஏக்கர் வேளாண்மை நிலமும், ஒரு புதிய வீடும் சில ஆயிரம் ரூபாய்களும் வேலையைச் சுலப மாக்கி விட்டன. அவன் மாப்பிள்ளையாகிக் கொண்டிருக்கிறான். முன் பின் தெரியாத ஒரு பெண்ணை மனைவியாக்கிக் கொள்ள.

வெடிச் சத்தமும் பெண்களின் குரவை ஒலியும் ரகுமத்தின் கழுத்தைப் பிடித்து நெரித்துக் கொண்டிருந்தன. அந்த வேளையிலே தன் வீட்டில் இருந்து பெண் வீட்டை நோக்கி மாலை அணிந்து மாப்பிள்ளையாக நடைபோட்டுக் கொண்டிருந்தான் காதர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருண்டு கிடந்த தெருவெல்லாம் 'கியாஸ்' விளக்குகளின் ஒளி வெள்ளம் பாய்கிறது. ஊர் பிரமுகர்கள் அரபி மொழியிலே அமைந்த வாழ்த்துப் பாடல்களைப் பாடிக் கொண்டு முன்னால் வர பின்னால் காதர் மாப்பிள்ளையாக வந்து கொண்டிருந்தான். மழை பெய்ய வில்லை வெயில் எரிக்கவில்லை நடு நிசியில் குடை பிடித்து வந்து கொண்டிருந்தான் அவன்.

சந்தடி கேட்டுத் திண்ணையில் படுத்திருந்த ரகுமத்தின் தாயார் கண் விழித்தாள். கலியாண ஊர்வலம் வீட்டை நெருங்கிக் கொண்டிருந்தது. திண்ணையில் உட்கார்ந்திருந்த படியே சாத்தி யிருந்த வீட்டுக் கதவைப் பார்த்தாள். பிறகு

"ரகுமத்து! ரகுமத்து!!" என்று மகளை எழுப்பினாள்.

"என்னும்மா....!" ரகுமத்து குரல் கொடுத்தாள்.

"ஊர்வலம் வருகுது புள்ள.....!"

"நமக்கென்ன உம்மா!"

"ஊர்வலம் பாக்க நீ வரல்லியா புள்ள?"

"என்னத்த பாக்கிற உம்மா! நானும் ஒரு நாளைக்கு ஊர்வலமாப் போறவள்தானே!"

ரகுமத்து எந்த ஊர்வலத்தைப் பற்றிச் சொன்னாள் என்பது அந்தத் தாய்க்குத் தெரியாது. தெரிந்து கொள்ள அந்த முதியவள் முயல வில்லை.

**- 1967**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு நாள் ஒரு பொழுது

அது ஒரு சாம்ராச்சியம்! ஆமாம் எழுத்தாளனின் சாம்ராச்சியம்!

மக்கள் மனதை மாபெரும் மாற்றங்களுக்குள்ளாக்கும் ஆற்றல் படைத்த எழுத்தாளனுக்கு சாம்ராச்சியம் ஒன்று தேவைதான். அவ்வாறான ஒரு சாம்ராச்சியத்தின் அதிபதியாக இருந்தவர்தாம் திருவாளர் பரப்பிரம்மம்.

கடந்த காலத்துக்கும் எதிர்காலத்துக்கும் இடையே உள்ள மேடு பள்ளங்களை கற்பனை மெருகோடு எவன் சமப்படுத்துகிறானோ அவனே எழுத்தாளன் என்பது அவருடைய கொள்கை.

உண்மைக்கும் அறிவுபூர்வமான சிந்தனைக்கும் இடையே நின்று தார்மீக அடிப்படையில் ஒரு வலுவான சமுதாயத்தை உருவாக்கு பவன் எவனோ அவன் எழுத்தாளன்.

இந்த ஆற்றல் நிறைந்த வெளிப்பாட்டிலேதான் மங்கள ஒலியின் மத்தியிலே மரண ஓலத்தையும், மரண ஓலத்தின் மத்தியிலே முதல் இரவின் வளையோசையையும் எழுதிக் காட்ட முடிகிறது.

இத்தகைய ஒரு நெஞ்சமுழுத்தம்தான் ஒரு எழுத்தாளனுக்குத் தேவை. அதுதான் அவனுடைய ஆயுதம்!

இக்கோட்பாடுகளையெல்லாம் ஒரு வெள்ளைத் தாளில் எழுதி விட்டு நிமிர்ந்தார் பரப்பிரம்மம்.

அவ்வேளை வாசலிலே பெண்கள் பேசும் குரல் கேட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரப்பிரம்மம் மெதுவாக எட்டிப் பார்த்தார். அங்கே வாசலிலே மூன்று பெண்கள் நின்று கொண்டிருந்தார்கள்.

எழுத்தாளர் பரப்பிரம்மம் தமது பார்வையை சமயலறைப் பக்கம் திருப்பி.

"டேய்....!" என்றார் - மனைவியை இப்படித்தான் அவர் அழைப்பது.

அந்த 'டேய்' முந்தானையில் கையைத் துடைத்துக் கொண்டு "என்ன வேணும்?" என்று கேட்டது.

"அங்கே வாசலில் யாரோ வந்து நிற்கிறார்கள். யாரென்று பாரேன்?" என்றார்.

சிறிது நேரத்துக்குப் பின் மூன்று பெண்கள் எழுத்தாளர் மனைவியைப் பின் தொடர்ந்து வந்தார்கள். அவர்களின் வருகையை அத்தர் வாசைன கட்டியம் கூறியது.

"இவங்க ஒங்களப் பாக்க வந்தாங்களாம்" என்று கூறிவிட்டு மனைவி போய் விட்டாள்.

"வணக்கம் சார்!" என்று கூறி அங்கே வந்த மூன்று பெண்களும் கை குவித்தனர்.

அவருடைய அந்த சாம்ராச்சியத்தில் ஒரு நாற்காலி தான் உண்டு! எனவே வீட்டுக்குள் புகுந்து ஒரு பக்கீஸ் பெட்டியைக் கொண்டு வந்து வைத்தார். அது சங்கப் பலகை மூன்று பெண்களையும் ஏற்றுக் கொண்டது.

"கலைமகள், அலைமகள், மலைமகள் போன்று மூவர் வந்திருக்கிறீர்கள்! உங்களைப் பற்றி நான் தெரிந்து கொள்ளலாமா?" என்று கேட்டார்.

"நாங்கள் பல்கலைக்கழக மாணவிகள் சார்! லீவில் வந்திருக்கிறோம். அப்படியே உங்களையும் பார்த்துக் கொண்டு போகலாம் என்று வந்தோம்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மிக்க மகிழ்ச்சி! என் கதைகளைப் படித்திருக்கிறீர்களா?" எழுத்தாளர் கேட்டார்.

"என்ன சார்! அப்படிக் கேட்டு விட்டீர்கள்? உங்கள் கதைகளைப் படித்து பிறகுதான் மற்ற விசயங்கள்" என்றாள் ஒரு பெண்.

எழுத்தாளர் பரப்பிரம்மத்தின் நெஞ்சு கொஞ்சம் நிமிர்ந்தது.

"சார்! எங்களுக்குச் சில சந்தேகங்கள் அவற்றை உங்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளவே உங்களிடம் வந்தோம்."

"தாராளமாகக் கேளுங்கள்" என்று தன்னம்பிக்கையோடு கூறினார் பரப்பிரம்மம்.

"எழுத்தாளர் ஆவதற்கு என்ன சார் முக்கியம்!" கேட்டாள் ஒரு பெண்.

"பிறவி!"

ஒரே வார்த்தையில் பதில் கூறினார் பரப்பிரம்மம். பெண்கள் மூவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து விழித்தனர்.

விசயத்தைப் புரிந்து கொண்ட எழுத்தாளர் மேலும் கூறினார்.

"எழுத்தாளனை உருவாக்க முடியாது. அவன் பிறக்க வேண்டும்!" என்று கூறினார்.

"அப்படியென்றால்?" மற்றொரு பெண் கேட்டாள்.

"பூமிக்கடியில் கிடக்கும் கற்களையெல்லாம் எடுத்து மாணிக்கக் கல்லாக மெருகேற்ற முடியுமா?"

உற்பத்தியிலேயே அது மாணிக்கக் கல்லாக இருக்க வேண்டும். இப்பொழுது உங்களுக்குப் புரியும்" என்று நினைக்கிறேன்.

புரிந்து கொண்டது போல் மூவரும் தலையசைத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பத்திரிகையாளனுக்கும் எழுத்தாளனுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைச் சொல்லுங்க சார்!"

பரப்பிரம்மம் தனது குரலைக் கொஞ்சம் சரிப்படுத்திக் கொண்டார்.

"நாட்டின் செய்திகளுக்கு அழுத்தம் கொடுப்பவன் பத்திரிகை யாளன். மக்களின் வாழ்க்கைக்கு அர்த்தம் தருபவன் எழுத்தாளன்."

"பத்திரிகையாளன் தொழிலுக்கு உழைக்கிறான். எழுத்தாளன் புகழுக்காக எழுதுகிறான்."

"ஏன் சார்? உங்களுடைய சிறுகதை ஒன்றில் தமிழ் நாகரீகம் பற்றிக் கூறியிருக்கிறீர்களே? அது பற்றிக் கொஞ்சம் விளக்கமாகச் சொல் லுங்களேன்" ஒரு பெண் கேட்டாள்.

"நாகரீகம் என்பது காரை முள்ளில் துணியைப் போட்டுவிட்டு இழுத்துப் பிய்க்கும் முயற்சியல்ல! மென்மையான மன உணர்வு களின் வெளிப்பாடு" - இப்படி எழுதியிருக்கிறேனே! அதைத்தானே கேட்கிறீர்கள்?"

"ஆமாம் சார்! அதைத்தான் சொல்லுங்கள்."

"நாகரீகம் என்றால் என்ன?"

பரப்பிரம்மம் இப்படி ஒரு கேள்வியைப் போட்டுக் கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்தார்.

"நாகரீகம் என்பது ஒழுக்கம், அழகு, மரியாதை நளினமான மனிதத் தன்மையின் வெளிப்பாடு, பிறர் மனம் புண்படாமல் வாழும் வாழ்க்கை முறை! இவைகள் தாம் நாகரீகம்!"

"இன்று நேற்றல்ல. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக நாம் பாதுகாத்து வரும் மரபு இது."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பண்டைக் காலத்தில் நமது முன்னோர்கள் வாழ்ந்த வாழ்க்கை முறை, இந்தக் காலத்து வாழ்க்கை முறையோடு இசைந்து செல்வதே அதன் வெற்றி! இதுதான் தமிழ் நாகரீகம் புரிகிறதா உங்களுக்கு?"

"புரிகிறது சார்! சொல்லுங்கள்" என்றாள், மற்றொரு பெண்.

எழுத்தாளர் பரப்பிரம்மத்தின் சிந்தனை பெருக்கெடுத்தது. இனி அதைத் தடுத்து நிறுத்த முடியாது. அவர் அந்தப் பெண்களை ஒரு முறை பார்த்து விட்டுப் பேசத் தொடங்கினார்.

"எதைப் புரிந்து கொண்டீர்கள்? சதை பிளந்து இரத்தம் வடிவது போன்ற உதடுகள்! நெற்றியிலே நெருப்புத் துண்டை ஒட்டி வைத்தது போன்று பொட்டு! உடலை மட்டுமல்ல உள்ளத்தையும் திறந்து காட்டுகின்ற ஆடையலங்காரம்! இவைகள்தாம் நாகரீகம் என்று நம் தமிழ்ப் பெண்கள் கருதுகிறார்கள்."

"தமிழ் இனத்திற்குத் தீவினை வேறெங்குமிருந்து வரவேண்டியதில்லை. இன்றைய மனப்பான்மையே போதும் நம்மைச் சாகடிக்க!"

"ஒரு இனத்தின் பண்பாட்டைப் பாதுகாக்கும் பொறுப்பு பெண்ணிடம்தான் இருக்கிறது. பண்புள்ள ஒரு பெண்தான் பயனுள்ள ஒரு பிள்ளையைப் பெற முடியும்."

"கவர்ச்சிதான் நாகரீகம் என்றால் நம் பெண்கள் இருக்க வேண்டிய இடம் புடவைக் கடை கண்ணாடிப் பெட்டிகள் தாம்!"

பரப்பிரம்மம் பேச்சை நிறுத்தி விட்டு மேசை மேல் இருந்த செம்பை எடுத்து நீர் பருகினார்.

மூன்று பெண்களின் முகங்களும் வியர்த்துக் கொட்டின. ஒருத்தி மற்றவளின் காதுக்குள் "போவோமா?" என்று கிசுகிசுத்தாள்.

இதற்குள் மற்றொரு பெண் "ஏன் சார்! தமிழ்மொழி பற்றி உங்கள் கருத்தென்ன?" என்று பேச்சைத் தொடக்கி விட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரப்பிரம்மம் வாயைத் துடைத்து விட்டுப் பேசலானார்.

"தமிழ் மிகத் தொன்மையானது, அழிக்க முடியாத அரும்பெரும் காப்பியங்களைத் தன்னகத்தே கொண்டிருப்பது. இந்தத் தமிழ் மொழி! பல ஆயிரம் வருடங்களுக்கு முன் தோன்றி வளர்ந்து, வாழ்ந்து உலகெலாம் வேரூன்றி நிலைத்து நிற்கும் இந்தத் தமிழ் மொழி பெற்றிருக்கும் இலக்கியச் செல்வங்கள் ஏராளம்."

"அந்தப் பண்டைய இலக்கியங்கள் காலத்தை வென்று இன்றைய சமுதாயத்தின் உள்ளத் துடிப்புகளை வெளிப்படுத்துகின்றனவே? இது ஒன்று போதும் இன்னும் பல ஆயிரம் ஆண்டுகள் தமிழ் வாழ்வதற்கு."

"தமிழ் சாகிறது என்று கூச்சல் போடுகிறார்களே? அவர்களை நாம் மன்னித்து விடுவோம்! ஆனால்! தமிழ் நாகரீகம் பண்பாடு இவைகள் புதை குழியில் வைக்கப்படுகிறதே? இது பற்றி ஏன் யாரும் பேசுவதில்லை?"

"பண்டைய காலத்தில் இருந்தே இறுக்கமான மனித உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுத்து வந்தவர்கள் நாம். பல நூறு ஆண்டுகளாக ஆத்ம சோதனை என்ற மயான பூமியிலே தங்களைச் சாம்பலாக்கிக் கொண்ட நமது அறிஞர்கள் இலக்கியப் படைப்பாளிகளின் அரும்பெரும் சாதனைகளையெல்லாம், அழித்து ஒழித்த பிறகு தமிழுக்கு என்ன வேலை இருக்கிறது? என்று கேட்கிறேன்."

இப்படியொரு கேள்வியோடு எழுத்தாளர் பரப்பிரம்மம் தன் பேச்சை நிறுத்திக் கொண்டார்.

மூன்று பெண்களும் வாயடைத்துப் போய் உட்கார்ந்து கொண் டிருந்தனர்.

"என்ன பேசாமல் இருக்கிறீர்கள்?" என்று கேட்டார் எழுத்தாளர்.

"நீங்கள் சொல்வதெல்லாம் சரிதான் சார்" என்றாள் ஒருத்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சிலம்பம் விளையாடுவதுபோல் பிரச்சினைகளை நன்றாகச் சாடுகிறீர்கள் சார்!" என்றாள் மற்றொருத்தி.

இந்தப் பாராட்டுகள் எழுத்தாளர் நெஞ்சை நிமிர்த்தியது.

இந்தச் சமயத்தில் ஒரு பெண் மற்றவளின் காதுக்குள் "மணி பத்துடி!" என்றாள். இதையடுத்து அந்த மூன்று 'டி'க்களும் எழுந்து நின்றனர்.

"வணக்கம் சார்! உங்களைச் சந்தித்ததில் எவ்வளவோ விசயங்களைத் தெரிந்து கொண்டோம் சார்! நாங்கள் வருகிறோம்."

மூவரும் வணங்கி விடை பெற்றனர். எழுத்தாளர் பரப்பிரம்மம் வாசல் வரை சென்று வழியனுப்பிவிட்டு வந்தார். அந்த நடையிலே ஒரு ராஜ கம்பீரம், மிடுக்கு இருந்தது. வீட்டுக்குள் நுழைந்ததும் அவர் மனைவி எதிர்ப்பட்டாள்.

"என்ன? உங்கள் இலக்கிய சபா மண்டபம் முடிந்து விட்டதா? இனி நம்மட சமையல் சபா மண்டபத்தைப் பத்திக் கொஞ்சம் சொல்லுங்களேன்" என்றாள்.

அவளுடைய இலக்கியச் செறிவான பேச்சைக் கேட்டு அவர் மனம் பெருமிதம் கொண்டது. மாபெரும் எழுத்தாளரின் மனைவி யல்லவா? அப்படித்தான் பேசுவாள் என்று நினைத்தபடி தமது பொக்கிஷப் பெட்டி – அது தான் அவருடைய சட்டைப் பையைத் துளாவினார். அங்கே இருந்து ஒரு இரண்டு ரூபாய் நோட்டும் இரண்டு ஐம்பது சதக் குத்தியும் வெளியே வந்தன. அதை அவர் தன் மனைவியின் கையில் கொடுத்தார்.

இந்தச் சமயத்தில் பாடசாலைக்குப் போற அவர் மகன் வந்து நின்றான்!

"ஏன் தம்பி பள்ளிக்கூடம் போகவில்லையா?" என்று கேட்டாள் எழுத்தாளர் மனைவி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தவணைப் பணம் கட்டல்ல வெளிய அனுப்பிட்டாங்கம்மா என்றான் அவர் மகன்."

எழுத்தாளரை நிமிர்ந்து பார்த்தாள் அவர் மனைவி. நிமிர்ந்து நின்ற எழுத்தாளர் நெஞ்சு அந்தப் பார்வையில் உள் வாங்கியது. தன் கையில் இருந்த காசைத் தன் மகன் கையில் கொடுத்து "தவணைப் பணத்தைக் கட்டிவிட்டு மிச்சக் காசிக்கு பாலும் வாழைப்பழமும் வாங்கி வா தம்பி?" என்றார்.

இப்பொழுது மாபெரும் எழுத்தாளர் பரப்பிரம்மம் தமது சாம்ராச்சியத்தின் சிம்மாசனத்தில் இருந்து இறங்கிப் பூமிக்கு வந்திருந்தார்.

தலையணைக்குப் பதிலாகத் தமது இரு கரங்களையும் தலைக்குக் கீழே அணை கொடுத்துக் கூரை முகட்டைப் பார்த்தபடி படுத்திருந்தார் எழுத்தாளர்.

பண்டைய நாகரீகமும் பழம்பெரும் இலக்கியங்களும் அவர் சிந்தனையை விட்டு மறைந்து விட்டன. தமிழையும் தமிழன் நாகரீகத்தைப் பற்றிய கவலையும் இப்பொழுது அருக்கில்லை.

இருந்த கவலை ஒன்றுதான்.

இன்றையப் பொழுது எப்படிக் கழியும்?

*- 1981*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரப் பாதை

காலையில் வழக்கத்துக்கு மாறாகச் சற்று முன்னதாகவே கண் விழித்தேன். சூரியன் உதயமாகவில்லை. சேலைக்கரை போன்று மஞ்சளும் கருப்பும் கலந்து அடிவானம் காட்சியளித்தது. காகங்கள் கதறிக் கொண்டு வீட்டுக்குமேல் பறந்தன. எனது குட்டி நாய் 'ஜோலி' ஒன்றுமில்லாத ஒன்றைப் பிடிப்பதுபோல அங்குமிங்கும் பாய்ந்து விளையாடியது.

நான் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தேன். செய்வதற்கு ஒன்றுமில்லை சிந்தனை சுழன்றது.

கண்ணுக்கெட்டிய தூரத்தில் இருந்த கடல் தன் அலைக் கரங்களைத் தட்டி ஆதவனை அழைத்தது. கடைசி முறையாகத் தன் கூவல் சத்தத்தை முடித்துக் கொண்டு சேவல் மரத்தில் இருந்து கீழே குதித்தது. குட்டி நாய் 'ஜோலி' சேவலைத் துரத்தியது.

வாடைக் காற்று மெதுவாக உலகத்தைத் தடவிக் கொண்டிருந்தது. குளிரில் இருந்து என்னைப் பாதுகாத்துக் கொள்ள இரு கைகளையும் மார்பு மீது கட்டி அணைத்துக் கொண்டேன். இந்தச் சமயத்தில் எங்கிருந்தோ ஒரு எண்ணத் துண்டு சிதறியது.

"பத்திரிகைக்கு ஏதாவது எழுதலாமே!"

உடனே மனம் கேட்டது "என்ன எழுத்தாளனாகப் போகிறாயா?"

"ஆம்! இலக்கியச் சேவை செய்யப் போகிறேன்" அறிவு சொல்லிற்று.

மனம் இலேசாகச் சிரித்துவிட்டு, 'அது பயங்கரப் பாதை உனக்கு வேண்டாம்.'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுக்குக் கோபம் வந்து விட்டது. "உனக்கு எப்பொழுதும் கொப்புத்தாவும் குணம்தான். முன்பெல்லாம் எழுது எழுது என்றாய் இப்பொழுது என்னடாவென்றால் வேண்டாம் என்கிறாய்!"

"கோபப்படாதே, உலகத்தின் ஓரக் கண்களில் சிக்கிச் சிதைந்த நான் கண்ட அனுபவம் உனக்கும் கிடைத்திருந்தால் நீ இப்படிப் பேச மாட்டாய், கண்ணைத் திறந்து கொண்டு பள்ளத்தில் விழு வதற்கும் இலக்கியச் சேவை செய்வதற்கும் என்ன பொருத்தம்?"

"இலக்கியச் சேவை! மனம் சிரித்தது பொருத்தமில்லாமலா? அர்த்தமில்லாமல் எதுவும் நடப்பதில்லை தம்பி!" அர்த்தமற்ற பேச்சு. அறிவு முகத்தைத் திருப்பிக்கொண்டது.

"ஆரம்பத்தில் நீ அப்படித்தான். முட்டிய பின் தான் தலையைக் குனிந்து கொள்வாய். அனுபவம்தான் அர்த்தமாகிறது என்று உனக்குத் தெரியாதா?"

"நீ என்ன அனுபவத்தைக் கண்டு விட்டாய் 'சுகவாசி'! அறிவுக்குக் கோபம் வந்து விட்டது."

"நானும் காணவில்லை நீயும் காணவில்லை கண்டவர்களையாவது கேட்டிருக்கிறோமல்லவா?"

"அவர்களும் வாழ்ந்து போனவர்கள் தானே?"

"தாழ்ந்து போனவர்கள்! வாழ்ந்து வழிகாட்டியவர்கள்."

"அவர்கள் காட்டிய பாதையைத்தான் நான் பின்பற்றுகிறேன்" அறிவுக்குக் கொஞ்சம் தைரியம் பிறந்தது.

"எதை! அவர்கள் வாழ்ந்து துன்பப்பட்ட அந்தப் பயங்கர வாழ்க் கையையா?"

"இல்லை, அவர்கள் இலக்கிய வாழ்க்கையை!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“பஞ்சமும் பசியும் நிறைந்த அவர்கள் வாழ்க்கையையா? தாங்கள் கண்ணீர் விட்டதுமில்லாமல் தங்கள் பெண்டு பிள்ளைகள் கண்ணீர் விடுவதைப் பார்த்துக் கதறியழுத அவர்கள் வாழ்க்கையையா?”

அறிவுக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை ஒரு விதமாகத் தட்டுத் தடுமாறிக் கொண்டு “இல்லை அவர்கள் செய்த சேவையை”

“சேவையினாலே எல்லாம் பூரணத்துவம் ஆகிவிடும் என்று எண்ணுகிறாயா?”

“அதுதானே ஊழிக் கூத்தின் தத்துவம்”

“அது தேவர்களுக்குத் தம்பி! மனிதர்கள் வாழவேண்டியவர்கள் வாழ்க்கைத் தத்துவத்தைத்தான் முதலில் உணர வேண்டும்”

“வாழ்க்கையும் ஒரு சேவைதானே?”

“கடமையின் வரம்புக்குள் செய்யும்பொழுது வாழ்க்கை சேவை யாகும். நீ புகழ்ச்சியை விரும்புகிறாய். அது மின் மினிப் பூச்சி! இருட்டிலேதான் ஒளிவீசும்” ஆனால் உன்னை நம்பி ஒட்டிய வயிறுடன் வீட்டு மூலையில் முடங்கிக் கிடக்கும் உன் சொந் தங்களுக்கும் செய்ய வேண்டிய கடமையைப் பற்றிக் கவலை யில்லையா உனக்கு?”

“இலக்கியச் சேவை சமூகத்துக்குச் செய்வது சமூகம் என்னை வாழவைக்கும்.”

“அதனால்தான் சொல்கிறேன் நீ பயங்கரப் பாதையை நோக்கிச் செல்கிறாய் என்று. இளநீர் குடிப்பவனுக்கு மரத்தைப் பற்றிய கவலை இருப்பதில்லை! அவனுக்கு வேண்டியது இளநீர் தான்! இப்படித்தான் இருக்கிறார்கள் இலக்கிய ரசிகர்கள். அவர்களுக்கு வேண்டியது இலக்கியம் ஆக்கியவனைப் பற்றிக் கவலையில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்கு இலக்கியம் ஒரு பலிபீடம்! ஆயிரக்கணக்கான அறிவுச் சுடர்களைப் பலியாக்கி விட்டது இந்த இலக்கிய பீடம்! நீ அதற்கொரு போடுகாயாகப் போகிறாயா? என்ன?"

அறிவு பயந்து விட்டது என்ன? 'இலக்கியம் ஒரு பலி பீடமா?'

மனம் சிரித்தது அதற்கு வெற்றி கிடைக்கப் போவதில் ஒரு நம்பிக்கை.

"இவ்வளவுதான்? உலகமும் உண்மையும் தெரியாமல் உளறி விட்டாய் போலும். கேள்! இலக்கியத்தின் சரித்திரத்தை" மனம் உற்சாகத் துடன் பேச ஆரம்பித்தது.

"இலக்கியம் ஒரு நந்தவனம்தான். அதன் மலர் மணம் உன்னைப் பரவசப் படுத்தலாம். வெகு தூரத்துக்கப்பால் இருக்கும் புகழ் ஏணி உன்னை வா! வா!! என்றழைக்கலாம். அதில் மயங்கிக் காலை எடுத்து வைத்தாயோ? உன் காலை வாரியடித்து வாழ்க்கைப் பல்லைப் பிடிங்கிவிடும்"

"இலக்கியச் சேவை செய்தவர்கள் எண்ணிறந்தவர்கள். கவிகள், கதாசிரியர்கள், நாடகாசிரியர்கள், அறிஞர்கள், பெரும்பாலும் அவர்கள் எல்லாரையும் பலி வாங்கி விட்டது இந்த இலக்கிய பீடம்"

"இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் கம்பர்மகன் அம்பிகாபதி வாழ்ந்தான். அவன் கவிஞன்! இலக்கியச் சேவை செய்யப் பிறந்தவன். ஆனால் உருவாகு முன்பே உதறியடித்துவிட்டது இந்த இலக்கியம் அவனை!"

"குலோத்துங்கன் சபையிலே வால்மீகியின் இராமாயணத்தை அடிப்படையாக வைத்துத் தமிழிலே இராமாயண காவியம் இயற்ற ஒப்புக்கொண்டார் கம்பர்! புகழுக்கும் பொருளுக்கும் ஆசைப்பட்டும்! அம்பிகாபதி அதை எதிர்த்தான் மறுத்தான்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“தமிழ் இலக்கியம் எப்பொழுதும் பிச்சை வாங்கியதில்லை, முத்தமிழிலேயே முழுக்காவியம் இயற்ற வேண்டுமென்றான்.”

“மன்னன் மறுத்தான் மற்றவர்கள் சிரித்தனர். அம்பிகாபதி யாரையும் பொருட்படுத்தவில்லை.”

“தமிழன் பிச்சை வாங்கமாட்டான் என்று கர்ச்சித்தான். பலன் அரச அவையை விட்டு அப்புறப்படுத்தப்பட்டான். முடிவு என்ன தெரியுமா? ஒன்றைக் காரணமாக வைத்து மற்றொன்றுக்குப் பலிவாங்கியது இலக்கிய பீடம். மன்னன் மகளைக் காதலித் தான் என்ற சாயையில்.”

உடனே அறிவு குறுக்கிட்டது. “இது பழைய கதை தமிழ் இலக் கியத்தில்.”

“ஏன் மேலை நாட்டிலக்கியம் வேண்டுமா?” மனம் தொடர்ந்தது தன் ஆராய்ச்சியை.

“மில்டன்! ஒரு மேலை நாட்டு இலக்கிய கர்த்தா. அவன் கண்களில் இருந்து ஓடிய ஒவ்வொரு நீர்த் துளியும் ஒவ்வொரு காவியமாக உருவெடுத்தது. அவன் மகள் அவனது இலக்கியச் சேவைக்குக் கை கொடுத்தாள். ஏன் இயற்கை அவன் கண்களைக் குருடாக் கியதால்.”

“டோக்கியுட்டோ டோசோ! 51 ஆண்டுகள் இந்த உலகத்தில் வாழ்ந்தான்! இல்லை! வாழ்க்கையுடன் போராடினான். அவன் கவி பாடினான் இலக்கியம் வாழ! இலக்கியச் சேவைதான் அவன் வாழ்வாக இருந்தது. இதற்கு இலக்கிய பீடம் கொடுத்த பரிசு என்ன? ஏழாண்டுச் சிறைவாசம். ஒரே தொல்லை, வாழ்வு துன்பக்காடு, பசி, பிணி, முடிவில் இலக்கியமே அவனைப் பலி வாங்கியது.”

“மகாகவி புஸ்கின்! கண்ணீரையும் கவிதையையும் இலக்கிய பீடத்துக்கு அர்ப்பணித்தவன். இயற்கையை இலக்கியமாக்கினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செடிகளின் இலை அசைவிலே அவன் கவியோசை கிளம்பியது! அவனது ஒவ்வொரு கவிதையும் துயரத்தின் சாயைதான். துன்பம் அவனுக்குக் குடை பிடித்தது. அப்பொழுதும் அவன் இலக்கிய சேவை செய்தான். பலன்? வறுமையின் உச்சியிலே நான்தனியாக விடப்பட்டேன் என்று அழுது கொண்டே செத்தான் இல்லை இலக்கியம் கொலை செய்தது அவனை."

"இஸ்டீவன்சன்! ஒளிக்குமுன் இருள் என்ன செய்யுமென்று கேட்டான். பாத்திரங்களைப் பேனா முனையில் நடக்கவிட்டுப் பார்த்தவன் அவன். அவனுக்கு என்னத்தைக் கொடுத்தது இந்த இலக்கிய பீடம்?"

"வில்லியர்! இந்த உலகத்தைப் பார்த்து ஆச்சரியப்பட்டான். பிணிதான் அவனுக்கு வசந்த காலம், வறுமை தான் அவனுக்குத் தென்றல் காற்று. வாழ்பவர்களைப் பார்த்து சாவு தான் வந்தனை செய்ய வேண்டுமென்று கர்ச்சித்தான். பசி தாங்க முடியாது நோயின் அடிதாங்க முடியாது தற்கொலை செய்து கொண்டான்."

இஸ்டீன்பேக்! உலகத்துக்கு உண்மையைச் சொன்னவன் கடவுளைத் தேடினேன் காணவில்லை சைத்தான்கள் தான் கடவுளாக நடிக்கின்றன!, அவன் கதைகள், கவிதைகள் பித்தம் தெளியாத வெறும் உளறல் என்றது ரசிகர் கூட்டம். "ஆம், நான் பைத்தியக்காரன் தான் இலக்கியச் சேவை செய்யச் சளைக்காத பைத்தியக்காரன், என்றான். முடிவு? 'பித்தன்' என்ற பட்டத்தை அளித்தது இலக்கிய பீடம்."

"இது மேலை நாடு மறைத்து வைத்திருக்கும் இலக்கியத்தின் சரித்திரம். நம் தமிழ் நாட்டுக் கவியைத் தெரியுமா உனக்கு?"

"அமுதகீதம் பாடிய ஆற்றல் மிக்கக் கவிஞன் அவன், குமுறும் தன் உள்ளத்தை இரு கைகளாலும் அமுக்கிப் பிடித்தபடி உணர்ச்சி பொங்கக் கவி பாடினான். தமிழ் இலக்கியத்தில் மறுமலர்ச் சித்தேன் கலந்து ஊட்டியவன். இலக்கியத்துக்கு விடுதலை தந்தவன் தேச விடுதலைக்குப் பாடுபட்டவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றொரு நாள் மகாத்மா காந்தி முதல் முறையாகச் சென்னைக்கு விஜயம் செய்தார். நமது கவிக்குயிலைக் கண்டார். "இவர் யாரென்று" கேட்டார். ராஜாஜி சொன்னார். "இவர் எங்கள் நாட்டுக் கவி" என்று. மேதைதான். மேதையை அறிய முடியும். காந்திஜீ சொன்னார். "இவரைப் பத்திரமாகப் பாதுகாக்க வேண்டுமென்று" அத்தகைய மேதையை, கவிக்குஞ்சரத்தை, மகாகவி சுப்ரமணிய பாரதியை, இலக்கியம் காப்பாற்றியதா? இருக்க இடமின்றி உண்ண உணவின்றி நாடோடியாக்கியது. அவனை இந்த இலக்கிய பீடம். காலமெல்லாம் கந்தல் கோட்டை அணிந்திருந்தான் பட்டினியால் பரிதவித்தான், முடிவில் யானையின் காலால் மிதித்துச் சாகடிக்கப்பட்டான். அவனது அந்தக் கோர மரணத்தைப் பார்த்துச் சிரித்தது இலக்கிய பீடம்!"

"புதுமைப் பித்தனை அறிந்திருக்கிறாயா நீ? சிறுகதை மன்னன் அவன். கருத்துச் சொட்டும் கவிஞன். தமிழ் சிறுகதை இலக்கி யத்திற்குப் புது மெருகூட்டியவன் இலக்கியத்திலே அற்புதங்கள் புரிந்த ஜாலவித்தைக்காரன், அந்தப் புதுமைப் பித்தன். புகழை வெறுத்தவன். இலக்கிய சேவையே என் உயிர் மூச்சு என்றவன். எழுதி எழுதிக் குவித்தவன். எண்ணற்ற கதை மலர்களை இலக்கிய பீடத்திற்கு அர்ப்பணித்தவன். தேகம் எலும்புக்கூடு, விரல்கள் வேப்பங்குச்சி, அவன் விரலிலே பேனா நாட்டிய மாடியது. பாத்திரங்கள் சுயரூபத்தில் பேசின, அவனிடம். மனித குலம் புதுமைகளைக் கண்டு பயப்படும் முயல் குட்டிகள் என்று வெளிப்படையாகச் சொன்னான். மனிதக் கும்பலைப் பார்த்து உருப்படியாக எதையும் செய்யத் திராணியற்ற மனிதப் புழுக்கள் என்று அறை கூவினான்."

"சர்வதேச இலக்கியத்தில் எல்லைக் கோடு என்று போற்றுகின்றனர் அவன் எழுத்துக்களை! ஆனால் இலக்கிய பீடம் கொடுத்த பரிசு என்ன? வறுமை, காலமெல்லாம் மனக்கவலை, இவைகள்தான் கிடைத் பரிசு! நோய் வழிகாட்டியது, வறுமை குடை பிடித்தது. இலக்கியத்துக்காகவே வாழ்ந்தான். அவன் எழுத்து இலக்கியத்தை வளர்த்தது. அவன் பேச்சு இலக்கியத்தைச் சீராட்டியது. அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூச்சு இலக்கியத்தைத் தாலாட்டியது. அவன் உயிர் இலக்கியத்துக்குப் பலியாகியது! சாகும்போதுகூட இலக்கிய உலகம் எப்படி இருக்கிறது?" என்று கேட்டு விட்டுத்தான் செத்தான். இன்றைய இலக்கிய பீடத்தின் சரித்திரத்திலே பலியாகிய கடைசி மனிதன் புதுமைப் பித்தன். தமிழ் இலக்கியத்திலே அமரன்! ஆனால் வறுமையென்னும் மெத்தையிலே நோய் முள்ளுக் குத்தத் துன்ப வேதனையிலே உழன்றவன் அந்தப் புதுமைப் பித்தன்."

"இலக்கிய பீடம் இன்னும் அலுத்துப் போகவில்லை. இன்னும் எத்தனையோ உயிர்கள் அதற்குத் தேவை. இரக்கம் என்பது அதனிடம் இல்லை. கருணைகாட்ட அதற்கு நேரமில்லை. தனக்குச் சேவை செய்தவர்களையெல்லாம் முதலை விழுங்குவதுபோல் விழுங்கிவிட்டது இந்த இலக்கிய பீடம். எனவேதான் சொல்கிறேன். அந்தப் பயங்கரப் பாதை உனக்கு வேண்டாம் என்று" மனம் தன் நீண்ட பிரசங்கத்தை முடித்துக் கொண்டது.

அறிவு எதுவும் பேசவில்லை பேசுவதற்கு அதனிடம் ஒன்றுமில்லை சிறிது நேரத்திற்குப் பின் "பயங்கரமான பாதைதான்" என்று ஒரு பெருமூச்சு விட்டது.

மனம் இலேசாகச் சிரித்தது.

"தேத்தண்ணீர் ஆறுகிறது" என்று சொன்ன என் நண்பனின் குரல் கேட்டு என் சிந்தனையும் கலைந்தது.

*- 1950*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண் மகன்

புளியன் என்ற அரசன் ஆட்சி புரிந்ததாலோ அல்லது புளிய மரங்கள் நிறைந்த காடாக இருந்ததாலோ என்னவோ அந்தத் தீவுக்கு புளியந்தீவு என்ற பெயர் ஏற்பட்டு விட்டது.

ஆரம்பத்தில் கெட்டவன் என்று பெயர் பெற்ற ஒருவன் நல்ல வனாக மாறினாலும் முன்னுக்கு நிற்பது கெட்டவனென்ற பெயர் தான். இதைப்போல நான்கு பக்கங்களும் தெருக்களால் இணைக் கப்பட்டும் கூட இன்னும் அது புளியந்தீவு என்ற பெயரைச் சுமந்து கொண்டுதான் நின்றது.

காடாகக் கிடந்த இடம் இன்று நகரமாகி விட்டது என்றாலும் பாம்பு போன தடம் போன்று காட்சியளிக்கும் தெருக்கள் இன்னும் அதன் பழங்காலப் பெருமைகளை எடுத்துக் கூறிக்கொண்டேதான் இருக்கின்றன.

இங்கே எத்தனையோ அதிசயங்கள். அதில் ஒன்று வைத்திய சாலைக்கும் சிறைச்சாலைக்கும் வித்தியாசம் இல்லை என்பதைக் காட்டுவதுபோல இரண்டு கட்டடங்களும் மிக நெருங்கி இருப் பதுதான்.

புளியந்தீவிலேயே மிகவும் பிரதானமான தெரு ஆஸ்பத்திரித் தெருதான். ஏனென்றால் அங்கே அற்புதங்கள் பல.

திடீரென்று யாராவது ஆஸ்பத்திரித் தெருவில் குதித்து விட்டால் முதலில் அவர்கள் கண்ணுக்குத் தென்படுவது இடம் மாற்றப் பட்டு உக்கி உருக்குலைந்து போன பழைய சவக்காலைதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகரத்தின் மத்தியில் அந்தச் சவக்காலை ஏன் இருக்கிறது என்று கேட்டால் அது நமக்குப் புரியாத இரகசியம்.

இந்தச் சவக்காலைக்கு எதிர்ப்புறமாகத்தான் அந்தப் பிள்ளை யார் கோயில் இருக்கிறது. கோயில் பிரமாண்டமாக இல்லா விட்டாலும் அதன் மதில் மிகவும் பெரியது. பிள்ளையார் கோயிலுக்கு மறுபுறத்தில் ஒரு வித்தியாசாலை. இதன் கதவு எப்பொழுதும் சாத்தப்பட்டுத்தான் இருக்கும். என்றாலும் தற்காலக் குழந்தைகளை எதிர்கால அறிவாளிகளாக்கும் பணியில் மிகவும் சுறுசுறுப்பாகப் பணியாற்றுகிறது இந்தக் கல்வி கழகம்.

பிள்ளையார் கோயிலையும் கல்விச் சாலையையம் ஏக காலத்தில் தாண்டிச் செல்லும்பொழுது நம்மை வரவேற்பது அரசாங்க விருந்தினரை அடைத்து வைத்துக் காவல் செய்யும் சிறைச் சாலைதான். இந்தச் சமயத்தில் பகுத்தறிவாளன் சிந்தனை வேலை செய்ய ஆரம்பித்து விடும்.

அறிவுக்குப் பொருத்தமற்ற பக்தியும் வாழ்க்கைக்குப் பொருத்த மற்ற கல்வியும் ஒன்று சேர்ந்து மனிதனைச் சிறைச்சாலைக்குள் தள்ளிக் கொண்டிருக்கிறது. இயற்கையின் இந்த எடுத்துக் காட்டு பகுத்தறிவைப் பயன்படுத்த திராணியற்ற மனிதனுக்கு எங்கே தெரியப் போகிறது? இதைக் கூடத் தெரிந்து கொள்ள முடியாத அளவுக்கு மங்கிப் போய் விட்டது நமது அறிவு நிலையம்.

இந்த சிந்தனை முடிவடையுமுன் இன்னொரு கட்டடத்துக்கு முன்னால் வந்து விடுவோம். அது காயமே இது பொய்யடா என்று சொல்லிக் கொள்பவர்களும் கூடத் தங்கள் உடல் காயத்துக்கு மருந்து கட்டப் போகும் இடம்! இந்த உலகத்தைவிட்டு மறு உலகத்திற்குப் போகப் போகிறவர்களை மேளதாளத்துடன் அழைத்துச் செல்ல வரும் எமனுக்கு நாக்கில் இனிப்பைத் தடவி விட்டு மரணத்தில் இருந்து தப்பிக் கொள்ள ஓடி ஒழிந்து கொள்ளும் இடம்தான் அந்த வைத்தியசாலை. கலியுகத்தில் விஞ்ஞானிகள் கண்டு பிடித்த நவலிங்கம்தான் அந்த வைத்தியசாலை. இந்த வைத்தியசாலைக்குப் பின்புறந்தான் அந்த மணல் புட்டி என்னும் இடம் இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணல்புட்டி என்பதால் மண்மேடுகளை அங்கே காணமுடியாது. ஆனால் மனிதனின் மனதைப்போன்று அழுக்கேறிய துணி மூட்டைகளைத்தான் காணமுடியும். ஏனென்று கேட்கிறீர்களா? பிறர் நலத்திற்காகத் தன் முதுகெலும்பை உடைத்துக்கொள்ளும் தன்மை பெற்ற சலவைத் தொழிலாளிகள் வசிக்குமிடம்தான் அந்த மணல்புட்டி.

துணிகளில் இருந்து அப்புறப்படுத்தப்பட்ட அழுக்குகள் அவர்கள் வாழ்க்கையில் ஒட்டிக் கொண்டதாலோ என்னவோ குடிசை என்ற பெயரில் அந்த குப்பை மேட்டில் வாழ்ந்து கொண்டிருக் கிறார்கள் அவர்கள்.

பட்டணத்தில் தனது சிறிய தாயாருடன் வாழ்ந்துவந்த வதனி, வயோதிகத் தந்தைக்கு கையுதவியாக வந்து சேர்ந்தாள் இந்த மணல் புட்டிக்கு. அறிவாளியாக இல்லாதிருந்தாலும் எதையும் தெரிந்துகொள்ளும் அளவுக்குக் கற்றிருந்தாள். பட்டணத்தில் வாழ்ந்த வதனிக்கு பட்டிக்காடுபோல் காட்சியளித்த மணல் புட்டியில் வாழ்வது கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருந்தது. என்றாலும் மாலை நேரத்தில் ஆற்றங்கரைப் பக்கம் உலாவி வருவதில் அந்தக் கஷ்டத்தை மறக்க முயன்றாள்.

அன்றொரு நாள் மாலை ஐந்து மணி இருக்கும். அந்த ஊருக்கே பெரிய கோயில் என்று பேசிக்கொள்ளும் பிள்ளையார் கோயிலுக்கு முன் நின்று கோயிலின் கோபுரத்தைப் பார்த்துக்கொண்டு நின்றாள் வதனி. என்னைக் கொண்டு தான் இந்தக் கோயிலின் கடவுளை மதிப்பிட வேண்டுமென்று சொல்வதுபோல தலை நிமிர்ந்து நின்றது அந்தக் கோபுரம்! மாலைக் கதிரவனின் மஞ்சள் வெயில் கோபுரத்தின் செப்புக் கலசத்தில் விழுந்து அதைப் பொன் கலச மாக்கிக் கொண்டிருந்தது. அந்த மினுமினுப்பில் தன் உள்ளத் தைப் பறிகொடுத்துத் தன்னையே மறந்து நின்றாள் வதனி. அதே சமயம் அந்த வழியாகச் சென்று கொண்டிருந்த தெய்வனா யகத்தின் கண்கள் வதனியைப் பார்த்து விட்டன. அவன் கால்கள் தடைப்பட்டன. ஆடாமல் அசையாமல் அப்படியே நின்றான் அவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வளவு நேரம் அப்படி அவன் நின்றானோ அது அவனுக்குத் தெரியாது. சிறிது நேரத்திற்குப் பிறகு மெதுவாக அவள் அருகில் சென்றான். அவள் காதுக்குள் எவ்வளவு அழகாக இருக்கிறது அந்தக் கலசம்?" என்றான்.

எதிர்பாராத இந்தக் கேள்வியால் அதிர்ச்சியுற்ற வதனி ஒன்றுமே பேசாமல் அவனைப் பார்த்தாள். சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தத் தெரிந்து கொண்ட தெய்வனாயகம் மெதுவாகச் சிரித்துக் கொண்டே

"நீங்கள் இந்த ஊருக்குப் புதியவர், கோயிலைப் பார்த்திருக்க மாட்டீர்கள். இது ஒரு கலைப் பொக்கிஷம் வாருங்கள் காண் பிக்கிறேன்" என்றான்.

"இல்லை வேண்டாம்" என்று சொல்ல நினைத்தாள். ஆனால், சொல்லவில்லை. அவனையே பார்த்துக்கொண்டு நின்றாள். அவனது கடைந்த பார்வையும் இனிமையான வார்த்தைகளும் மெதுவாக அவள் உள்ளத்தைக் கிள்ளி விட்டன. பெண்மையின் மதில் போன்ற வெட்கம் அவளைத் தலைகுனிய வைத்தது.

"அதிலென்ன வாருங்கள் நான் துணை செய்கிறேன்" என்றான் தெய்வனாயகம். எல்லை கடந்த வெட்கத்தினிடையே எழுந்த ஆசையை அடக்க முடியாதவளாகத் துணிந்து அவனைப் பின் தொடர்ந்தாள் வதனி. சிறிது நேரத்தில் கோயிலைச் சுற்றிப் பார்த்துவிட்டு இருவரும் வெளிவந்தனர்.

"பூ! இவ்வளவுதானா? இதற்குள் ஏன் நாங்கள் போகக் கூடாதாம்? என்ற கேள்வியோடு வெளியே வந்தாள் அவள். தெய்வ சந்நிதானத்தில் அழகுத் தெய்வத்தின் சந்திப்புக் கொடுத்த மகிழ்ச்சியால் படி யிறங்கினாள் அவள். சலனமற்றுக் கிடந்த குளத்தில் ஒரு கல்லைத் தூக்கிப் போட்டதுபோல் ஒரு அதிர்ச்சியை ஏற்படுத்திவிட்டுச் சென்றது இச்சிறு நிகழ்ச்சி.

கோயிலும் அப்படியேதான் இருந்தது கோபுரமும் கூடிய அழகுடன் விளங்கியது. புதுப் புது மனிதர்களெல்லாம் வந்து போனார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிதாக ஒரு தேங்காய் வெற்றிலை பாக்குக் கடைகூட அங்கே முளைத்துவிட்டது. வதனியும் வருவதை ஒரு வழக்கமாக்கிக் கொண்டாள் ஆனால் தெய்வனாயகம் மட்டும் அங்கு வரவில்லை.

எப்படியும் சந்திக்கலாம் என்ற நம்பிக்கையில் பத்து நாளாய் வந்துபோய்க் கொண்டிருந்தாள், வதனி. ஏனோ அவன் வரவில்லை.

அன்று அவள் மனம் வெகுவாக வேதனைப்பட்டது. வழமைக்கு மாறாக வெகு நேரம் காத்திருந்தாள். அன்றும் ஏமாற்றத்தைத் தவிர வேறெதுவும் நிகழவில்லை. உடைந்து போன உள்ளத்தை ஏமாற்றம் என்ற வெறும் வெளியில் உதறிவிட்டுக் குடிசையை நோக்கிப் புறப்பட்டாள் வதனி! உள்ளத்தில் தோன்றி மறையும் ஓராயிரம் எண்ணங்களுக்கிடையில் அவள் நடந்தாள். தெரு வோரத்தில் இருந்த மின்சார விளக்குகளின் வெளிச்சம் அவள் பயணத்துக்குப் பக்கதுணை புரிந்தது. அவள் நடந்து கொண்டே இருந்தாள். வாழ்க்கையில் சிறிது தன்னம்பிக்கையை உண்டு பண்ணி விட்டுத் தன்னை வஞ்சித்த அந்த வரட்டு நிகழ்ச்சியை நினைத்துக் கொண்டே நடந்தாள். தெருவில் குறுக்கிட்ட வெளிச்சத்தைக் கடந்து இரண்டடி வைத்திருக்கமாட்டாள்.

“என்னைத் தெரியவில்லையா?” என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டு நின்றாள் வதனி.

அவள் தன்னை அடையாளம் காணவில்லை என்று எண்ணிக் கொண்ட தெய்வனாயகம் அவள் அருகில் வந்து, “என்ன அதற்குள் மறந்து விட்டீர்களா?” என்றான்.

“இல்லை....நான்....உங்க...” அவள் ஏதோ சொல்ல நினைத்தாள். வார்த்தைகள் வரவில்லை நிறுத்திக் கொண்டாள். யாருக்காக இத்தனை நாள் காத்து நின்றாளோ? அவன் தன் முன்னால் நிற்பதைக் கண்டபொழுது!

சந்திரனின் குளிர்ந்த ஒளிக்குத்தன் உணர்ச்சியைத் தூண்டும் சக்தி இருக்கிறது என்பதை உடைத்தெரிந்து விட்டது அந்த அமாவாசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருட்டு! அவன் எதையோ நினைத்துக்கொண்டு அவள் கரத்தைப் பிடித்தான். அவள் எதையோ நினைத்துக் கொண்டு அவனைப் பின் தொடர்ந்தாள். ஒருவருக்கும் தெரியாமல் இருவரும் இருளில் மறைந்தனர்.

தவறும் மறதியும்தான் மனிதன் தோன்றக் காரணம் என்று தீர்க்க தரிசனம் கூறப்பட்ட பின்பு தவறு செய்யும் மனிதனில் குற்ற மில்லையே? தாகம் என்று ஒன்று இருக்கும் வரை தண்ணீரும் அவசியம்தான். வாழ்க்கையென்றால் வாழைப்பழத் தோலில் வழுக்கி விழத்தான் வேண்டுமென்ற நியதியை ஏற்படுத்திக் கொண்ட பிறகு. விவாகமாகாமல் குழந்தை பிறப்பது சாப் பாட்டுக்குப் பின் கையலம்புவது போலத்தான்.

வண்ணாரப் பெண் என்ற வடுவை மாற்ற வாழ்வு தேடி வழி பார்த்த வதனி கண்மூடி விழிப்பதற்குள் கால் தவறிக் காட்டு வழி நடந்து கொண்டிருந்தாள்.

தெய்வனாயகத்தைக் கண்டு தன் நிலைமையைச் சீர்படுத்திக் கொள்ளலாம் என்று எதிர்பார்த்தாள் அந்தப் பேதைப் பெண். அவன் வரவில்லை. அவனுக்கென்ன அவன் ஆண்பிள்ளை ஊரில் எத்தனையோ ஹோட்டல்கள். பசி வந்தால் சாப்பிடுவான் எங்கே எப்பொழுது? இதெல்லாம் என்ன கேள்வி! ஆனால் அவள் கதி?

கடைசி நம்பிக்கையில் அன்று அவனை அறிமுகப்படுத்தி வைத்த கோயிலுக்குச் சென்றாள். அன்றும் அமாவாசை நாள்தான், நன்றாக இருட்டி விட்டது. கோயிலுக்குப் பக்கத்தில் இருந்த வெற்றிலை பாக்குக் கடை வெளிச்சத்தில் வருகிற போகிறவர்களை யெல்லாம் நன்றாகக் கவனித்துக் கொண்டிருந்தாள் வதனி.

காலம் எப்பொழுதும் மனிதனுக்கு நல்லதையே செய்து கொண் டிருப்பதில்லை. இந்த ரீதியில்தான் காலம் வதனியை மரணப் பாதைக்கு அழைத்துச் சென்றது! இல்லை யென்றால் தெய்வனாயகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று அந்த வெற்றிலை பாக்குக் கடையில் தோன்றியிருக்க மாட்டான்.

அவள் கண்களை அகலத் திறந்து பார்த்தாள் ஆம்! தெய்வனாய கம்தான். அவன் அவளையே பார்த்துக் கொண்டு நின்றான்.

அவன் பூவும் தேங்காயுமாக கோவிலுக்குப் போய்க் கொண்டி ருந்தான். அவள் அவனைப் பின் தொடர்ந்தாள். அவன் கோயில் வாசலில் கால் வைத்ததும்.

"உங்களைத்தான் நில்லுங்கள் என்றாள் வதனி."

இந்தச் சத்தத்தைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தான் தெய்வனாயகம். அவனை நோக்கி வந்து கொண்டிருந்தாள் வதனி. ஆச்சரியத்துடன் அவளையே பார்த்துக் கொண்டு நின்றான் தெய்வனாயகம்.

"ஏன் அப்படிப் பார்க்கிறீர்கள்! அடையாளம் தெரியவில்லையா?"

"இல்லை வெகு நாட்களுக்குப் பிறகு எங்கே இவ்வளவு தூரம்? என்று தான் யோசிக்கிறேன்" என்றான்.

"உங்களிடம் ஒரு முக்கியமான சம்பவம் சொல்ல வந்தேன் நான்.... நான் ஒரு குழந்தைக்குத் தாயாகப் போகிறேன்!" என்றாள் அவள்.

"உண்மையாகவா! அதன் தந்தை யார்?" என்றான் பரபரப்போடு.

அவள் நாணம் கலந்த சிரிப்போடு சொன்னாள் "அன்று அமாவாசை இருட்டிலே நடந்ததை மறந்து விட்டீர்களா?" நீங்கள்தான் அதன் தந்தை! இதைச் சொல்லிவிட்டு அவன் முகத்தைப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

பேயால் அறையப்பட்டவன்போல் நின்று கொண்டிருந்த தெய் வனாயகம் சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு "நான் பிறகு சந்திக்கிறேன் பூசைக்கு நேரமாகி விட்டது" என்று சொல்லிவிட்டுப் போக எத்தனித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“கொஞ்சம் நில்லுங்கள். ஏன் என்மீது அன்பில்லையா?”

“ஏனில்லாமல்?”

“பின் ஏன் பயப்படுகிறீர்கள்?”

“பயப்படவில்லை உன் சா...தி?”

“வண்ணாரப் பெண் என்ற காரணத்தினால் எங்களிடம் இருதய மில்லை என்று நினைக்கிறீர்களா?” அவள் கண்கள் கலங்கி விட்டன.

“அதற்கில்லை வதனி! உலகத்துக்கும் கொஞ்சம் பயப்பட வேண்டி இருக்கிறதே?”

அவன் சுற்றுப் புறத்தைக் கொஞ்சம் வெறித்துக் கொண்டான்.

“அன்று அந்த அமாவாசை இருட்டிலே சாதியைப் பற்றி யோசித் தீர்களா?”

“இல்லை நீயும் கூடத்தான்.”

“ஆம்! காப்பாற்றுவேன். கைவிடேன். உன்னை ஏற்றுக் கொள்வேன் என்றெல்லாம் சொன்னீர்களே! இன்று சாதி என்று விழிக்கிறீர்களே? எனக்காக இல்லாவிட்டாலும் இந்தக் குழந்தைக்காகவாவது என்னை ஏற்றுக்கொள்ளுங்கள்.” அவள் கண்ணீர் வடித்தாள்.

“வதனி திடீர் என்று அப்படி எதுவும் செய்துவிட முடியாது. சமூகம் பொல்லாதது, என்னை வீண் தொந்தரவு செய்யாதே. என்னால் முடிந்த சில உதவிகளைச் செய்கிறேன், என்ன சொல்கிறாய்?”

ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டு நின்றனர். திரும்பவும் அவன் சொன்னான்.

“பூசைக்கு நேரமாகி விட்டது என்ன உன் முடிவு?”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் நெஞ்சு படபடத்தது, வார்த்தைகள் சிதறிச் சிதறி வெளிவந்தன.

"உங்களுக்குப பூசை அவசியம். எனக்கு என் வாழ்க்கை அவசியம். உங்களை நம்பினேன். உங்கள் சத்தியத்தை நம்பினேன், என் வாழ்க்கையையும் உங்களுக்குக் காணிக்கை வைத்தேன். காதலுக்கு சாதி ஏது? என்றீர்கள். அன்று, சாதியைப் பற்றி யோசிக்கிறீர்கள் இன்று, உன்னை வாழ வைப்பேன் என்றீர்கள் அன்று, என்னை வாழ்வுக்கும் சாவுக்கும் மத்தியில் வைத்துச் சிரிக்கிறீர்கள் இன்று. நான் பெண், நீங்கள் ஆண் மகன்!"

அவள் பேசிக் கொண்டே இருந்தாள். அவனுக்கு அங்கே நிற்க விருப்பமில்லை. அவசரமாக நடந்து கோயிலுக்குள் புகுந்து மறைந்து விட்டான் தெய்வனாயகம்.

அவள் பேச்சினிடையே தலை நிமிர்ந்து பார்த்தாள். அவன் போய் விட்டான்! அவளும் ஒரு முடிவோடு அங்கிருந்து அகன்றாள்.

அவன் பக்தி சிரத்தையுடன் வணங்கிக் கொண்டு நின்றான் சிலைக்கு முன்னால்.

அவள்?

இந்த மனித சமுகத்திடம் இருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள கோயில் குளத்துக்குள் இறங்கி நடந்தாள்! தண்ணீர் தன்னை அணைத்துக் கொள்ளும் வரை நடந்தாள்.

***- 1951***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுந்த கயிறு

அவன் நன்றாக இந்த உலகத்தையே மறந்து தூங்கிக் கொண் டிருந்தான். தூக்கம் ஒரு குட்டி மரணம் என்பார்கள் வேதாந்திகள், ஆனால் தூக்கம் காதலியின் இதழ் தரும் இன்பம் என்பது கந்தசாமியைப் போன்ற தொழிலாளிகளால்தான் புரிந்துகொள்ள முடியும். காலமெல்லாம் கடமை செய்து குற்றுயிராய் வாழ வேண்டுமென்று அவன் தலையில் எழுதப்பட்டிருக்கிறதோ என்னவோ? ஆனால் இன்றைய உலகத்தில் இதற்குமேல் வேறெதுவும் செய்ய முடியவில்லை.

அவனைப் பெற்றவர்களின் வாழ்க்கையைக் கண்டு இந்த உலகமோ அல்லது மனித சமூகமோ கவலைப்பட்டது கிடையாது. ஏனென்றால் வீட்டுக்கு வீடு கஷ்டமும் கவலையும்தான் நிலைத் திருந்தது. இவைகளையெல்லாம் தாங்கும் சுமைதாங்கிதானே மனிதன் என்ற ஜந்து. என்றாலும் அடியோடு நம்பிக்கையற்றுப் போகாமல் இருப்பதற்காகக் களிமண் சுவரிலே சுண்ணாம்பு பூசியது போன்று உடலிலே கொஞ்சம் இருதயம் ஒட்டியவர்கள் அவனைப் போன்றவர்களைப் பார்த்துக் கொஞ்சம் பரிதாபமாகப் பேசுவதுமுண்டு. "உம்! அதற்கென்ன செய்வது எல்லாம் உன் தலைவிதி!" என்று சொல்வதோடு அவர்கள் கடமையும் தீர்ந்துவிடும்.

எது எப்படியிருந்தாலும் அவன் இந்த உலகத்தில் நடமாடிக் கொண்டுதான் இருக்கிறான். துணைக்கு ஒரு மனைவியும் கூட, உலகத்தில் மனைவியென்ற அந்தப் பற்றுக் கோடும் இல்லை யென்றால் கந்தசாமியைப் போன்றவர்களின் வாழ்க்கையில் நினைத்துப் பார்க்க என்னதான் இருக்க முடியும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தசாமி கூட்டுறவுப் பண்டகசாலையில் மூட்டை தூக்கும் கூலியாள். மாதம் அறுபது ரூபாய்கள் தாம் சம்பளம், இந்த அறுபது ரூபாய்களை வைத்துக் கொண்டுதான் அவன் தன் வாழ்க்கைச் சகடத்தை ஓட்ட வேண்டும். தொழிலாளி என்றால் அவனையும் ஒரு மனிதனாகச் சிலர் மதிக்கவில்லையே என்று ஆச்சரியப்பட ஒன்றுமில்லை! ஆனால் யாருக்கும் தெரியாமல் மணிமேகலையின் கையில் இருந்த அமுத சுரபியாகி விட்டானே என்பதுதான் ஆச்சரியம்! அறுபது ரூபாயில் தொழிலாளி வாழ வேண்டுமென்றால் அவன் அமுத சுரபியாகத்தானே இருக்க வேண்டும்.

மலைகளையெல்லாம் மண்ணாக்கி விட்டோம். அடுப்படிப் பூனைக்கு மணி கட்டி விட்டோம். என்றெல்லாம் அரசியல் பேசுகிறார்களே! அவர்கள் கண்முன்னால் கதியற்றுக் கிடக்கும் இந்த மனிதர்கள் வாழ்க்கையைச் செப்பனிடத் தவறியது இந்த நாட்டுக்கு ஒரு பெரிய நஷ்டம் என்று அரசியல் பொருளாதார சிந்தனைகள் அவன் மூளையில் எப்பொழுதும் குறுக்கிட்டது கிடையாது. எலும்பொடிய வேலை செய்யும் எந்தத் தொழிலாளிதான் இவைகளைப் பற்றிச் சிந்திப்பான்! இத்தகைய இறுக்கமான வாழ்க்கையிலே ஏற்படும் மனப் புழுக்கத்தை மறக்கத் தூக்கம் ஒரு நல்ல கருவிதான். எனவே கந்தசாமி எல்லாவற்றையும் மறந்து தூங்கிக் கொண்டிருந்தான்.

காலை நேரம் கந்தசாமியின் மனைவி அடுப்புடன் சண்டை போட்டுக் கொண்டிருந்தாள். புகை அவளை முத்தமிட்டுக் கொண்டிருந்தது. புகை புருஷனாக முடியுமா? தலையை மறு பக்கம் சாய்த்துக் கொண்டு அடுப்பை ஊதினாள் அவள். அடுப்பென்ன குபீர் என்று தீப்பிடிக்கும் பெட்ரோல் பம்பா? எந்தப் பெட்ரோலாக இருந்தாலும் அந்த அடுப்புக்குள் இருக்கும் பச்சை மட்டைக்குத் தீமூட்ட முடியாது. இந்த நிலையில் மணி எட்டடித்து விட்டது. மணியடிக்கும் சத்தம் கேட்டுக் கந்தசாமியின் படுக்கைக்கு ஓடினாள் அவள். அவன் இன்னும் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னப்பா! எழும்புங்க நேரமாச்சுது!" என்றாள் அவள்.

"என்னத்துக்கு நேரமாச்சு?" என்று முணுமுணுத்தான் அவன்.

"வேலைக்குப் போகல்லியா நீங்க!"

"இண்டைக்கு வேலையில்லை" என்று சொல்லிக் கொண்டே புரண்டு படுத்தான் அவன்.

"ஏன் வேலையில்லை?"

அவளுடைய இந்தக் கேள்வி அவனுக்குப் பெரும் தொல்லையாக இருந்தது. "என்னைத் தொந்தரவு செய்யாமப் போ!" என்றான் அவன்.

அவனுடைய இந்த மெல்லிய கோபம் அவளுக்குச் சிரிப்பைத்தான் உண்டாக்கியது. சிரித்துக் கொண்டே அவன் பக்கத்தில் உட்கார்ந்து, அவனுடைய உடம்பைப் பிடித்து விட்டுக் கொண்டே கேட்டாள்.

"சுதந்திர மென்டா என்ன?"

"உனக்குத் தெரியாதா?"

"உம்! உ....ம்!"

"அப்படியென்டா நீ அதெ தெரிஞ்சு கொள்ளாத"

"ஏன்?"

"ஏனா அதத் தெரிஞ்சதுனால இந்த நாலு அஞ்சு வருசமா எவ்வளவு கஷ்டப்படுறன் தெரியுமா?"

"அப்படிப் பொல்லாததா அது?"

"இல்லையில்ல. பொல்லாததாக ஆக்கியிருக்கிறாங்க நம்மவங்க" ஊ...ம்! அதப்பத்தி இப்ப என்ன? இண்டக்கி வயித்துக்கு என்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பாடு?"

"பழஞ்சோறும் தீய்க்கறியும்"

"என்ன! இண்டக்கும் பழய சோறா?"

"நானென்ன செய்ய? இடியப்பமும் அப்பமும் தின்ன ஒங்கட ஒடம்பு நெய்யாலயா படச்சிருக்கு? அம்மாடி! எழும்புங்க, எழும்புங்க. அடுப்பில கறிய வெச்சிட்டு வந்தன்."

அவள் எழுந்தாள். அவன், அவள் சேலையைப் பிடித்து இழுத்தான்! அவள் அவன் விலாவில் கூச்சங்காட்டி விட்டு ஓடினாள். அவனும் படுக்கையை விட்டு எழுந்திருந்தான்.

"நாட்டுக்கு சுதந்திரம்! நம்மட ஊட்டுல பழஞ்சோறு! சுதந்திர மெண்டா சுடுசோறும் பழஞ்சோறாகி விடுமோ?"

"என்ன செய்றீங்க? முகத்தக் கழுவாம?" என்று கத்தினாள் அவள்.

சிந்தனையை விட்டுக் கிணற்றடிக்குச் சென்றான் அவன். வேப்பங் குச்சியால் பல் துலக்கிக் கொண்டிருந்த கந்தசாமியின் உள்ளம் பலதையும் பத்தையும் எண்ணிக் கொண்டிருந்தது. அந்த நேரத்தில் தெருவிலே பிச்சைக்காரன் பாடும் பாட்டு அவன் காதில் வந்து விழுந்தது.

"நாடு சுதந்திரம் பெற்றதுண்டு என்றால்
நாட்டவரெல்லாம் தேச மன்னரென்றால்
ஓடேந்திப் பிச்சைக்குத் திரிந்தலைந்தும்
உணவின்றி வாடும் நிலை வந்ததேனோ!"

அந்தப் பரதேசிப் பாடலில் இருந்த கேள்வியோடும் அவனும் ஒரு கேள்வியைப் போட்டுப் பார்த்துக் கொண்டான்.

"பிச்சை எடுக்கிற மனிதன் வாழுகிற தேசம் சுதந்திர தேசமாகுமா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் மனைவி திரும்பவும் அவனை அழைத்தாள். மனைவியின் அழைப்புக் குரல் கேட்டதும் தண்ணீர் அள்ளுவதற்காக கயிற்று வாளியைக் கிணற்றுக்குள் போட்டுச் சுண்டினான். "கபக்" என்ற சத்தத்துடன் வாளி நிரம்பிக் கொண்டது. தண்ணீர் வாளியை வெளியே எடுப்பதற்கு முனைந்த கந்தசாமியின் காதில் திரும்பவும் அந்தப் பிச்சைக்காரன் பாடல் வந்து விழுந்தது.

"தாழ்வுயர்வு பேதமின்றி உலகமெல்லாம்
சமத்துவமாய்ப் படைத்தளித்தான் இறைவனென்றால்
கூழுக்கும் வகையின்றிப் பசியால் வாடிக்
குற்றுயிராய் ஏழை மக்கள் குமைவதேனோ?

இரண்டாவது பாடலும் அவன் உள்ளத்தைத் தொட்டது. ஒரு பெருமூச்சு விட்டுக் கொண்டே தண்ணீர் வாளியை வெளியே எடுக்க முயன்றான் "பட்!" கயிறு அறுந்து விட்டது! கயிற்றின் பிடியில் இருந்து விடுபட்ட வாளி கிணற்றைச் சிறைச்சாலையாக்கிக் கொண்டது அறுந்த கயிறு அவன் கையில் இருந்தது. அது எத்தனையோ தத்துவங்களை அவனுக்குப் போதித்தது.

விடுதலையின் முடிவையும், மனிதனின் பலவீனத்தையும் கூடத்தான்.

*- 1952*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயானத்தின் மர்மம்

மாலை நேரம் மனம் அமைதியை நாடியது. கால் போன போக்கில் போய்க் கொண்டிருந்தேன். சிந்தனையினூடே ஊரை விட்டு வெகு தூரம் வந்து விட்டேன். கண்ணுக்கெட்டிய தூரத்தில் கடற்கரை தெரிந்தது. கடற்கரை வரை போய் வரலாம் என்று எண்ணினேன் நடந்தேன்.

உலகம் இருண்டு வந்தது. குளிர்காற்று மழை வரும் என்று எச்சரிக்கை செய்தது. மண் கொதிப்பை மட்டுமல்ல மனிதனின் மண்டைக் கொதிப்பையும் தணித்துவிடக் கங்கணம் கட்டிக் கொண்டிருந்தது வானம். கீழ்த்திசை தன் கருங் கூந்தலை அவிழ்த்துக் கடலிலேயே மிதக்கவிட்டு விளையாடியது. அந்தக் காட்சியிலே நிலையழிந்த மன்னனின் துடிப்பு மனிதனின் உள்ளத் துடிப்பை விட ஓங்கியிருந்தது.

கடற்கரைக்குப் போகும் எண்ணத்தை விட்டு விட்டு வந்த வழியே திரும்பினேன். 'சோ' என்ற இரைச்சலுடன் மழை பெய்து கொண்டு என்னைத் துரத்தியது! நான் ஓடினேன்! வெற்றி நினைத்ததும் கிட்டிவிடும் பொருளா? மழை என்னைத் தொட்டு விட்டது. வேறு வழியின்றி பக்கத்தில் இருந்த பாழடைந்த வீட்டுக்குள் நுழைந்தேன். வீட்டின் கதவு பூட்டியிருந்தது. வீட்டின் திண்ணையில் ஒதுங்கிக் கொண்டேன்.

சோவென்று மழை பெய்தது. கடலும் வானமும் முத்தமிடுவது போன்று தென்பட்டது, அந்த மழை நேரக்காட்சி! காற்றின் வேகத் தால் மழைத் துளிகள் என்னைத் தொந்தரவு செய்தன. எனவே வீட்டின் மறு பக்கம் சென்றேன். அங்கே பாதி இடிந்து போன மண்சுவர் ஒன்று இருந்தது அது எனக்கு ஆசனமாக அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழை பெய்யும் சத்தம் மனதிற்குக் கிளுகிளுப்பை உண்டாக்கியது. மகிழ்ச்சியுடன் எனக்கு நேரே உலகத்தை நோக்கினேன். புகைப் படலத்துக்கு நடுவே உலகம் தெரிந்தது. நானிருந்த அந்த வீட்டிலிருந்து ஒரு நூறு யார்டு தூரத்தில் ஒரு பாழடைந்த மயானம் தென்பட்டது! ஓங்கி வளர்ந்திருந்த ஈச்ச மரங்களினூடே எகிப்திய கோபுரத்தைப் பார்ப்பதுபோல் இருந்தது அந்த மயானத்தின் தோற்றம். நான் அதையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

"தம்பி! தீப்பெட்டி இருக்கா?"

நான் அதிர்ச்சியுடன் திரும்பிப் பார்த்தேன் எனக்குப் பின்னால் ஒரு வயோதிகர் நின்றார்! தீப்பெட்டியைக் கொடுத்தேன். அவர் ஒரு சுருட்டைப் பற்றவைத்துவிட்டு "மிகவும் நன்றி இந்தாருங்கள்."

அவர் தீப்பெட்டியைத் தந்தார் நானும் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டேன்.

"அவ்வளவு கூர்மையாக எதைப் பார்த்துக் கொண்டிருந்தீர்கள் தம்பி!" முதியவர் கேட்டார்.

"அந்த மயானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தேன். இதை இப் பொழுது யாரும் பாவிப்பதில்லையோ?" என்றேன் நான்.

"இல்லை" என்று தலையசைத்தார்.

"இந்த மயானத்தைப் பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருக்கிறது! ஏன் இதைக் கை விட்டு விட்டார்கள்?"

"அழகும் அவலட்சணமும் ஒன்றுகூடும் இடம்தானே மயானம்! அழகாய்த்தான் இருக்கும்" என்று ஒரு பெருமூச்சு விட்டு விட்டு மேலும் தொடர்ந்தார்.

"ஒரு காலத்தில் மிகவும் பிரபலமாக இருந்த இந்த மயானம் இன்று பறவைகள் தங்குமிடமாகப் போய் விட்டது" என்றார்.

"எப்படி!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அது ஒரு பெரிய கதை!"

"வாழ்க்கையே ஒரு கதைதானே! சொல்லுங்கள் கேட்போம்" அவர் சிரித்தார். சிரித்து விட்டுச் சொன்னார்.

"வாழ்க்கை எழுத்தாளனுக்குக் கதையின் கருவூலம்! சிந்தனை யாளனுக்கு அலுப்புத் தட்டிய மூன்றாம் வகுப்பு ரயில் பிரயாணம்! பணக்காரர்களுக்குப் பூஞ்சோலையின் தென்றல் காற்று! ஏழை களுக்கோ? மரணத்தை எதிர்பார்த்து நிற்கும் ரெயில்வே ஜங்ஷன்!"

நான் ஆச்சரியத்துடன் அவர் முகத்தைப் பார்த்தேன்.

"என்னடா? இந்தப் பழய மனுசன் புதுத்தத்துவம் பேசுகிறானே! என்று ஆச்சரியப்படுகிறீரா தம்பீ! வாலிபர்கள் பேசும் தத்துவம் வாழ்க்கையின் உயரப் பாய்ச்சல்! முதியவர்கள் பேசும் தத்துவம் அனுபவத்தின் முத்திரை" என்றார்.

என் கண்கள் மேலும் ஆச்சரியத்தால் விரிந்தன. இத்தகைய தத்து வங்கள் பேசும் மனிதரிடம் இருந்து கடந்து போன காலத்தின் நிகழ்ச்சிகளை அறிவதென்றால் கதை படிப்பது போன்ற ரசனை ஏற்படுமல்லவா?

"நிற்கிறீர்களே! இப்படி உட்காருங்கள்" என்றேன் நான். அவரும் அந்த மண் சுவரில் இடம் பிடித்துக் கொண்டார்.

"நீங்கள் அந்தக் கதையைச் சொல்லவில்லையே?" என்றேன் நான்.

"அந்தக் கதையைச் சொல்லத்தான் வேண்டும். இந்த மயானம் பாழடைந்து கிடப்பதின் பாரம்பரியம் நிலைத்திருக்க நான் அதை யாரிடமாவது சொல்லத்தான் வேண்டும். மேலும் மழை விடும் வரை இப்படி நம் கவனத்தைத் திருப்புவதும் நல்லதுதான். நான் எழுத்தாளனுமல்ல, காதினிக்கக் கதை சொல்லும் திறமையும் எனக்கில்லை! என் வாழ்க்கையில் நானறிந்த சம்பவத்தைச் சொல் கிறேன் கேளுங்கள்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இருபது வருடங்களுக்கு முன் இந்த வீடு உல்லாசப் பிரயாணிகள் தங்கும் வாடி வீடாக இருந்தது. இந்தப் பக்கம் எப்பொழுதும் கலகலப்பாகத்தான் இருக்கும். அதைப் போலத்தான் அந்த மயானமும், இந்தப் பகுதியிலுள்ள பணத்தால் பெரிய மனிதர்களின் கல்லறைகள் இங்கேதான் கட்டப்பட்டன. அந்தக் காலத்தில் இதை மயானம் என்று சொல்ல முடியாது. ஒரு பூந்தோட்டம் போலத்தான் காட்சியளிக்கும். அதனால்தான் இதற்குப் பூந் தோட்ட மயானம் என்று பெயர் வழங்கி வந்தது. மயானத்தைப் பற்றிப் பெரிதாகச் சொல்லிக் கொள்வதற்கு ஒன்றுமில்லைதான் என்றாலும் மகிழ்ச்சியில் கூத்தாடும் மனிதன் மரணத்தில் முற்றுப் பெறுவதைப்போல இந்த வாடி வீட்டில் ஆரம்பித்த நிகழ்ச்சி மயானத்தில்தான் போய் முடிவுற்றது. அதே நிகழ்ச்சி வாடி வீட்டையும் பாதித்து விட்டது?"

"இந்த வாடி வீட்டில் சமயல் வேலை செய்து கொண்டிருந்த சின்னம்மாளுக்குக் 'கண்ணி' என்று ஒரு மகள் இருந்தாள். 'கண்ணி' என்பதனால் அவள் கண்கள் பெரிதாக இருக்கு மென்று எண்ணிவிடாதீர்கள். ஏழை என்பதால் பெயரும் எளிமையாக இருக்க வேண்டும் என்பதாலோ என்னவோ அந்தத் தாய் தன் மகளுக்கு அப்படிப் பெயர் வைத்து விட்டாள். ஏழ்மை யைப்போல் அழகும் அவளை ஒட்டிக் கொண்டிருந்தது! கண்ணி நம் நாட்டு அழகு ராணிகளை விட அழகாய் இருந்தாள். தாய்க்கு ஒத்தாசையாக மகளும் இந்த வாடி வீட்டில்தான் வேலை செய்வாள். அவர்கள் வசித்த குடிசை அதோ அந்தப் பக்கமாகத்தான் இருந்தது."

"கண்ணியை இழுத்த காந்தமும் அந்தப் பக்கமாகத் தான் ஒரு குடிசையில் இருந்தது. அந்தக் காந்தம்தான் கணபதி! கணபதி அந்த மயானத்தில் குழி தோண்டும் வேலையோடு தோட்ட வேலையையும் செய்து கொண்டிருந்தான். அந்தத் தோட்டத் திலே தான் கண்ணியும் கணபதியும் சந்தித்தனர். கண்ணிக்கேற்ற காளைதான் கணபதி. எனவேதான் அவர்கள் இருவரும் அந்தக் காதல் வலையில் சிக்கித் தவித்தனர். அந்தத் தவிப்பிலே அன்பு வளர்ந்தது. ஆசை வளர்ந்து காலமும் கடந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் இருவருக்கும் கலியாணத்தைச் செய்து வைத்துத் தன் பாரத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டுமென்று சின்னம்மாள் எண்ணினாள். அந்த எண்ணத்தில் மண்ணைப் போடுவதற்குத் தானோ என்னவோ அந்த வாடி வீட்டுக்கு ஒரு அரசியல் பிரபு வந்தார்.

நம் நாட்டு அரசியல்வாதிகள்தான் மனிதனைப்போல் இல்லையே! யானையைப் போல் கொழு கொழுவென்றிருந்தார் அவர். ஐம்பத்தி ஐந்து வயதும் அரைகுறை அரசியல் அறிவும் ஒரு தென்னந் தோட்டமும் அவரை இந்தப் பகுதிக்கே ஒரு பெரிய மனிதனாக்கி விட்டது! அவருடைய வரவு இந்த வாடி வீட்டு மானேஜரையும் சுறுசுறுப்பாக்கியது. அதன் பிறகு எல்லாமே பெருந்தன்மையா கத்தான் நடந்தது.

அன்று மாலை அந்த அரசியல் பிரபு காற்று வாங்குவதற்காக மயானத்துப் பக்கம் போய் வந்தார். வருகிறபொழுது அதோ அந்த முருங்கை மரம் நிற்கிறதே அந்த இடத்தில்தான் கண்ணியைக் கண்டார். கண்டது மட்டுமல்ல காதலும் பிறந்து விட்டது அவருக்கு!

காலிலே முள்ளுக் குத்துவது போலக் கண்ணிலே அழகும் குத்து கிறது! காலிலே குத்துகிற முள்ளு காலை முடக்கி அங்கேயே உட்கார வைத்துவிடுகிறது. ஆனால், கண்ணிலே குத்துகிற அழகு இருக்கிறதே! அது மனிதனை ஆகாயத்துக்கல்லவா கொண்டு செல்கிறது.

இந்த நிலையைத்தான் அந்த அரசியல்வாதியும் உணர்ந்தார். உடல் பறக்க உள்ளம் படபடக்க வாடி வீட்டை நோக்கி நடந்தார் அவர்.

தலையைச் சொரிந்து பல்லைக் காட்டி முதுகு வளைக்கும் ஒரு மனிதனைக் கொண்டு எந்தக் காரியத்தையும் செய்து விடலாம், என்ற தத்துவத்தை அறிந்திருந்த அரசியல் பிரபுவுக்கு அந்த வாடி வீட்டு மானேஜர் ஒரு நல்ல வாய்ப்பு! பிரபுவிடம் இருந்து ஒரு பச்சை நோட்டுக் கை மாறியதும் எத்தனையோ மாற்றங்கள் ஏற்பட்டு விட்டது இந்த வாடி வீட்டில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றிரவு எட்டு மணி இருக்கும். வேலைகளை முடித்து விட்டுச் சின்னம்மாவும் கண்ணியும் தங்கள் குடிசைக்குப் போகப் புறப் பட்டனர். அந்தச் சமயத்தில் வாடி வீட்டு மானேஜர் கூப்பிட்டார் 'கண்ணி!' என்று.

"என்னண்ணன்?" என்று கேட்டுக் கொண்டு கண்ணி அவர் ரூமுக்கள் ஓடினாள்.

"கண்ணி! அதோ அந்த மேசையில் இருக்குதே கண்ணாடிக் கூசா? அது நிறையத் தண்ணியெடுத்துக் கொண்டு போய் அந்த ஐயாட ரூமுல வெச்சிட்டு வாம்மா!"

வழக்கம்போல் கண்ணி தலையசைத்துக் கொண்டே வேலை யில் ஈடுபட்டாள். தண்ணிக் கூசாவை அந்த ஐயாவின் ரூமுக்குள் கிடந்த மேசை மேல் வைத்து விட்டுத் திரும்பினாள் கண்ணி. என்ன ஆச்சரியம்! கதவு சாத்தப்பட்டிருந்தது! கதவடியில் ஆபிரிக்க எருமை மாட்டைப்போல் நின்று கொண்டிருந்தார், அந்தப் பிரபு. கண்ணி மேல் நாட்டு யுவதியல்ல ஹோ! வென்று கத்துவதற்குப் புது அனுபவம் இது! தொண்டை வரண்டு வாயடைத்து விட்டது. உடல் தளர்ந்து உயிர் மயங்கி அப்படியே விழுந்து விட்டாள் அவள்! இல்லை விழுந்தவளைத் தாங்கிப் பிடித்துப் படுக்கையில் கிடத் தினார் பிரபு.....

பிறகு? மனதில் ஏறியிருந்த பளுவை மிகவும் இலகுவாக இறக்கி விட்ட சந்தோசத்தில் ஒரு சிகரட்டைப் பற்ற வைத்துக் கொண் டிருந்தார் அந்தப் பிரபு!

கண்ணி கண்விழித்தபொழுது அவள் உடல் கசிந்திருந்தது. உள்ளமும் கசிந்திருந்தது அதையடுத்து அவள் கண்களிலும் கண்ணீர் கசிந்தது. வாயடைத்துப் போன நிலையில் நேராகத் தன் குடிசைக்குப் போய்விட்டாள் அவள்.

அன்றிரவு குடிசைக்குள் புகுந்த கண்ணி அதன் பிறகு வெளியே தலை காட்டவில்லை. ஏதோ ஒன்றை இழந்து விட்ட நிலையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடிந்து போய் விட்டாள் அவள். கணபதியை நினைக்கும் பொழுதெல்லாம் அவள் கண்களிலே கண்ணீர்தான் வடிந்தது. சின்னம்மாள் நினைத்தாள் மகளுக்கு உடம்பு சரியில்லை என்று. கணபதி கேட்ட பொழுதும் இதைத்தான் சொன்னாள். கணபதியும் போய்ப் பார்த்தான். அவள் எதுவுமே பேசவில்லை. கண்ணீர் தான் வெளிவந்தது.

அன்று மாலை சின்னம்மாள் கணபதியிடம் ஓடி வந்தாள். “தம்பி! கண்ணி ஒரு மாதிரியா இருக்கிறா கொஞ்சம் வந்து பாருங்க” என்றாள்.

கணபதி ஓடினான். அங்கே கண்ணி செத்துக் கொண்டிருந்தாள். வாயில் நுரை வந்து கொண்டிருந்தது. அவ்வளவுதான் கண்ணி போய் விட்டாள்.

அந்தக் காலத்தில் ஆற்றிலோ கிணற்றிலோ விழுந்து தற்கொலை செய்து கொள்வதுதான் பழக்கமாக இருந்தது. ஆனால் நச்சுக் காய் தின்று உயிர்விடும் பழக்கத்தைக் கண்ணிதான் முதல் முதல் செய்து காட்டிவிட்டுப் போனாள்.

கண்ணியின் மரணத்தில் மறைந்து கிடந்த உண்மை யாருக்கும் தெரியாது. ஏழையின் வயிற்றுப் பசிபோல அவள் மரணத்தின் மர்மம் தெரியாமலே மறைந்து போயிற்று. ஆனால் அந்த வாடி வீட்டு மானேஜருக்கு எல்லாம் தெரியும். திருடன் தன்னைத் தானே காட்டிக் கொள்வானா? மறைத்து விட்டான். என்றாலும் இவன் நெஞ்சு அவனை அறுத்தது. மயானம் வேறு அவனைப் பயமுறுத்தியது. இந்த மானேஜர் அங்கிருந்து போய்விட்டான்.

கதையை நிறுத்திவிட்டு என் முகத்தைப் பார்த்தார் பெரியவர். நானும் அனுதாபத்துடன் அவரைப் பார்த்தேன்.

உலகம் இருண்டு கிடந்தது என்றாலும் மழை நின்று விட்டது. “கிளம்புவோமா?” என்றார் பெரியவர். இருவருமாக ஊருக்குள் செல்லும் பாதையில் இருளுக்குள் புகுந்து நடந்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கதை முடிந்து விட்டது! ஆனால் மயானத்தின் மர்மம் புரிய வில்லையே?" என்றேன் நான்.

"ஆமாம் அதுவும் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம் தான்" என்று சொல்லியபடி மேலும் தொடர்ந்தார்.

"கண்ணி இறந்து விட்டாள். கண்ணீர் வடித்தபடி மயானத்தை நோக்கி நடந்தான் கணபதி. இரவு கடும் மழை பெய்து கொண் டிருந்தது. சின்னம்மாவும் இன்னுமொரு பெண்ணும் கண்ணியின் பிரேதத்தை காவல் காத்தனர். விடியும் நேரம் சின்னம்மாள் கண் விழித்துப் பார்த்தாள். என்ன ஆச்சரியம்! கண்ணியின் பிரேதத் தைக் காணவில்லை! கணபதியைத் தேடி ஓடினாள் சின்னம்மாள் குடிசையில் கணபதி இல்லை. மயானப் பக்கமாக ஓடினாள். அங்கேயும் அவன் இல்லை. ஆனால் புதிதாக மூடிய மண்மேடு இருந்தது. அந்த மண்மேடுதான் கண்ணிக்குக் கணபதி கிட்டிய கல்லறை! கணபதி இரவோடு இரவாக அதைச் செய்துவிட்டுப் போய் விட்டான். அதன் பிறகு சின்னம்மாளும் அங்கிருந்து போய் விட்டாள்.

விசயம் ஊருக்கு எட்டியது. பூந்தோட்ட மயானத்துக்குச் சொந்தம் பாராட்டியவர்களுக்கும் தெரிய வந்தது அவ்வளவுதான். மயானத்தின் கதவு திறந்துதான் இருந்தது. ஆனால், எந்தப் பிரேதமும் அங்கே கொண்டு வரப்படுவதில்லை.

கண்ணியைப் போன்ற எளிய பெண்கள் அடக்கப்பட்ட மயானத்தில் உயர்ந்த சாதி மனிதர்களின் பிரேதம் புதைக்கப்படுவதா? அத்தோடு முடிவடைந்தது. மயானத்தின் மர்மக் கதை என்றார் அந்த முதியவர்.

"ஒரு சந்தேகம்?" என்றேன் நான்.

"இன்னும் என்ன சந்தேகம்?" என்றார் அவர்.

"யாருக்கும் தெரியாத இந்தக் கதை உங்களுக்கு எப்படித் தெரிந்தது?" என்று கேட்டேன் நான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதை நான் சொன்னால் நீங்கள் நம்ப வேண்டுமே?" என்றார் அவர்.

"நம்ப முடிந்தால் நம்புகிறேன் சொல்லுங்கள்" என்றேன்.

"அப்படியானால் சரி. நான்தான் அந்த வாடி வீட்டு மானேஜர்!" என்றார் அவர்.

"என்ன! என்று ஆச்சரியத்துடன் திரும்பிப் பார்த்தேன்" அங்கே அந்த முதியவரைக் காணவில்லை! அங்குமிங்கும் திரும்பிப் பார்த்தேன். அவர் இல்லவே இல்லை! அதற்குமேல் நான் அங்கு நிற்க விரும்பவில்லை. இருட்டோடு இருட்டாக நான் வீட்டை நோக்கி நடந்தேன்.

*- 1952*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருளும் ஒளியும்

சிறியாவதி சோர்ந்து போய்ப் படுக்கையில் கிடந்தாள். எழுந்துதான் என்ன செய்யப் போகிறாள்? மனம் நிறைந்த எண்ணங்களைச் சுமந்து கொண்டிருந்த அவளுக்குப் படுக்கைதான் ஆறுதல் அளித்தது.

இன்று எப்படியும் கருணாகரன் போய்விடுவார். போவதற்கென்று ஆயத்தம் செய்துவிட்ட அவரை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது! ஆனால் தடுக்க வேண்டும் என்ற ஆசை அவள் மனதைக் குடைகிறதே, அவள் என்ன செய்வாள்?

யாரோ நடமாடும் ஓசை கேட்டது யாரது? வேலைக்காரியாக இருக்கும். அவள் கண்களைத் திறந்து பார்த்தாள். பொழுது நன்றாகச் சாய்ந்துவிட்டதா? இல்லை. வானம் மழை பெய்யக் கருக்கூட்டிக் கொண்டிருக்கிறது.

கருணாகரன் இன்னும் சற்று நேரத்தில் வந்துவிடலாம். எட்டு மணிக்கெல்லாம் அவனையும் கூட்டிக்கொண்டு ரெயில் ஓடி விடும். அவன் தன்னுடன் ஆயத்தப்படுத்தி இருந்த தோல்பை அந்த அறையில்தான் இருந்தது. அதைப் பார்த்ததும் அவள் உள்ளம் விம்மியது. திரும்பவும் கண்களை மூடிக்கொண்டாள்.

*'சிறியா!'*

அழைத்த குரல் கேட்டு வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தாள் சிறியாவதி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறையில் மின்சார விளக்கு எரிந்து கொண்டிருந்தது. வெளிச் சத்தில் தெரிந்த அவளுடைய முகத்தையே பார்த்துக்கொண்டு நிற்கிறான் கருணாகரன். எந்தவித உணர்ச்சிகளுக்கும் இடம் கொடுக்கக் கூடாது என்று தன்னைத் திடப்படுத்திக் கொண்டு தான் வீட்டுக்குள் நுழைந்தான் கருணாகரன். ஆனால்! அன்புக்குப் பாத்திரமானவள் தீயிலே வாட்டிய வெற்றிலைபோல் சோர்ந்து கிடக்கையில் நெஞ்சு நெகிழாமல் என்ன செய்யும்? அவனையு மறியாமல் அவன் ஒரு கை அவள் கூந்தலை வருடியது.

அணை வெடித்த நீர்த்தேக்கம் அவள் கண்களில் இருந்து நீர் வடிந்து கொண்டிருந்தது. படுக்கையில் உட்கார்ந்தபடி அவன் கால்களை வளைத்துப் பிடித்து அந்தக் கால்களுக்குள் தன் தலையைப் புதைத்துக்கொண்டு விம்மினாள். நெஞ்சு வெடித்து இரத்தம் வடிகிறதா? இல்லை! கண்ணீர்தான் அப்படி வடிந்து கொண்டிருந்தது. அவன் கண்களும் கலங்கின. அப்படியே அவளை வாரியெடுத்துத் தன் மார்புடன் அணைத்துக் கொண்டான். கிள்ளியெறிந்த பாவைக் கொடிபோல் துவண்டாள் அவள்.

'சிறியா! ஏன் இப்படி உன்னையே நீ மாய்த்துக் கொள்கிறாய்?'

'என்ன செய்ய? சாவதற்கு வேறு வழிதெரியவில்லையே?' விம்மலுக்கிடையே சொன்னாள் அவள்.

வேடிக்கை ஒரு சமயம் அவள் வேதனையைத் தீர்க்கப் பயன் படலாம். எனவே அவன் பேசினான்.

'பிறப்பதற்கு ஒரே வழிதான் இருக்கிறது. ஆனால்.....! சாவதற்கு எத்தனையோ வழிகள் இருக்கிறதாமே?' என்றான்.

'எனினும் அந்த வழிகளையெல்லாம் தான் நீங்கள் அடைத்துக் கொண்டு நிற்கிறீர்களே?' என்றாள் அவள்.

'என்னால் நீ கவலைப்படுவதற்கு ஒன்றுமில்லையே சிறியா!'

அவள் சிறிது கோபத்தைக் காட்டி அவன் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஆண்களைப்போல் பெண்களின் உள்ளம் இரும்பினால் படைக்கவில்லையே கருணா! அதனால்தான் நாங்கள் இப்படிக் குமைந்து குமைந்து போகிறோம்.'

அவனுக்குப் பேச வார்த்தையில்லை. பேசுவதால் அவளை மீண்டும் சீண்டி விடுவதாகும். எனவே பேசாமல் தன் தோற்பையைச் சரி செய்து கொண்டிருந்தான். சிறியாவதி அவன் பக்கத்தில் போய் நின்றபடி கேட்டாள்.

'நானும் உங்களுடன் வந்து விடுகிறேனே?'

கருணாகரன் ஆச்சரியத்தோடு அவள் முகத்தைப் பார்த்தான். அன்பு மனைவிக்காக எதையும் செய்யக் கூடியவன்தான் அவன். என்றாலும், இன்றைய நிலை வேறு. நீண்ட நாட்களாகப் போராடிக் கொண்டிருந்த அவனுடைய மனம் உண்மைக்குச் செவி சாய்த்துவிட்டது. அவன் பிறந்த மற்றும் வளர்ந்த பிரதேசம், அதற்கு அவன் செய்ய வேண்டிய கடமை, அதை மறக்க முடியவில்லை. அவன் சேவை செய்ய கடமையின் நிமித்தம் தொடங்கும் இந்தப் பிரயாணத்தில் அவளையும் சேர்த்துக்கொள்வது நியாயமல்ல, சரியான வழியுமில்லை என்பது அவனுக்கு நன்றாகத் தெரிந்தது. எனவே, நிதானமாக அவளுக்குப் பதில் சொன்னான்.

'நம் உயிரைப் பற்றிக் கவலை இல்லை சிறியா! ஆனால் அதன் விளைவுகளைப் பற்றிக் கவலை கொள்ளாமல் இருக்க முடியாதே?'

'ஆனால் மனைவியைப் பற்றி மட்டும் கவலை இல்லை, இல்லையா?'

'கணவனின் போக்கைத் தெளிவாகப் புரிந்து கொள்வது மனைவியின் ஒரு கடமை. நான் உன் இனத்தோடு கூடிவாழ்ந்து என் உடையையும் நடையையும் மாற்றிக் கொண்டிருக்கிறேன் என்பது உண்மைதான். அதற்காகப் பிறந்த மண்ணை அந்தப் பாசத்தை மறக்க வேண்டுமென்கிறாயா? அப்படி நீ நினைத்தால் அங்கேதான் தவறு செய்கிறாய் சிறியா!'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அப்படியெல்லாம் நான் உங்களிடமிருந்து எதையுமே எதிர் பார்க்கவில்லை கருணா! ஆனால்.....! நான்.....!' அவளுக்குப் பேச வார்த்தை வரவில்லை.

'எனக்கு உன் மனநிலை புரிகிறது சிறியா! பெண்களின் விஷயத் தில் ஒரு பவித்திரமான ஒரு பாதையைப் பின்பற்றி அதன்வழி நிற்கப் பாடுபடுபவர்கள் நாங்கள். மிகப் பழங்காலத்திலிருந்தே அது எங்கள் பண்பாடாகவும் வழியாகவும் இருந்து வருகிறது சிறியா! காதலும் அதன் வழிவந்த மனைவியும் எங்களுக்குப் புதியவைகளல்ல. அதற்கான இலக்கணமும் இலக்கியமும் எங்களிடம் உண்டு! எங்கள் தெய்வ வழிபாடுகூட காதல் உள்ளிட்ட ஒரு தத்துவம் தான்! அழகுக்காக அல்ல அன்புக்காகவும் தான் கட்டுப்படுகிறோம்! உள்ளம் ஒன்றுபட்ட மனைவியை எங்கள் உயிருக்கு நேராக மதிக்கிறோம் சிறியா!'

இந்த இடத்தில் அவன் பேச்சை நிறுத்தினான். அவள் அவனுடைய பையைத் தன் கையில் எடுத்து வைத்துக்கொண்டு சொன்னாள்.

'நான் வேறொன்றை உங்களிடம் இருந்து எதிர்பார்க்கிறேன் கருணா!'

'அது எனக்குப் புரிகிறது சிறியா. என்னைப் பிரிந்து ஒரு நிமிசம் கூட உன்னால் வாழமுடியாது! உனக்கு மட்டுமல்ல எனக்கும் தான் அப்படி! எங்கள் மகாகவி பாடியிருக்கிறார். '...... காதல் கன்னியின் கடைக்கண் பார்வைக்காக விண்ணையும் சாடுவான் காதலன்' என்று இந்தக் கவிதையின் நிதர்சனத்தை நீ என்னில் பார்த்திருப்பாய்! எத்தனையோ கஷ்டங்களையெல்லாம் கடந்து வந்துதான் உன்னை என்னுடையவளாக்கினேன்! ஏன்? உன் அழகுக்காகவா? அல்லது உன்னிடமிருந்த பணத்துக்காகவா? இல்லை! உன் மென்மையான உள்ளத்தில் இருந்து கிடைத்த அன்புக்காக! அந்த அன்பிலே இணைந்து நின்ற இனிமைக்காக! இத்தனைக்கும் பிறகு உன்னை நடுவழியில் விட்டு விட்டு விடு வேன் என்று நம்புகிறாயா? அப்படியானால் நீ என் அன்பைச் சந்தேகிக்கிறாயா சிறியா?'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கருணா!'

அவள் குரலில் கடுமை – கண்டிப்பு இருந்தது.

'அன்பு என்பது தாம்பத்தியத்தை நிலை நிறுத்துவதற்கான ஒரு கோட்பாடு சிறியா!'

'அதனால் தான் அதை அறுந்த சங்கிலியாக்காதீர்கள். பிறர் பார்த்துக் கேலி செய்ய இடம் கொடுக்காதீர்கள் என்கிறேன்.'

'சந்தோசமும் அமைதியும் நிறைந்த முன்னேற்றம்தான் வாழ்க்கை. அமைதியிழந்த வேட்கைக்காக, கண நேரத்திற்காக வாழ்க்கையின் உள்ளெழுந்த தத்துவத்தை இழந்து விடும் பொழுதுதான் அறுந்த சங்கிலியாகி விடுகிறது வாழ்க்கை.'

'நம்மை இழந்துவிட்டு வாழ்க்கையைப் பெற வேண்டுமென்று சொல்லுகிறீர்களா? பொய் மெய்யாகாது கருணா!'

'இழப்பதற்கு ஒன்றுமில்லையென்றால், பெறுவதற்கும் ஒன்று மிருக்காது! வாழ்க்கை பொய்யுமல்ல, மெய்யுமல்ல. இரண்டுக் குமிடைப்பட்ட ஒரு நிலை! ஆனால் உள்ளத்தில் இழந்துவிட்ட உணர்ச்சி தோன்றாத வரை, நியதியை மறக்காத வரை, எல்லாமே நிரந்தரம்தான், உண்மைதான்.'

அவளுக்கு அவன் தத்துவங்களைப் புரிந்துகொள்ள நேரமில்லை! அவன் மார்பில் முகத்தைப் புதைத்து அழுவதற்குத்தான் முடிந்தது.

இன்னும் சிறிது நேரத்தில் அவன் போய்விடுவான். திரும்பி வருவான் என்பதில் உறுதியிருந்தது. எப்பொழுது வருவான் என்பதில் நிச்சயமில்லை! இனி அவனோடு சேர்ந்து வாழ்ந்த வாழ்க்கையை எண்ணிப் பார்த்துக் கண்ணீர் வடிப்பதுதானா? இவள் இழந்த பிறகு இழக்காத ஒன்றாக இருக்கப் போகிறது. வடிந்து கொண்டிருந்த கண்ணீரைத் துடைத்து விட்டுக் கொண்டு சிறியாவதி சொன்னாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'உங்களிடம் சொல்லுவதற்கு என்னிடம் வார்த்தைகள் இல்லை. வார்த்தைகளால் என் உள்ளத்தை நிரப்ப முயலும் நீங்கள்தான் என் எண்ணத்தை நிரப்பிக்கொண்டு இருக்கிறீர்கள்! வேறு எதற்கும் அங்கே இடமில்லை. அவ்வளவுதான், இதற்குமேல் நீங்கள் எதைச் செய்ய நினைக்கிறீர்களோ அதைச் செய்யுங்கள். அது நல்லதோ கெட்டதோ அது அப்படியே ஆகட்டும்.'

இதற்குமேல் அவள் கண்ணீர் விடவில்லை. வெறும் சிலையா கத்தான் நின்றாள்.

'ஆனால்! நீ நானாகவும் நாமாகவும் ஆகிவிட்ட பிறகு எனக் கென்றொரு தனிமை இல்லைதான். நான் என்ன செய்ய? நிலைமை இப்படியாகிவிட்டதே? என்னுடைய எந்த வார்த்தைகளும் உனக்குச் சமாதானம் அளிக்காது என்பது உண்மைதான் சிறியா! உனக்காக மட்டுமல்ல எனக்காகவும்தான். இப்படி எதையாவது பேசி ஒரு சமாதானத்தைக் காண முயற்சிக்கிறேன்! அதற்காக உண்மையை மறைக்க முடியுமா? காரணத்துக்காகக் காரியத் தைத் தட்டிக் கழிப்பது தற்கொலைக்கு ஒப்பாகாதா? கடமை என்பது மனிதன் தனக்குத்தானே விதித்துக் கொண்ட ஒரு கட்டுப்பாடு. அதை உதறித்தள்ளிவிட்டுப் பெருந்தன்மை பேசுவது இழிந்த குணமாகாதா? உன்னுடைய கணவன் அப்படி ஒரு இழிந்தவனாக இருப்பதை நீ விரும்பமாட்டாயே சிறியா?'

இந்தச் சமயத்தில் சுவரில் தொங்கிக் கொண்டிருந்த புத்த பகவானின் படம் அவள் கண்களுக்குப் பட்டது.

'அதோ பார் சிறியா உன் தெய்வம். இந்த உலகத்துக்கே புதிய புனிதமான பாதையை வகுத்துக் கொடுத்த ஆதர்ச புருசன் போதிசத்துவர். அவர் திடீரென்று ஒரு நாள் தன் இள மனை வியையும் குழந்தையையும் விட்டு ஓடினார்! அந்த நோக் கத்துக்கு, ஓட்டத்துக்கு மாசு கற்பிக்கும் தைரியம் யாருக்காவது உண்டா? நான் சாதாரண மனிதன், ஆசாபாசங்களைத் துறக்கும் வலிமை எனக்கில்லை. எனவே திரும்புகிறேன் என்று உறுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுடன்தான் போகிறேன். இதற்குமேல் என்ன சொல்ல? உன்னையும் என்னையும் அந்த உத்தமன்தான் காப்பாற்ற வேண்டும்! நான் வருகிறேன். என்னை வழியனுப்பு.'

அவன் தோற்பையைக் கையில் எடுத்துக்கொண்டு புறப்பட்டான். அவனைப் பின் தொடர்ந்து அவளும் சென்றாள்.

வெகு நேரமாகக் கருக்கூட்டிக் கொண்ருந்த வானும் பளீர்! என்று ஒரு மின்னலைச் சுழற்றியது.

அவன் தலைவாசல் கடந்து தெருவில் இறங்கி நடந்து கொண் டிருந்தான். கண் பார்வையில் மறையும்வரை அவள் வாசலில் நின்றபடி பார்த்துக் கொண்டிருந்தாள்.

உலகம் நடுங்குமளவுக்கு வானம் இரண்டாகப் பிளப்பதுபோல் ஒரு கிடுகிடுப்பு. பிறகு மழை பெய்தது.

உடல் நனைந்ததால் உணர்வு பெற்ற அவள், உலகம் இருண்டு கிடப்பதைக் கண்டாள். மின்சாரம் பழுதடைந்ததால் அந்தப் பகுதியே இருட்டுக்குள் கிடந்தது. தட்டுத் தடுமாறியபடி தன் அறைக்குள் நுழைந்தாள். சுவரில் தொங்கும் புத்த பகவானின் படத்தைப் பழக்கத்தில் நிதானித்துச் சென்று அதன் முன்னால் தலைவணங்கி நின்றாள்.

அவள் இருளுக்காக அஞ்சவில்லை. அவள் உள்ளம்தான் மெல்ல மெல்ல ஒளி பெற்று வருகிறதே!

இப்பொழுது அவள் கண்களில் கண்ணீர் வடியவில்லை. அதற்குப் பதிலாக அடிவயிற்றிலிருந்து ஒரு பெருமூச்சுத்தான் வெளிவந்தது.

*- 1964*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னிணைப்பு

# பித்தனுடன் ஒரு பேட்டி
## பேட்டி : வெ.மனோ

*(கிழக்கிலங்கை முஸ்லிம் எழுத்தாளர்களின் தந்தையும், மூத்த சிறுகதை எழுத்தாளருமான பித்தனுடன்.....)*

**கேள்வி :** திரு. பித்தன் அவர்களே, ஈழத்தின் மூத்த சிறுகதை எழுத்தாளரான உங்களை இன்றைய தலைமுறையினர் பலருக்குத் தெரியாது. சுருக்கமாகக் கூறுங்கள்.

**பதில்:** மீரா ஷா பெயர், 31.07.1921இல் பிறந்தேன். மட்டக்களப்பு கோட்டைமுனை தான் எனது மண். ஆரம்பக் கல்வி அரசடி வித்தியாலயத்தில், பின்பு ஜே.சி. வரை சென். அன். ரூஸ் அங்கிலிங்கன் பாடசாலையில் படிக்கும்போதே வாசிப்பதில் ஆர்வம். ஆரம்பத்தில் தீனியாக அமைந்தவை ஹிந்தி, வங்காளி, மராத்தி மொழிபெயர்ப்பு நூல்களே. பின்பு இந்தியாவில் மணிக்கொடி, ஆனந்த விகடன் முதலான சஞ்சிகைகள் தமிழ் எழுத்தாளர்களுக்குக் களம் அமைத்தன. தொடர்ந்து ஜெகன் மோகினி, சக்தி, சூறாவளி, மஞ்சரி, வசந்தம் சஞ்சிகைகள் வெளிவந்தன. இவற்றில் வெளியானவற்றுள் புதுமைப் பித்தனின் சிறுகதைகள் என்னை மிகவும் கவர்ந்தன. அவரது புதுக்கோணம் ஏனைய எழுத்தாளர்களிலிருந்து அவரைத் தனிமைப்படுத்திக் காட்டிற்று எனக்கு. இந்திய சஞ்சிகைகளிலும், எழுத்தாளர்களிலும் ஏற்பட்ட மோகம் என்னை இந்திய பக்தனாக்கியது. 1940 ஜனவரியில் இந்தியா சென்றேன் புதுமைப் பித்தனையும் சந்திக்க வாய்ப்புக் கிடைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கேள்வி :** புதுமைப் பித்தன் அவர்களைச் சந்தித்த 'அந்தநாள் ஞாபகத்தை' எங்களுடன் பகிர்ந்து கொள்ளுங்களேன்.

**பதில் :** இந்தியாவில் ஸரார் பிரசுரத்தில் பி.எஸ். ராமையாவைச் சந்தித்தபோது புதுமைப்பித்தனும் இருப்பதாகக் கூறினார். பார்க்க வேண்டுமே என்றேன். பக்கத்தில் படுத்திருந்த ஒருவரிடம் உன்னைப் பார்க்க இலங்கையர் ஒருவர் வந்திருக்கிறார் என்றார் ராமையா. நான் பக்கத்தில் அமர்ந்தேன். "இலங்கைச் சீமையில் இருந்தா? நானும் ராமையாவும் மணி ஓடரைப் பார்த்துக் கொண்டிருக் கிறோம், நான் தான் புதுமைப் பித்தன்" என்றார் சாதாரணமாக.

**கேள்வி :** இந்தியாவிலிருந்து எப்போது இலங்கை திரும்பினீர்கள்?

**பதில் :** *1940* ஆவணி வரைதான் நான் கொண்டு சென்ற பணம் தாக்குப் பிடித்தது. ஒருநாள் மதுரைக் கோட்டைக்கு முன் பிரித் தானிய இராணுவ அணிவகுப்பு நடந்தது. அனேகர் புதினம் பார்த்தனர் நானும் சேர்ந்து கொண்டேன். அணிவகுப்பு முடிந் ததும் ஒரு இராணுவ வீரர் "இராணுவத்தில் சேரவிரும்புவோர் வரலாம்" என்றார். எனக்கும் அழைப்பு சென்றேன். மூன்று மணித்தியால பரிசோதனையின் பின் இராணுவ பொறியியல் பகுதிக்குத் தெரிவாகினேன். ஒன்பது மாத பயிற்சி முடிவில் காஸ்மீர், ஈரான், ஈராக், இந்திய எல்லைகளில் கடமை புரிந்தேன். இந்தியா வுக்குச் சுதந்திரம் கிடைத்தது, இலங்கைக்கு வர எனக்கு வாய்ப்புக் கிடைத்தது வந்தேன்.

**கேள்வி :** எழுத்துத் துறையில் எப்போது ஆர்வம் ஏற்பட்டது?

**பதில் :** ஆரம்பத்தில் நான் வாசகனாகவே இருந்தேன். இராணு வத்தில் எப்படி எதிர்பாராமல் நுழைந்தேனோ அதே போலத்தான் எழுத்துலகிற்கும் இந்தியாவில் இருந்தபோதே எழுதுவதற்கு வாய்ப்புக் கிடைத்தது. 1944இல் இருந்து எழுதத் தொடங்கினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கேள்வி :** உங்களை ஒரு சிறுகதை எழுத்தாளராக எப்போது வாசகர்கட்கு இனம் காட்டினீர்கள்?

பதில்: 1948இல் எனது மதிப்பிற்குரிய எழுத்தாளர் புதுமைப் பித்தன் அமரராகிவிட்டார் எனும் செய்தி என்னை மிகவும் வேதனைக்குட்படுத்தியது. எனது மன உழைச்சலை 'கவிஞனின் தியாகம்' எனும் சிறுகதையாக்கினேன். தினகரன் தத்தெடுத்துக் கொண்டது. புதுமைப் பித்தனின் மீது கொண்ட மோகத்தினால்தான் பித்தன் என எழுத்துலகிற்குப் பெயரை அறிமுகப் படுத்தினேன்.

**கேள்வி :** இதுவரை எத்தனை சிறுகதைகள் எழுதியுள்ளீர்கள், ஏதாவது தொகுப்புக்கள் வெளிவந்துள்ளதா?

**பதில் :** நிறையவே எழுதியுள்ளேன். 1948 – 1982 வரை 42 சிறு கதைகள் தினகரன், வீரகேசரி, சுதந்திரன், சிந்தாமணி முதலான இலங்கைப் பத்திரிகைகளிலும் இந்திய சஞ்சிகைகள் சிலவற்றிலும் பிரசுரமாகி உள்ளன. ஆனால் ஒரு சிறுகதைத் தொகுப்பினைக் கூடத் தரக்கூடியநிலை அண்மைக் காலம்வரை எனக்கு ஏற்படவில்லை.

**கேள்வி :** இன்றைய வாசகர்கட்கு, ஏன் எழுத்தாளருக்கும் கூட உங்களைத் தெரியாததற்குக் காரணம் நீங்கள் தொடர்ந்து எழுதாதது தான் என நினைக்கிறேன். தற்போது நீங்கள் ஏன் சிறுகதைகள் எழுதுவதில்லை?

**பதில் :** ஏனோ எழுதுவதில் எனக்கு ஆர்வம் குறைந்துவிட்டது. சோம்பல் தனமும் எனது மனநிலையும் தான் காரணம். நாட்டின் இன்றைய நிலையும் ஒரு பக்கக் காரணமாக இருக்கலாம்.

**கேள்வி :** நீங்கள் நிறையவே சிறுகதைகள் எழுதி இருக்கிறீர்கள். உங்களைத் தனித்துவப்படுத்தக்கூடிய வகையில் உங்கள் சிறுகதைகளில் ஏதாவது தனி அம்சம் இருந்ததா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பதில்:** தத்துவக் கருத்துக்களுடன் சிறுகதைகளை ஆரம்பிப் பதை வழக்கமாகக் கொண்டிருந்தேன். மனித உணர்வுகளின் வெளிப்பாடுகளை உணர்த்துவதாகவே எனது சிறுகதைகள் அமைந்தன. கதையை ஆரம்பம் முதல் இறுதி வரி வரை மனதுக்குள் எழுதித் தீர்த்த பின்னரே எழுத ஆரம்பிக்கின்றேன்.

**கேள்வி :** எழுத்து மூலம் சமூக மாற்றங்களைக் கொண்டு வரலாம், புரட்சி செய்யலாம் என்கிறார்களே, உங்கள் கருத்து என்ன?

**பதில் :** எழுதுகோல் மந்திரக்கோலல்ல. அவ்வாறு கருதுவது ஒரு மாயை. மந்திரத்தால் மாங்காய் பறிப்பதுபோலத்தான் அது. நாம் கூறுகின்ற கருத்தை மக்கள் ஏற்கத் தயாராக இருக்க வேண்டும். அவர்களின் தவிப்புக்கு ஏற்ப ஆக்கங்களை வழங்குகின்றபோது இக்கருத்து ஏற்புடையதாக அமையலாம்.

**கேள்வி :** உங்களது நீண்டகால சிறுகதை, இலக்கிய அனுபவத்தைக் கொண்டு இன்றைய எழுத்தாளர்களின் சிறுகதைகளில், 'வெளிப் பாட்டு நிலையில்' புதிய போக்குகளை இனம் காண்கிறீர்களா?

**பதில் :** புதிய போக்குகள் உள்ளன. ஆனால், வரவேற்கக் கூடிய தாக இல்லை. இன்றைய எழுத்தாளர்கள் 'கரு' கிடைத்தால் போதும் சிறுகதை எழுதி விடுகிறார்கள். கருத்திலும் கவனம் செலுத்தினால் புதிய எதிர்காலம் உருவாகலாம்.

**கேள்வி :** இறுதியாக ஒரு கேள்வி. மூத்த சிறுகதை எழுத்தாளர் எனும் வகையில் இன்றைய இளம் எழுத்தாளர்கட்கு ஏதாவது கூற விரும்புகிறீர்களா?

**பதில் :** எந்த ஒரு எழுத்தாளரும் இலக்கியத்தின் கரு, உரு, பாஷை சிறப்பாக அமையும் வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும். சிலர் மண்வாசனை எனும் பெயரில் படிப்பவர்கள் புரியாத பாஷையைப் பயன்படுத்துகிறார்கள். படிப்பவர்கள் புரியும் வண்ணம் பாஷை அமைவது இலக்கியத்துக்கு இன்றியமையாதது.

நன்றி : படி, தை '93



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்பதிப்பு கிடைக்காத நிலை உணர்ந்து, பித்தனது எழுத்தாண்மை நன்கு பரவுவதற்கு வழிகோலிய நண்பர் கலாநிதி அஷ்ரஃப் அவர்களை மீண்டுமொருமுறை நெஞ்ச நிறைவோடு பாராட்ட விரும்புகின்றேன். முதன்முதலாகப் பித்தன் பற்றி எழுதும் வாய்ப்பும் (பண்பாடு, மலர் 7, இதழ் 1, 1997, பக். 33 – 37). கொழும்பு உலக இஸ்லாமிய மாநாட்டில் (2002) பித்தன் பற்றி ஆய்வுக் கட்டுரை சமர்ப்பிக்கும் வாய்ப்பும் பெற்றிருந்த எனக்கு இந்நூலின் 'புத்துயிர்ப்பு'த் தனிப்பட்ட விதத்திலே களிபேருவகை தருவது பற்றியும் இறுதியாகப் பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன்.

பித்தனது நூலுருப்பெறாத ஏனைய சிறுகதைகளையும் தேடித்தொகுத்து, அத்தேடல் பகீரதப் பிரயத்தனந்தான், மூன்றாவது பதிப்பையும் நண்பர் வெளிக்கொணரும் உன்னத நாளுக்காக் காத்திருக்கின்றேன்.

**கலாநிதி செ. யோகராசா**
(ஓய்வுநிலைப் பேராசிரியர்)

EXCELLENT PUBLICATION

ISBN : 978-955-3492-10-4
9 789553 492104

cover design - nawas sawfi

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org